
# நான்

உளவியல் சஞ்சிகை

தை – மாசி



5/-

12 வது ஆண்டு

## சிறப்புமலர் – 1986



# ஆசியுரை

உலகில் மேற்கிலோ, கிழக்கிலோ — பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அதிகரித்து வருவது கண்கூடு. அதற்கேற்ப வாசகர் கூட்டமும் வளர்ந்து வருகிறது. நன்மையும் தீமையும் கலந்த நிலை இது.

இவற்றுள் பெரும்பாலானவை தரத்தில் குறைந்ததாகவே இருக்குமென்று கருத இடமுண்டு. இன்றைய வாழ்வில் பரபரப்பு, விறுவிறுப்பு, பாலியல் கதைகள், வயலன்ஸ் (Violence) எங்கும் பலரால் விரும்பப்படுகின்றன. தொலைக்காட்சி இத்தொண்டில் முதலிடம் பெறுகிறது.

தரமான சஞ்சிகைகள் குறைவாக இருந்தபோதும், படித்தவர் உலகம் பெருத்து வருவதால் தமிழிலும், ஆங்கிலத்திலும், முன்னெரு போதும் காணாத கருத்து நிறைந்த சிந்தனைக்குரிய விடயங்கள் கொண்ட பல சஞ்சிகைகள் இன்றைய வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

அந்தப் பட்டியலில் ''நான்'' என்ற உளவியல் மஞ்சரி நிச்சயம் இடம்பெறும் என்பதற்கு குறுகிய காலத்தில் வெளிவந்திருக்கும் பிரசுரங்கள் சான்றாகும்.

அறிவியலில் அருளியலின் அடிப்படை உண்மைகள் மாற்றமடைவதில், உலக மாற்றங்கள் அற்புதம் போலத் தோன்றினாலும், மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு அறநெறி இன்றியமையாததென்பதை இன்றைய விஞ்ஞான உலகில் நன்றாக உணர முடிகிறது.

உலகில் தோன்றிய பல மதத்தலைவர்கள், ஞானிகள் போதித்த உண்மைகள் அழியாவரம் பெற்றவை. அவற்றை இன்றைய உலகில் புரிந்துகொள்ளும் முறையே புதுமையானது.

அந்தப் புதுமைக்கேற்ப மனித விவகாரங்களை ஆழமாகப் புரிய வைக்கும் உளவியல் மஞ்சரி ''நான்'' ஒரு தனித்துவமுடையதென்பது புலனாகின்றது.

மேலெழுந்தவாரியான அரசியல் நோக்குடன் நிறைந்திடும் பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் போலல்லாமல் சிந்திக்கவும் சிரிக்கவும் உதவவல்ல இந்த வெளியீடு ஒரு ஆண்டு மலரின் வடிவம் எடுக்கின்றது.

பல இடர்களுக்குப் பலியாகும் எமது சமூகத்துக்கு இவ்வெளியீடு ஒரு வழிகாட்டும் நூலாகவும், மக்களின் இதயக் குமுறல்களை ஆய்ந்து, அவர்களின் உள்ள வளர்ச்சிக்கு ஒரு மருந்தாகவும் அதேசமயம் அனுமானமாகவும் இருக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

ந. சபாரத்தினம்
நிர்வாக ஆசிரியர்
ஈழநாடு.

ஆசிரியர் :

வின்சென்ற் பற்றிக், O.M.I., B.A.

இணை ஆசிரியர் :

S. டேமியன், O. M. I., M. A.

துணை ஆசிரியர் :

ஜோசப் பாலா
ராஜன் மங்களா
S. நீக்கிலஸ்
S. E. வசந்தருஜ்
P. T. ஜோகராஜ்

அமைப்பு :

யூட் ரவி
T. டோமினிக்
P. சந்திரசேகர்

தொடர்பு :

F. L. N. குருஸ்
A. F. லொசிங்ரன்
F. A. தேவருஜ்

விநியோகம் :

A. அற்புதருஜ்
A. இம்மனுவேல்
L. கிறேஷன்

விளம்பரம் :

A. சத்தியசீலன்
A. வலன்ரைன்
S. J. ஜெயம்

---

முகவரி :

"நான்"
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

## உள்ளே.........


நமது தமிழ் நாடகங்கள்
— கலாநிதி சி. மௌனகுரு

பொறிப் பாவைகள்
— கலாநிதி சபா ஜெயராசா

தாகம்
— N. C. அருள்வரதன்

வேதாளம் சொன்ன புதிய கதை
— செம்பியன் செல்வன்

புதுவீடு
— ஆனந்தி

நேற்று இன்று நாளை
— T. M. அன்ரனிப்பிள்ளை, LL. B.

வேதம் ஓதிய வாசகர்
— சுந்தர்

குழந்தைக்கீடாமோ
— வளவை வளவன்

உளவிளையாடல்கள் பலரகம்
— ரூபன் மரியாம்பிள்ளை

ஒரு விமர்சனம் கதையாகிறது
— ராணிமேரி

நானெனும் தன்மை
— கவிஞர் வே. ஐயாத்துரை

சலனம் சந்தர்ப்பம் சங்கடம்
— ஜனகமகள் சிவஞானம்


---

அடுத்து வெளிவருகிறது!

**உரிமை**

உங்கள் ஆக்கங்களை
10–2–86 க்கு முன்
அனுப்பிவையுங்கள்

# பாதை மாறிய பயணங்களா?

இரைபோடும் மனிதருக்கே, இரையாகும் வெள்ளாட்டைப் போன்று உதவி செய்ய வந்து உபத்திரவம் கொடுக்கின்ற, உரிமையினைப் பாதுகாக்க என்று வந்து உயிரினையும் பறிக்கின்ற மோசடிக்காரரையே இன்றைய சமுதாயம் எதிர்கொள்கிறது. பாதை மாறிய பயணங்கள் தொடர்கின்றன; திசைமாறிய சிந்தனைகள் சந்திக்கின்றன. ஊரை மாற்றுவோம் என்று உலகையே ஏமாற்றுகின்ற மீட்பர்கள் அதிகரிக்கின்றார்கள். எனினும் விடிவெள்ளிகள் மேகங்களினால் மறைக்கப்படினும், அவை ஒளி தருவதுண்டு அல்லவா? அதேபோல ஏற்றிய தீபங்கள் ஒளிர வேண்டும். போற்றிய திருவாய்கள் மகிழவேண்டும். சமதர்ம புதுயுகம் மலரவேண்டும். தியாகங்கள் தளராதிருக்க, நியாயங்கள் நிலைக்க வேண்டும். மாறிவரும் உலகை மாற்றுகின்ற இதயங்கள் மனித மாண்பிற்கு மதிப்பளிக்க வேண்டும்.

இருட்டினில் வாழும் மனிதர்களே வெளிச்சத்திற்கு வாருங்கள். உருண்டோடும் உலகில் திரண்டோடும் மக்கள் தினந்தோறும் வெருண்டோடுவதா? அல்லற்பட்டு அகதிகளாய் அழுவதற்கென்று பிறந்தோம் நாம்? இல்லவே இல்லை. அழுகையும், சிரிப்பும் அனைவருக்கும் உரியது. ஆனால், உளப் பக்குவத்தோடு உவகை பொங்கும் வாழ்வை, அமைப்பதே புத்தாண்டு விடுக்கும் சவாலாகும்.

இதயவானில், உதயமான புதிய மேகம், மலரும் இந்த அனைத்துலக அமைதி ஆண்டில் இனிய மழையாய் மகிழ்வைப் பொழிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

எழுத்துலக ஏணிப் படிகளான எழுத்தாள இதயங்களுக்கும்
வாசக இதயக்கனிகளுக்கும் இனிய புத்தாண்டு — தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!

— ஆசிரியர்

# நமது தமிழ் நாடகங்கள்

சில குறிப்புகள்

— கலாநிதி. சி. மௌனகுரு

மேடையை மையமாகக் கொண்டு நடிகர், பார்வையாளர் சங்கமிப்பில் நிகழும் கலை வடிவமே நாடகமாகும். மனிதன் தனது தோற்றக் கால ஆரம்பத்தில் இன்றைன்றைப் போலச் செய்ய ஆரம்பித்த காலத்திலே செய்வோரும் (நடிகர்) செய்யுமிடமும் (மேடை) பார்ப்போரும் (பார்வையாளரும்) உருவாகி விட்டனர். நாடகத்திற்கான விதைகளும் அன்றே தூவப்பட்டுவிட்டன. சிறப்பாகப் புராதனக் காலச் சமயச் சடங்குகளில் நாடகத்தின் வித்தைக் காணலாம். சமூகம் வளர்ச்சியடைய சமயச் சடங்கினின்று இந்நாடகத் தன்மை தனியாகப் பிரிந்து பொழுதுபோக்கிற்குரிய அம்சமாக மாறியது. பின்னல் இது சரித்திரப்போக்கிற்கு எற்ப பல்வேறு மாற்றங்களைக் கண்டது. இடத்துக்கு இடம், சமூகத்திற்குச் சமூகம், காலத்துக்குக் காலம் நாடகம் மாறுபட்டு வளர்ந்தது. இன்று நாடகம் ஒரு சிறப்பான கலை வடிவமாக மக்கள் மத்தியில் வளர்ச்சி பெற்றுள்ளது. பொதுமக்கள் அனைவரும் ஒருங்கு கூடி இருந்து இரசிக்கும் கலையாகவும் பாரம்பரியமான கலையாகவும் இது காணப்படுகிறது.

உலகிலே காணப்படும் நாடக மரபை மூன்று வகையாகப் பிரிப்பர்.

1. ஐரோப்பிய நாடக மரபு
2. ஆசிய நாடக மரபு
3. ஆபிரிக்க நாடக மரபு

இம்மூன்று மரபுகளும் தத்தமக்கெனத் தனித்துவங்களையுடையவை. ஒன்றுபோல் ஒன்றிராது. இதனல் நாடகம் என்பது பல வகையின என்பதும் சமூகம், இடம் என்பவற்றிற்கு எற்ப வேறுபடும் என்பதும் புலனுகின்றது.

நாடகம் ஆடும் அல்லது நடத்தும் இடம் அரங்கம் எனப்படும். நாம் பெரும்பாலும் அறிந்த அரங்கு ஒருபக்கப் பார்வையாளரைக் கொண்டிருப்பதும் மூன்று பக்கம் அடைக்கப்பட்டதுமான படச் சட்டமேடை (Picture Framing Stage) அரங்கே. இவற்றைவிட வட்டமான அரங்கு, முக்கோண அரங்கு, வெட்டவெளி அரங்கு என அரங்கு பல வகையின. இவ்வரங்கு காலத்துக்குக் காலம் வளர்ந்து வந்துள்ளது, இதற்கென்று ஒரு வர

லாறுண்டு. நாடகத்தின் தன்மைக்கும், சமூக வளர்ச்சிக்கும் ஏற்பவே அரங்கமும் மாறி வந்திருக்கிறது. இதற்கும் ஒரு வரலாறுண்டு.

மேடையிலே நாடகத்தை அளிக்கும் முறையும் காலத்துக்குக் காலம் மாறி வந்துள்ளது. புராதன காலத்தில் கிரேக்க நாட்டிலே நாடகம் நடத்திய முறைமை வேறு; இடைக்காலத்தில் இங்கிலாந்திலே சேக்ஸ்பியர் நாடகம் அளித்த நாடக முறைமை வேறு; நவீன யுகத்திலே பேர்ட்டல் பிரச்ட் ஐரோப்பாவில் நாடகம் அளித்த முறைமை வேறு இதற்கும் ஒரு வரலாறுண்டு.

நாடகத்தை ஆக்கித்தருவோர் நாடக எழுத்தாளராவர். உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியர்களை நாமறிவோம். சோபோக்கிளிஸ். சேக்ஸ்பியர், இப்சன், பேட்டல் பிரச்ட் ஆகியோர் நாடக வரலாற்றில் திருப்புமுனை ஆசிரியர்கள் இவர்களின் நாடகங்கள், இலக்கியமாகும் தகுதியுமுடையவை. இதனால் நாடக இலக்கியத்திற்கும் ஒரு வரலாறுண்டு.

நடிப்பு முறையும் காலத்துக்குக்காலம் மாறி வந்திருக்கிறது. அதற்கும் ஓர் வரலாறுண்டு. இவ்வாறு அரங்கு, அளிக்கும் முறை, நாடக இலக்கியம், நடிப்புமுறை என்பன பற்றிய வரலாறு நாடக வரலாறாகும். இத்தகைய வரலாற்றையும், நாடக வகைகளையும் நாடகம் ஆடுபவர்களும் நாடக இரசிகர்களும் அறிவது மிக அவசியம். இவற்றினால் தரமான நாடகங்களைத் தயாரிக்கமுடிவதுடன் தரமானவற்றை இனம்கண்டு இரசிக்கவும் முடியும்.

ஒரு கலையை இரசிக்க அக்கலை பற்றிய ஞானமும் ஓரளவு அவசியம். ஞானமில்லாதவன்கூட ஒரு கலையின் கவர்ச்சி காரணமாகக் கவரப்பட முடியும். கலையின் பண்பு அது. எனினும் அக்கலைபற்றிய அடிப்படை அறிவு அக்கலையை நன்றாக இரசித்து அதில் ஒன்ற வழி சமைக்கும். உதாரணமாக பரத நாட்டியத்தை எடுத்துக்கொள்வோம். அறியாதோர் கூட பரத அசைவுகளை இரசிக்க முடியும்; எனினும் முத்திரைகளின் அர்த்தமும் தாளஞானமும், கதைகளின் உள்ளடக்கமும், நடன வரலாறும் தெரிந்த ஒருவன் இன்னும் கூடுதலாக அதனுடன் ஒன்ற முடியுமல்லவா? நாடகமும் இவ்வாறே. நாடக ஞானம் வாய்த்த ஒரு இரசிகனால்தான் ஒரு 'தரமான' நாடகத்தை ஒன்றி ரசிக்க முடியும்.

மேற்கு நாடுகளில் நாடகம் ஒரு அறிவுத் துறையாக வளர்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சிகள் அவற்றிலே நடத்தப்படுகின்றன. பல்கலைக் கழகங்களிலே ஆராய்வுக்கும், ஆக்கத்திற்குமுரிய பாடமாக அது உள்ளது. இவற்றால் அங்கு 'நாடகம்' வளர வாய்ப்பு இருக்கிறது. நமது நாட்டிலே அந்நிலை இல்லை. 'நாடகம் ஆடுவோர் வேலை மினக்கெட்டவர்' என்ற அபிப்பிராயம் நிலவும் எமது சமூக அமைப்பில் எவ்வாறு நாடகம் வளர முடி

யும்? இந்த எண்ணத்தையும் மீறி நாடகம் போடுவோர் நாடகம் பற்றிய ஞானமின்மையால் நாடகம் அல்லாத கேலிக்கூத்துக்களை மேடையிடுவத ஞல் மக்களின் அபிப்பிராயம் மேலும் வலிமையுடையதாகி விடுகிறது.

நாடகம் ஆடுபவர்கட்கும், பார்வையாளர்கட்கும் மேடை பற்றிய ஞானம் சிறிதாவது வேண்டும். நாடகத்திக்கு மிகப் பிரதானமானது மேடை. மேடை என்ற ஒரு குறிப்பிட்ட அளவுக் கியைந்த இடத்திலேதான் நாடகம் நிகழ்த்திக் காட்டப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட அளவைப் பாவிப்பதிலேதான் நெறியாளனின், நடிகனின் திறமை தங்கியுள்ளது. ஒரு மேடையின் இன்ன இன்ன இடங்களிலே பாத்திரங்களை நிறுத்துவதன் மூலம் இன்ன இன்ன அபிப்பிராயங்களைப் பார்வையாளர்களிடம் உருவாக்கலாம் என ஆராய்ந்து எழுதியுள்ளனர். நாடக அறிஞர் திட்டமிட்டு நாடக ஞானம் மிக்க நெறியாளன் அமைக்கும் காட்சிகளை அவனது கற்பனைக் கிணங்கக் கண்டு பார்வையாளர் இரசிக்க இம்மேடை ஞானம் அவசியம். ஆனல் இம்மேடை ஞானம் இல்லாதோர் வெறும் கண்காட்சி காண்போராகவே அமைந்து விடுகிருர்கள்,

பத்திரிகைகளில் நாடக விமர்சனம் எழுதும் பலருக்கு இந்த ஞானம் இருப்பதாகத் தெரியவில்லை. நாடகத்தின் கருவைச் சரி பிழை என்று வாதிக்கும் அளவு நெறியாளனின் கற்பனைத் திறனைக் கண்டு பிடிப்பவர்களாக இவர்கள் இல்லை. பேனை எடுத்தவன் எல்லாம் எழுத்தாளனுகி விடும் நமது சமூகத்தின் அவலங்களில் இது ஒன்று.

நமது பொதுமக்களிற் பலர் நாடகத்தைச் சினிமாவுடன் ஒப்பிடுபவர்களாகவும், சினிமாவைப் போல நாடகம் இருக்கவேண்டும் என்று எண்ணுபவர்களாகவுமேயுள்ளனர். நாடகத்தில் நடிக்கும் நடிகர்கள் கூடச் சினிமா நடிகர் போல வசனம் பேசவும் நடிக்கவும் முயல்கிருர்கள். இரசிகர்களும் அதனையே எதிர்பார்க்கிருர்கள். திரைப்படம் தமிழ் நாட்டுக்கு வந்தபின்னர் பாரம்பரியமாக நடத்தப்பட்டு வந்த நாடகத்தை வெகுவாகத் தாக்கிவிட்டது.

நாடகம் என்பதே ஒரு பொய்மைதான். குறிக்கப்பட்ட நீள அகலம் கொண்ட மேடையில் ஒரு வீட்டையோ, ஒரு மாளிகையையோ நாடகத்திற் காட்டும்போது அதனை நாம் பொய்யெனத் தெரிந்தும் உண்மையென ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தி அதனை இரசிக்கிருேம். நமக்கு முன்னுல் நமக்குத் தெரிந்த ஒருவர் வேடமிட்டு நடிக்கிருர் என்ற பொய்மையை உணர்ந்தே நாடகத்தை இரசிக்கிருேம். இவ்வண்ணம் நாடகம் அடிப்படையில் பொய்மையான தொன்ருகும். எனவே நாடகத்தில் கற்பனையே மிகப் பிரதானமானதாகும். நெறியாளன் மேடையிற் காட்டுகின்ற காட்சியை அல்லது குறியீட்டை அல்லது அசைவுகளை வைத்துக்கொண்டு பார்வையாளர் தனக்குத் தெரிந்த சூழலில் கற்பனையை விரித்துக்கொள்ளலாம்.

படகு வலிப்பதைப் போன்ற சில அசைவுகள் பார்வையாளனுக்கு அவனுக்குப் பரிச்சயமான ஒரு கடலையும், படகையும் ஞாபகப்படுத்தும். இங்கு நடிகனின் நெறியாளனின் கற்பனையும் பார்வையாளரின் கற்பனையும் கலந்து உயரிய ஒரு நிலைக்குச் செல்லுகின்றன. இந்தக் கற்பனை வளம் சினிமாவிற்குக் கிடையாது. அங்கு நெறியாளன் தான் கற்பனை செய்தபடி காட்சிகளைப் படமாக்குகிறன். அவன் விரும்பிய ஒரு வீட்டை அப்படியே காட்டுகிறன். இதனால் பார்வையாளன் கற்பனை பண்ண முடியாதவனகி நெறியாளன் தருகின்ற காட்சியை மாத்திரம் சினிமாவிற் காணுகிறன். இந்த உண்மையை விளங்காது நமது நாடகாசிரியர்களிற் பலர் சினிமாவைப் போல தத்ரூபமான காட்சியை அமைக்க மேடையில் மிகவும் சிரமப்படுகிறர்கள். ஒரு வீட்டின் அறையைக் காட்டவேண்டுமானல் ஒரு வீட்டிலுள்ள அத்தனை பொருட்களையும் ஒன்றும் விடாமல் மேடையிற் கொண்டு வருகிறர்கள். இதனல் காட்சி பிந்தி, கற்பனை போய்விடுகிறது. இது சினிமாவைப் போல செய்யவேண்டுமென்று எண்ணியதன் விளைவு மனோஹர் போன்ற நடிகர்கள் நான்கு ஐந்து லொறிகள் நிறைய நாடகச் சாமான்கள் ஏற்றும் அவலம் இதனலேயே வந்தது. இம்முறை 18, 19ம் நூற்றுண்டுகளில் ஐரோப்பாவிலும் இருநதது. ஆனல் நவீன நாடக நெறியாளர்கள் இந்த நிலைமையை மாற்றிப் பல்வேறு உத்திகளினுலும் கற்பனையை உருவாக்கி காட்சியை மேடையிலே அல்லாமல் பார்வையாளனின் மூளைக்குள் உருவாக்கும் கற்பனை வளர்ச்சியை மேற்கு நாடுகளிற் செய்துவிட்டனர். ஆனல் நாம்தான் இன்னும் அதிலே தொங்கிக்கொண்டிருக்கிறேம்.

நமது பாரம்பரியக் கருத்துக்களை எடுத்துப்பாருங்கள். அங்கு காட்சிகள் அதிகம் இல்லாமல் வெறும் பாடல்கள் மூலமாகவே போர்க்களமும், நாடும் கடலும் பார்வையாளர் மூளைக்குள் உருவாக்கப்படவில்லையா? இவ்வண்ணம் கற்பனை செய்யும் பண்பு நாடகத்திற்குரிய தனிஅம்சம்.

நாடகம் பார்வையாளருடன் நடிகன் நேரடித் தொடர்புகொள்ளும் ஒரு சாதனமாகும். இதனல் இதன் வலிமை சினிமாவைவிட அதிகமானதாகும். உயிருள்ள ஒருவரைப் பார்க்கிறேம் என்ற உணர்வு, சினிமாவைவிட நாடகத்துடன் பார்வையாளரை அதிகம் ஈடுபடுத்தும். உணர்வு பூர்வமாக ஒன்றி ரசிக்கும் அதே வேளையில் நாம் பார்ப்பது 'பொய்' என்பது, கண்முன்னேயே தெரிவதனல் ஒன்றுதலும் விடுபடுதலுமாகிய நிலை நாடகத்தைப் பார்ப்போருக்குண்டு. ஒன்றுதல் — உணர்ச்சி, விடுபடுதல் அல்லது சிந்தித்தல் — அறிவு. எனவே நாடகம் அறிவும் உணச்சியும் நிறைந்த ஒன்று. எனவேதான் நாடகத்தின் மூலம் உணர்ச்சிவசப்படுத்தி அறிவும் ஊட்ட முடிகிறது. இம்முறையைப் பிரக்ஞை பூர்வமாக நாடகத்திற் கையாண்டவர். நாடக மேதை பேர்ட்டல் பிரச்ட். ஆனல் சினிமா அப்படியன்று. விடுபடுகின்ற நிலை சினிமாவில் இல்லை. உணர்வு ஒன்றிய நிலை

தான் அங்குண்டு. மக்களை மயக்கி சிந்திக்காமல் உணர்வு நிலைக்குள் மூன்று மணி நேரம் வைத்திருக்கும் பண்பு சினிமாவுக்குண்டு.

இந்த அடிப்படை வேறுபாடுகளை விட இன்னும் பல வேறுபாடுகளும் சினிமாவுக்கும், நாடகத்திற்குமிடையேயுண்டு.

கற்பனை பண்ணுவதும், உணர்வுடன் கலந்துவிடாமல் தூர விலகி இரசிப்பதுவும் நாடகத்தின் மிகப் பிரதான அம்சங்களாகும். இந்த உண்மையை மறந்த — நாடக ஞானமில்லாத நமது நெறியாளர் பலர், பார்வையாளரைக் கற்பனை பண்ணவிடாது தாமே முழுவதையும் கூறிவிடுவதும் அல்லது காட்டி விடுவதும், நாடகத்தை சினிமாபோல உணர்ச்சிமயமாக்கிவிடுவதும் போன்ற அனர்த்தங்கள் நமது நாடக உலகில் இன்று நிகழ்கின்றன.

ஆனால் இந்த நாடகத் தன்மைகள் அண்மைக்காலமாக புகழ் பெற்ற உலகச் சினிமா நெறியாளர்களால் தமது சினிமாவிற் புகுத்தப்பட்டும் வருகின்றன. ஜப்பானிய நெறியாளரும், உலகப்புகழ் பெற்றவருமான அக்கிரா குரோஸோவா இதற்கு உதாரணம்.

இதுவவரை நாடகம் பற்றிய சில குறிப்புகள் கூறப்பட்டன. நமது நாடக நெறியாளரும், நடிகர்களும், நாடக வரலாறு, நடிப்பு வரலாறு, அரங்க வரலாறு, நாடக ஆசிரியர் வரலாறு, மேடைப் பயன்பாடு, நாடகத்தின் அடிப்படைத் தத்துவங்கள் ஆகியவற்றை மேலும் மேலும் அறிவதன் மூலம் தரமான நாடகங்களை நாம் தயாரிக்க முடியும். ''நாடகம்'' ஓர் அற்புதமான கருவி, அழகான கருவி. கருவியின் நுட்பங்கள் அறிந்தவர்கள்தான் அதனைக் காத்திரமாகவும், தாக்கமாகவும் பிரயோசிக்கப்பட முடியும். கருவியின் நுட்பமறியாதோர் கையிற் பட்டதனால் கருவிப் பிரயோகம் காத்திரமானதாயில்லை. நாம் பார்க்கின்ற நமது நாடகங்களிற் பல நாடகங்களாகவும் இல்லை.

---

# நன்றிகள்!

12 வது ஆண்டு வளர்ச்சியில் பங்கேற்று வளர்த்து ஊக்குவித்த எழுத்தாள வாசக, விளம்பரதார அபிமானிகளை நன்றியோடு நினைவு கூருவதோடு அட்டைப் படத்தினை அழகுற வரைந்து அளித்த யாழூர் அழகன், அச்சகப் பணியில் அயராது ஒத்துழைத்த அன்பு நெஞ்சங்கட்கும், விளம்பரத் தொகுப்பாளர் ஜோ. எக்கட்டன் அவர்களுக்கும் வளர்ச்சியின் மகிழ்ச்சியில் பிறக்கும் புத்தாண்டில் நன்றி நிறை வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

---

# உடல் உள நோய்கள்

— S. டேமியன், O. M. I., M. A.
( உளவளத் துணையாளர் )

இன்று நாம் ஒரு இறுக்கம், நெருக்கம், குழப்பம், ஏக்கம் நிறைந்த சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏன், ஒரு ஏக்கத்தில் தோய்ந்த யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று சொன்னால் கூட மிகையாகாது, காரணம் எதிலும் விரைவு, எங்கும் விரைவு. புதியபுதிய கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சிகள், நடையுடை பாவனைகள் நாளுக்குநாள் மாறி விரைந்த வேகத்தில் போய்க்கொண்டிருக்கின்றன. இந்த விரைவை, வேகத்தை சமாளித்து, அதற்கு ஈடுகொடுத்து தாக்குப் பிடிக்கத் தெரியாத மனிதன் தவிக்கின்றான். இது அன்றாடம் நாம் காணும் நிலை. இந்த அவலநிலை அளவுக்கு மீறும்போது ஒரு சிலர் அதற்குத் தாக்குப்பிடித்து சுலபமாக சமாளிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். வேறுசிலர் இந்த விரைவுக்கு விடைகாணாது அதனாலே தாக்கப்பட்டுத் தவிக்கின்றனர். இந்த தாக்கம் அல்லது அமுக்கம் உடல் உள நோயை காலப்போக்கில் ஒருவனில் ஏர்படுத்தி விடுகின்றது, உதாரணமாக ஒரு முதலாளிக்கும் தொழிலாளிக்கும் தொழில் விஷயத்தில் நெருக்கிடை என்று வைத்துக்கொள்வோம். இந்த நெருக்கிடை சுமுகமான முறையில் தீர்க்கப்படாவிடில் நீண்டுகொண்டே போகும். காலப்போக்கில் இந்த நெருக்கிடைக்குக் காரணமானவர் ஏற்பட்ட நெருக்கிடையை சமாளிக்க முடியாவிடில் உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டு விடுகின்றார்

## உடல், உள நோய் - அது என்ன?

வாழ்வில் ஏற்பட்ட ஒரு அமுக்கத்தின் விளைவாக தொடர்ச்சியாக ஒருவர் மனக்கிளர்ச்சியோடு, இறுக்கம், நெருக்கம் நிறைந்த வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்தால், அவரின் உடலின் பல மாறுதல்கள் ஏற்படக் காணலாம். இந்த உடலில் ஏற்பட்ட மாறுதல்கள் காலக்கிரமத்தில் ஒருவரைத் தாக்கி அவரில் கோளாறுகளை ஏர்படுத்தி விடுகின்றன. அத்தோடு இந்தக் கோளாறுகளுக்கு ஏற்ற அறிகுறிகளை நம் உடலில் ஏற்படக் காணலாம். இந்தக் கோளாறுகளின் விளைவுதான் உடல் உள நோயாகும். அதாவது அடிப்படையில் கோளாறுகள் உடலில் தோன்றினாலும் அதற்குக் காரணம் உளமாகும்.

## காரணங்கள்

உடல் உள நோய்க்கு முதற்காரணம் ஒருவரில் காணப்படும் ஒருவித அமுக்கம் நிறைந்த வாழ்வாகும். எதிலும் அவருக்கு பதட்டம், பயப்பாடு, எக்கம். திடீரென ஒரு நோயாளி ''நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று கிடந்து கட்டைபோல் அமுக்கிக்கொண்டிருக்கிறது. அடிக்கடி வலி ஏற்படுகின்றது'' என்று சொல்லி உளவளத் துணையாளரை நாடி வருகின்றான். நன்கு சிறந்த துணையாளர் ஒருசில கேள்விகளைக் கேட்டுவிட்டு அவரின் இந்த நிலைக்கு காரணத்தைக் கண்டுபிடித்துவிடுவார். உண்மையிலே உடலிலே நோய் இருந்தாலும் அந்த நோயாளியிடம் இருந்து கிடைத்த விபரங்களின்படி, அவருடைய உளமே அந்த நோய்க்கு அடிப்படைக் காரணம் என்பதை துணையாளர் கண்டுபிடித்துவிடுவார். இதைவிட கோபம், விரக்தி, வெறுப்பு, எதிர்ப்பு, எதிர்பார்ப்பு இவைகளும் காரணிகளாகக் கருதப்படுகின்றன.

## ஏற்படும் முக்கிய நோய்கள்

- அஸ்மா
- குடற்புண்
- இரத்த அமுக்கம்
- தலை வலி
- தோல் வியாதி
- மூட்டுவாதம்.

## சிகிச்சை முறை

**உடல் ரீதியில்:** நோயாளியின் உடல் நிலையையும் அவர் வெளிப்படுத்தும் அறிகுறிகளையும் நன்கு கவனித்து ஆராய்தல் வேண்டும். உதாரணமாக நோயாளி எக்கம், பதட்டம், விறைப்பு, பேராவல் கொண்டவராக இருக்கின்றாரா என்பதை அவரது உடற்பாங்கான அசைவுகளின் மூலம் அவதானித்தல்.

**உளவியல் ரீதியில்:**

- நோயாளியின் கதையை காது கொடுத்து அக்கறையோடு கவனமாகக் கேட்கவேண்டும்.
- நோயாளிக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட கோளாறை அறிந்து, அதன் காரணங்களை அவரின் வாழ்க்கை முறைகள், நடத்தைகளை அறிந்துகொள்ளல்.
- நோயாளியின் மனப் பயங்களை மாற்ற முயற்சி எடுத்தல்.
- போதுமான அளவு ஓய்வு, பொழுதுபோக்குகளில் நோயாளியை ஈடுபடச் செய்தல்,
- காரண காரியமற்ற பயங்களை விடுவித்து அன்றாட வாழ்வைத் திருப்தியோடும், மனநிறைவோடும் வாழச் செய்தல்.

மூடக் கொள்கைகள் மறைய
"நான்" ஆற்றும் பணி வளர வாழ்த்துக்கள்!

FOR YOUR NEXT
CATERING SERVICES
AND
FUNCTIONS

★

YARL BEACH INNS

139, BEACH ROAD,
JAFFNA.

12 வது ஆண்டு மலர் சிறக்க வாழ்த்துக்கள் பல

எல்லாவிதமான சாய்ப்புச் சாமான்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற

★

SRI SAI STORES

MODEL MARKET,
JAFFNA.

# பொறிப் பாவைகள்

— கலாநிதி, சபா ஜெயராஜா

மனிதவுழைப்பின் நுண்மை செறிந்த வளர்ச்சி "பொறிப்பாவைகள்" எனப்படும் இயந்திர மனிதர்களை உருவாக்கி வருகின்றது. உளவியலடிப்படையிலே பொறிப்பாவைகளை விளங்கிக்கொள்ளுதல் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் அவசியம் என்றுங் கூறவேண்டியுள்ளது. ஏனெனிற் பொறிப்பாவைகள் பற்றிய தவறான விளக்கங்களும், பயமும் ஏற்கனவே உலகடங்கிலும் பரப்பப்பட்டுவிட்டன.

எளிமையான பொறிமுறை இயக்கம் தொடக்கம், சிக்கலான கணனிகளின் இயக்கங்கள் வரையிலான பரந்த செயற்பாட்டு வீச்சுக்களிலே பொறிப்பாவைகள் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றைய நிலையில் உலகில் மொத்தம் 25000 பொறிப்பாவைகள் பயன்படுத்தப்படுகின்றன. 1990ஆம் ஆண்டளவில் உலகிலுள்ள பொறிப்பாவைகளின் எண்ணிக்கை 115,000 ஆக அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (ஐசக் அசிமோவ் 1985.)

பொறிப்பாவைகளைக் கதாநாயகர்களாக்கி எழுதப் பெற்ற விஞ்ஞானப் புனைகதைகளிற் கட்டியெழுப்பப் பெற்ற கற்பனைகளே அதிக பயத்தை மாணவர்களிடத்து வளர்த்துள்ளது. பார்க்கவும், பேசவும், எழுதவும், சிந்திக்கவும் வல்லதாகப் புனைகதைகளிலே சிருஷ்டிக்கப்படும் பொறிப்பாவைகள் மேலும் ஒருபடி முன்னேறிச் சென்று மனிதர்களை "ஆட்டிப் படைப்பதாக"க் காட்டப் பெறுதலே அச்சத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது. சமூகவியல் தழுவிய தெளிவு குன்றிய புனைகதையாக்கங்களே இவ்வகை அநர்த்தங்களை வளர்த்துள்ளன.

நடைமுறையிற் பொறிப் பாவைகள் மனிதருக்கு உதவிசெய்யவும், மனிதச் செயற்பாடுகளை வினைத்திறன் படுத்தவும் கண்டுபிடிக்கப்பட்ட "மூலதனப் பொருள்"களாகவே யுள்ளன. அவை மனிதரை மீறிய திறன் கொண்டவையென்றோ, மனிதருக்குக் கற்பிக்கக் கூடியவையென்றோ கூறிவிட முடியாது.

மனித மூளை புரதத்தினாலும் நியூக்ளிக் அமிலங்களினாலும் ஆக்கப் பெற்றது. 3·5 ஆயிரம் மில்லியன் ஆண்டுகளாக நிகழ்ந்த படிமலர்ச்சியின் பெறுபேறாக மனித மூளை யுருவாக்கப்பட்டுள்ளது. சூழலுக் கெதிரான போராட்டமும் இயற்கைத் தெரிவும் மனித மூளையுருவாக்கத்துடன் இணைந்து வந்துள்ளன.

மனித மூளை பத்தாயிரம் மில்லியன் நியூரோன்களையும், அவற்றுக்கு அனுசரணையாக அமைந்த நூறாயிரம் மில்லியன் துணைக்கலன்களையுங் கொண்டுள்ளது. ஒவ்வொரு நியூற்றோனும் நூறு தொடக்கம் இலட்சம் வரையிலான மிகவும் சிக்கல் பொருந்திய செயற்பாடுகளுடன் இணைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் அவை செயற்படுத்தப் படவும் நிறுத்தப் படவும் வல்ல கட்டுப்பாடுகளையுங் கொண்டுள்ளன. இவ்வாறாக பல்வகைத் தொகுப்புக் கொண்ட மனித மூளை எளிதில் விளக்கப்பெறும் தரமுடையதன்று. இவை யாவற்றுக்கும் மேலாக கற்பனைத் திறனும் படைப்பாற்றலும் தீர்ப்புக் கூறும் திறனும் மிக்க செயற்பாடுகளையும் மனித மூளை கொண்டுள்ளது. அளவிட முடியாப் பேராற்றல் கொண்ட மனித மூளைக்குப் பிரதியீடாக எத்தகைய பொறிப் பாவையும் அமைந்துவிட முடியாது.

இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு கேள்வி எழுகின்றது. வேகமான கணிப்பீடுகள் மனிதரிலும் பார்க்கக் கணனிகளினால் மேற்கொள்ளப் படுகின்றனவே, அவ்வாறாயின் மனித மூளை பின்தங்கி விட்டதா என்றும் வினவலாம். மனித மூளை அதன் வளர்ச்சிக் கிரமத்திலே தொழிற் பிரிவுகளையும் சிறக்குமியல்புகளையும் வளர்த்துத் தனது செயற்பாடுகள் சிலவற்றை மூலதனப் பொருள்கள் சிலவற்றின்மீது ஒப்படைத்து வந்துள்ளது. உதாரணமாக அறிவுக்களஞ்சியம் முழுவதையும் மூளையிலே மனனஞ் செய்து வைக்காது ''புத்தகம்'' என்ற அமைப்பு வடிவிலே அவற்றைத் தேக்கி வைத்துள்ளது. அவ்வாறே கணித முறைமைகளை வேகமாகச் செய்வதற்குக் கணனிகளைக் கண்டுபிடித்துள்ளது. மனிதரால் இயற்றப்படக்கூடிய ஒரு செயலையே கணனிகள் செய்கின்றன.

இவ்வகையிலே பொறிப் பாவைகள் சிறக்குமியல்புகளின் அடிப்படையில் மனிதவாற்றலை வினைத்திறன்படுத்த உதவி வருகின்றன. ஆபத்து நிறைந்த சமுத்திர ஆழங்களிலும், சுரங்கங்களிலும், அண்ட வெளிகளிலும், அணுக்கதிர் வீசும் சூழலிலும், நஞ்சுத்தன்மை பொருந்திய இரசாயனப் பொருள்களிடையேயும் பொறிப் பாவைகளை இயக்கி வைப்பதால் மனிதருக்குரிய ஆபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றன.

மனித மூளை சலிப்படைவதைத் தவிர்ப்பதற்கும், ஒரே வேலையினைச் சதா திரும்பத் திரும்பச் செய்வதால் நிகழும் அலுப்பைத் தவிர்ப்பதற்கும் பொறிப் பாவைகளைப் பயன்படுத்தலாம். ஒரே வகையான ஒட்டு வேலையைச் செய்தல், பொருத்து வேலையைச் செய்தல், இடம் மாற்றி வைத்தல், அடுக்குதல் என்றவாறு கற்பனை கலக்காத தொழிற் பாடுகளைப் புரிவதற்கு மனிதரிலும் பார்க்கப் பொறிப்பாவைகளே மிகவும் பொருத்தமானவை.

தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணனி பொருத்தப்பட்ட பொறிப் பாவைகள் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களைப் புரியும் திறன் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. நுணுக்கமான யந்திரங்களைப் பொருத்

துவதில் இன்று பொறிப் பாவைகளைப் பயன்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருப்பொருள்களிலிருந்தே எமது சிந்தனைகள் பிறக்கின்றன. சூழலும் வாழ்நிலையும் எமது சிந்தனைகளுக்குத் தொட்டில்களாக விளங்குகின்றன என்ற உண்மை பொறிப் பாவைகளை விளங்கிக் கொள்வதற்குரிய அடிநிலைகளாகின்றன.

பொறிப்பாவைகளின் பயன்பாடு மனிதர்களைச் சோம்பேறிகளாக்கிவிடுமென்றோ அல்லது பலரது வேலையை ஒரு பொறிப்பாவை செய்ய முற்படுவதாற் பொருளாதார நெருக்கிடைகள் தோன்றுமென்றோ கூறுதல் சமூகத்தின் அடிக்கட்டுமானத்துடன் இணைத்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

“இயந்திர மயமாக்கல்” சமூக வாழ்வில் முன்னேற்றமான தன்மைகளையே பிறப்பித்து வந்துள்ளது. பொறிப்பாவைகளின் பயன்பாடும் மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு வழியமைத்துக் கொடுக்கும். ஆனாலும் சமூக நன்மைகளை அனைத்து மக்களும் பகிர்ந்து கொள்ளக்கூடிய அடியாதாரம் உறுதி செய்யப்படுமிடத்து மட்டுமே பொறிப்பாவைகளிலிருந்து உளவியல் நன்மைகளைப் பெறமுடியும்.

நகர வளர்ச்சியும் பொருளாதார நெருக்கிடைகளும், சமனற்ற செல்வப் பகிர்வும், மனிதர்களை இயந்திரமாக்கி அந்நியப்படவைக்கும் நிலையில் பொறிப்பாவைகளும் சமூக அநர்த்தங்களையே வருவிக்கும். சமூக எதிர்மறைப் பண்புகள் முறியடிக்கப்படுமிடத்துப் பொறிப் பாவைகள் பயன் மிக்குடையதாகும்.



## சிந்தனைத் துளிகள்

- எதனையும் எதிர்பார்த்துப் பெறுவதை விட எதிர்பாராமல் கிடைப்பதில் மகிழ்ச்சி அதிகம்.
- வாழ்க்கை என்பது போராட்டம் அதில் வாழ்வதும் வீழ்வதும் உன் கையில்தான்.
- சொல்லியபின் சிந்திப்பதைவிட சொல்லமுன் சிந்தி.
- ஊரை ஏமாற்றுவதாக எண்ணி உன்னை நீ ஏமாற்றாதே.
- மற்றவனை மனிதனாக மதிக்கும்போதுதான் நீயும் மனிதனாகிறாய்,

"நான்'' தரும் இன்பம்
நாம் பெறும் சொர்க்கம்.

- FROZEN FOODS
- TIN FOODS
- MILK FOODS
- EGGS ( Whole Sale and Retail )
- IMPORTLD APPLES AND ORANGES

AND

MANY MORE TO SELECT

Visit :

# VARANY MISSION FARM SALES CENTRE

No. 145, MODEL MARKET,
HOSPITAL ROAD,
JAFFNA.

THE SHOP THAT TOPS IN TOWN.

"ஆணவம் அகன்று ஆளுமை வளர
நான் காட்டும் வழியில் புதுயுகம் மலரட்டும்."

WITH BEST COMPLIMENTS

FROM

★ ★ ★

# SUPPIAH & SONS

Wine Merchants and Foreign Liquor Dealers

MAIN STREET,

JAFFNA.



# புத்தாண்டில் புதுவாழ்க்கை அமைக்க....

— எட்வின் வசந்தருஜ் —

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. எப்படியும் வாழலாம் என்பதில் அல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்கின்ற ஒரு வரையறைக்குள், கட்டுக்கோப்புக்குள் வாழும்போது தான் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமானது நிறைவேறுகின்றது; பூர்த்தியாகின்றது. மனித வாழ்க்கையில் மிக முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் எங்ஙனம் வாழ்வது என்பதேயாகும். வாழ்க்கை எம்மில் சிலருக்கு இனிப்பாகவும், பலருக்குக் கசப்பாகவும் இருப்பதற்குக் காரணம் நாம் எமது வாழ்க்கையைச் சீர் செய்த, செம்மைப்படுத்திக்கொண்ட முறையே என்று கூறினால் அது பொய்யாகாது.

மனித வாழ்க்கை என்பது இன்பங்களும், துன்பங்களும், வேதனைகளும், வெற்றிகளும், தோல்விகளும் சேர்ந்ததேயாகும். நாம் இவற்றைச் சமமாக ஏற்றுக்கொள்ளும் தன்மையில்தான் வாழ்க்கை முழுவதும் தங்கியுள்ளது. நாம் எமது மகிழ்ச்சியான வேளைகளில் அளவுக்கு மிஞ்சி மகிழ்ந்து இன்புறும், துன்ப காலங்களில் கூடுதலாக மனவேதனை அடைந்தும் மனவிரக்தியடையவும் கூடாது. இவ்வாறு நாம் வாழ முற்படும்போது உடல் உள நோய்களுக்கு உள்ளாகின்றோம். எனவே நாம் இவ்விரண்டையும் சரிசமமாக ஏற்று வாழ்க்கையில் இன்னும் முன்னேறுவதற்கான கருவிகளாக இவற்றைப் பயன்படுத்தவேண்டும்.

வாழ்வின் சோதனைகளையும் நாம் திடமனதோடு வெற்றிகொள்கையில், எமது வாழ்க்கையில் உள்ள முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிந்தவர்களாக, முதிர்ச்சியடைந்தவர்களாக, வாழ்வில் ஒருபடி உயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றோம். நாம் எம் வாழ்வில் எதிர்கொள்ளும் வெற்றிகளை எந்த மனநிலையுடன் ஏற்கின்றோமோ அதே மனநிலையுடன் தோல்விகளையும் ஏற்க வேண்டும். அதே நேரத்தில் நாம் எமது வாழ்நாள் முழுவதுமே தோல்வியைத் தழுவி எம்மிடத்தில் தாழ்வு மனத்தை உருவாக்கி, வாழ்வில் மன விரக்தி அடையாமல், எமது வாழ்வில் வரும் தோல்விகளை நிலையானவை என நினைக்காமல் தோல்விக்கு மேல்வரும் தோல்விகளை வெற்றியை அடைவதற்குரிய ஏணிப் படிகளாக உபயோகித்து வாழ்க்கையில் முன்னுக்கு வர முயலவேண்டும்.

நாம் எமது வாழ்வை வளம் படுத்த குறிக்கோள் அத்தியாவசிய மாகின்றது. மனித வாழ்விற்கு குறிக்கோள் என்பது உயிர் மூச்சுப் போன்றது. விளக்குக்கு தூண்டு கோல் இல்லாவிடில் அணைந்து விடுவது போன்று குறிக்கோள் இல்லாத வாழ்வும் இருண்டுவிடும். குறிக்கோளை நாம் எமது ஆற்றலுக்கும் அறிவுக்கும் உகந்த முறையில் தெரிவு செய்ய வேண்டும். நாம் தெரிவு செய்யும் குறிக்கோளை அடைய எமக்குச் சில தீர்மானங்கள் திட்டங்கள், ஒழுங்குகள் தேவைப் படுகின்றன. இச் செயற்பாடுகளே நாம் எமது குறிக்கோளை சரியான பாதையில் சென்றடைவதற்குரிய மைல்கற்களாகும். இக்கற்கள் எமது வாழ்வில் எந்தக் கஷ்டங்கள் துன்பங்கள் ஏற்படினும் அகற்ற முடியாதவையாக, அசைக்க முடியாதவையாக இருக்க வேண்டும்.

காலத்தின் வளர்ச்சிக்கேற்ப மனித வாழ்வு வளர்ச்சி பெறவேண்டும். வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானல் காலம் என்ற குதிரையை கடிவாளமிட்டுப் பிடித்து, உயிரூட்டும் பாதையில் விரைந்து செல்லவேண்டும் வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது முயற்சியின் அடிப்படையிலே உருவானது. நாம் முயற்சி செய்து கொண்டே இருப்பதுதான் வாழ்க்கையாக அமைகின்றது. எமது வளர்ச்சியின் அளவு நாம் எடுக்கும் முயற்சியின் அளவிலே தங்கி இருக்கின்றது. நாம் எம்மை அறிந்தும் அறியாமலும் ஒவ்வொரு கணப் பொழுதிலும் ஒவ்வொரு புதிய மனிதர்களையே காண்கின்றோம். எனவே மலரப் போகும் இப் புத்தாண்டில் எமது வாழ்வை நாம் வளம்படுத்த எம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடங்களையும் பயனுள்ள வகையில் செயல் படுத்துவோம்.

---

# கலாச்சார நிகழ்ச்சியில் "நான்" பணி

1985 ஆம் ஆண்டிற்கான நாடகப் போட்டியை மறைக்கல்வி நடுநிலையமும், நான் மஞ்சரியினரும் இணைந்து நடத்தினர்.

85 ஆம் ஆண்டுக்கான பரிசுபெற்றோர் :

1 வது பரிசு : பராஷையூர் புனித அந்தோனியார் ஆலய குழுவினரின் ''ஜீவ ஜலம்''

2 ஆது பரிசு : யாழ் பேராலயத்தினரின் ''ஊமையின் கனவுகள்''

3 வது பரிசு : யாழ் பேராலயத்தினரின் ''ஒளியைத் தேடி''

சிறந்த நடிகர் : சமாரியப் பெண் (டெல்சியா செயோன்)
யேசு (கசில்டா அல்போன்சஸ்)
கிழவன் (கிங்ஸ்லி செபஸ்தியாம்பிள்ளை)

கலைஞர்களின் திறமைக்கு எமது பாராட்டுகள்.

86 ஆம் ஆண்டுக்கான நாடகப் போட்டி பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும். விபரங்களை அறிய 28-2-86 க்கு முன் தொடர்புகொள்ளவும்,

---

உள்ளச் சோர்வை போக்க
உன் ஆளுமையை வளர்க்க
உன் திறமையை வெளிக் கொணர
"நான்" காட்டும் வழியில்
நாம் செல்வோம்.

WITH BEST COMPLIMENTS

FROM

# VINOBHA TRADE CENTRE

48, CLOCK TOWER ROAD,
JAFFNA.

T'Phone : 23665

# வேதாளம் சொன்ன புதிய கதை

செம்பியன் செல்வன்

தன் முயற்சியில் கொஞ்சமும் மனம் தளராத விக்கிரமாதித்தன் முருங்கை மரத்திலேறி தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் சடலத்தை வெட்டித் தோளில் போட்டவாறு கீழிறங்கினன்.

''விடாமுயற்சியில் கொஞ்சம் உளநலமும் குன்றாத விக்கிரமாதித்த மகாராஜனே!... உனக்குக் களைப்புக் கொஞ்சமும் தெரியாதிருக்க ஒரு கதை சொல்கிறேன் கேள்...

இவ்வளவு காலமும் பழைய கதைகளையே கூறி வந்த நான் கலி காலத்தில் எப்பவோ நடக்கப் போகிற கதையைக் கூறுகிறேன்...

சனநாயகம்... சனநாயகம் உனக்குச் சொல்லி விளங்கவைக்க முடியாத ஆட்சிமுறையில் ஒரு நாடு இயங்கிக்கொண்டிருந்தது. அதில் ஒரு மன்னருக்குப் பதிலாக ஒரு பிரதம மந்திரியிருப்பார். அவருக்குக் கீழ் ஏராளமான மந்திரிகள் இருப்பர். முடியாட்சியில் ஒரு மன்னர் என்றால் சனநாயகத்தில் மந்திரிகள் என்ற பெயரில் பல மன்னர்கள் இருப்பார்கள். ஒரு மன்னருக்குப் பதிலாக பல மந்திரிகள் நாட்டைச் சுரண்ட வகுத்த அரசியல் முறையே சனநாயகம். இந்த முறையில் இவர்களையும் தின்று வாயில் போடக்கூடியவர்கள் உயர்தர நிர்வாக அதிகாரிகள். அப்படிப்பட்ட ஒரு சாதுர்யமிக்க அதிகாரியின் ஒரு சிறு நடத்தையைக் கூறுகிறேன் கேட்பாயாக.

அந்த நாட்டின் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு இறக்குமதியைக் குறைக்கவும் மந்திரிகள் முனைந்தனர்.

இறக்குமதியைக் குறைத்தனர். உள்ளூர் உற்பத்திகள் விலைபோவதற்குப் பதிலாக இறக்குமதிப் பொருட்களின் விலைகள் ஏறின. கறுப்புச் சந்தை விரிந்தது. மக்கள் மந்திரிகளிடம் ஓடினர்.

''விலையேற்றத்தைக் குறையுங்கள். கட்டுப்பாட்டு விலை போடுங்கள்!'' — வியாபாரிகளும், மந்திரிகளும் ஒன்றுகூடிச் சிரித்து மகிழ்ந்தனர்.

கட்டுப்பாட்டு விலையினால், முன்பு விலை குறைவாக விற்கப்பட்ட பொருட்களின் விலை உயர்ந்தது. விலையுயர்ந்த தரமான பொருட்கள் பதுங்கிக் கொண்டன.

வியாபாரிகளும் மந்திரிகளும் பணத்தால் வீங்கலாயினர்.

பிறநாட்டிலிருந்து இப்பொருட்களைக் கடத்துபவர்கள் அதிகரித்தனர். நாட்டில் கடத்தற் பொருட்களே விற்பனைச் சந்தையில் நிறைந்தன.

மக்கள் மீண்டும் அலறினர்.

''உள்ளூர் உற்பத்தி அற்றுப் போகிறதே. விதேசியப்பற்று மிகுகிறதே!''

கடத்தல்காரர்கள் கறுப்புச் சந்தை வலையில் பதுங்கி மந்திரிகளைப் போட்டுக் கொண்டனர். கண்துடைப்புக்காக மந்திரிசபை கூடி ஆலோசனை செய்தது.

கடத்தல்காரர்களை அதிகாரிகள் பிடிக்காமலிருக்கக் காரணம் கடத்தல் காரர்களின் கைலஞ்சமே. கடத்தல் காரர்களைப் பிடிப்பவர்களுக்குக் கவர்ச்சியான வெகுமதியளித்தால் நிச்சயம் கடத்தல்காரர்கள் பிடிபடுவார்கள் என தீர்மானித்தனர்.

''கைப்பற்றப்படும் பொருட்களின் பெறுமதியில் அரைப்பங்கினை கடத்தல்காரரைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு வழங்கப்படும்!'' என்று அறிவிக்கப்பட்டது.

ஆயினும் கள்ளக்கடத்தல் முன்னைவிடவும் அதிகரித்தது. மந்திரிகள் மட்டுமல்லாமல் அதிகாரிகளும் கோடிகோடியாகப் பணம் திரட்டிச் செல்வந்தரானுர்கள்.

நிர்வாக அதிகாரிகள் கடத்தல் பொருட்களைக் கைப்பற்றுவார்கள். கடத்தல்காரர்கள் பெரியதொரு தொகையுடன் அதிகாரிகளைச் சந்திப்பர். அதிகாரி முதலில் சட்டம், ஒழுங்கு, முன்னேற்றம் என்று ஏதேதோ பேசப்பேச லஞ்சத் தொகை அதிகரிக்கும். அதிகாரி கைப்பற்றிய பொருளின் அரைப்பங்கை மட்டும் திருப்பிக் கொடுப்பான். கடத்தல்காரர் அரைப்பங்கு பொருளுக்கு தாமளித்த லஞ்சத்தொகை, மீதிப்பங்குப் பெறுமானம் எல்லாவற்றையும் சேர்த்து மக்களிடம் விற்பர். அதிகாரி கைப்பற்றிய மீதிப்பொருளை அரசாங்கத்திடம் ஒப்படைக்க, அதில் பாதி வருமானம் அவனுக்குக் கிடைக்க, கடத்தலில் முக்கால்பங்கு அதிகாரியை வந்தடையும்.

ஆகவே புத்தி மிகக் கொண்ட மன்னனே! உண்மையில் கடத்தல் காரர்கள் யார்?

கடத்தல்காரர்களா? மந்திரிகளா? நிர்வாக அதிகாரிகளா?... சரியான பதில் நீ சொல்லாவிட்டால் உன் மண்டை வெடித்துச் சிதறிப் போகும்'' — என்றது வேதாளம்.

அதற்கு விக்கிரமாதித்தன் — ''வேதாளமே நான் இதற்குப் பதில் கூறப் போவதில்லை. ஏனென்றால் நான் இப்போது காடாறு மாதத்தில் இருக்கிறேன். இதற்குப் பதில் சொன்னால் இப்போது ஆளும் மந்திரி பட்டி என்னை என்ன செய்வானோ?... மீண்டும் எனக்கு நாடு கிடைக்குமோ தெரியாது'' — என்றான்.

''இதுவும் ஒரு நல்ல விடைதான்'' என்று விக்கிரமாதித்தனின் மௌனம் கலைந்ததால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

அறிவியலாளரின் அரிய கருத்தை
உளவியலாளரின் உள்ளப் படைப்பை
பலவித பாங்காய் எம்மிடம் புகட்டும்
உளவியல் மஞ்சரி "நான்" பணி வளர

வாழ்த்துகின்றோம்

★ ★ ★

ஒரே கூரையின் கீழ்
உங்களுக்குத் தேவையான

சகலவித சாய்ப்புச் சாமான்கள்

இல்லத்தரசிகளின் வீட்டிற்குத் தேவையான

பலசரக்குத் தேவைகளை நொடிப்பொழுதில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்

ரவீந்திரா ஸ்ரோர்ஸ்

35[103] பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மறந்துவிடாதீர்கள்!

*யாழ் மாநகர எல்லைக்குள் இலவச விநியோகம்*
*உங்கள் வாசற்படியில்,*

# நீ வளர.....

பி. ஜேக்கப் யோகரூஜ்

வாழ்க்கை என்பது குறுகியது. அதனை இனிமையாக்குவது அவரவர் செயற்பாட்டில் தங்கியுள்ளது. மேற்படி வாழ்வது அவர்களது கடமை ஆயினும் இந்த இயந்திர உலகில் பூரண இன்பம் காண்பது இலகுவான தல்ல. வாழ்வில் ஒரே மனம் மீண்டும், மீண்டும் ஒரே பிரச்சனையைச் சந்திக்கும்போது மனதில் ஓர் எதிர்மாறுன வைராக்கியம் ஏற்படுகின்றது. இதனுல் எதற்கெடுத்தாலும் எதிர்ப்புகளே அவர்களது மனதிலிருந்து வெளிவரும் பதிலாகும். மேலும் அவர்களிடம் கோரப்படும் எந்தவிதமான விடயங்களுக்கும் எதிரான செயல்களே நிகழும்.

வாழ்க்கையே போராட்டமாக அமைந்துவிட்டபோது ஓர் இளைஞன் தனது உட்காரணிகளின் தாக்கத்திினின்று வெற்றிபெற்று வெளியுல குடன் தொடர்புகொண்டு அவற்றுடன் இரண்டறக் கலந்து வாழ்வை இனிமையானதாகக் கழிக்கையில் அறிவற்ற, கீழ்த்தரமான எண்ணங்க ளையுடைய ஒரு சில சமுதாயத்தினர் அந்த இளம் நெஞ்சத்தில் சாதி, மதம், குடும்ப அந்தஸ்து ஆகிய வேண்டத்தகாத சக்திகளை அவன்மீது திணித்து சமூகத்தின்மீது அவனை வெறுப்படையச் செய்கிருர்கள்.

சமூகத்திலிருந்து அவர்களைப் பிரிக்கவும், அழிக்கவும் முனைகையில் அவர்களின் மனதில் துன்பமான மனப்போராட்டம் உருவாகும். தனக்கே என்று ஒரு பொருளுக்கோ அல்லது பதவிக்கோ பெருமையுடன் போட்டி போடும் தரம் கெட்ட சமூகத்தில் தனது உணர்வுகளையும் ஆசாபாசங்களை யும் அதாவது ஒருவருக்கு வேண்டிய சில முக்கிய தேவைகளைக் கூட இழந்து நிற்கும் நிலைமையும் ஏற்படுகிறது.

இப்படியான துர்ப்பாக்கிய நிலை இளம் சமூகத்தினருக்கு ஏற்படக் கூடாது. அவர்களது மனம் சீரான பாதையில் இடபட்டுச் செயற்பட வேண்டும். இளைஞர் மனது நல்ல உரம் இட்டு நீர்ப்பாய்ச்சி வளர்க்கும் ரோஜா மலர்களைப்போல் நல்ல உறுதியான எண்ணங்களும் பரிணமிக்க வேண்டும். இளம் உள்ளங்களின் மனவளர்ச்சியில்தான் இந்த சமுதா யத்தின் நல்ல வளர்ச்சி தங்கியுள்ளது. ஒன்றேடொன்று பின்னிப் பிணைந்து நமது வளர்ச்சியும் நமது சமுதாயத்தின் வளர்ச்சியும் காணப் படுகிறது. இவற்றில் ஒன்றின் பராமரிப்பு பாதிக்கப்படுமாயின் ஏனைய வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

எனவே ''மரம் வளர மண் வேண்டும்
மீன் வளர நீர் வேண்டும்
இளைஞர் வளர சமூகம் வேண்டும்
நான் வளர நீ வேண்டும்
நீ வளர ''நான்'' வேண்டும்''.

# தாகம்

N. C. அருள்வரதன்

" அன்பே "
உன்னைப் பலர்
மறந்துவிட்டார்கள்
அ:தனுல்தான்
எத்தனை சோக நாடகங்கள்
அவற்றை
மேடையேற்றியவர்கள்
இறக்க முடியாமல்
தொடர்கிருர்களே
இருந்தும் சிலர்
உன்னைப்பற்றி
இடை இடையே
பேசிக்கொள்கிருர்களே
இவர்கள் பேசும்போது
சாத்தான்கள்
வேதமோதுவது போன்றிருக்கிறது
ஆனுல்
வாழப்படாத உன்னை
வெறும்
வார்த்தைகளோடு
முடித்துவிடுகிருர்களே!
உண்மையில்
உனக்கும் அவர்களுக்கும்
எந்தவித
உறவுமில்லை என்பதில்
எத்தனை உண்மை உண்டு.
தர்ம தேவதையே
நீ தலைகவிழ்ந்து
விம்மி அழும் குரல்
எத்தனை
பலமாக ஒலிக்கிறது.
இங்கு
அதர்மங்களின்
எக்காள
வெறி முழக்கங்கள்
வானேங்கி
நிற்கின்றபோது
நியாயங்களே
உங்கள் அவலக்குரல்கள்
எவருக்குமே
கேட்கப்போவதில்லை.
" உண்மையே "
உனக்கு இங்கு
எத்தனை அவமானங்கள்
" உனக்கும் "
சில **பெரியவர்**களுக்கும்
உறவிலே எந்தவித
தொடர்புமில்லையே!
அவர்கள்தான்
பொய்யிலே ஊறி
பொய்யோடு இணைந்து
உறவாடுகின்றபோது
உன் வேதனை புரிகின்றது.
ஆனுலும்
நீ இங்கு
அனுதை என்று மட்டும்
எண்ணுதே!
உன்னை உலகிற்கு
எடுத்துக்காட்ட
இன்னும் சிலர்
உயிரோடு இருக்கிருர்கள்.
அவர்களும்
அழிந்து ஒழிந்து பட்டாலும்
நீ
காற்ருக மாறி
அவர்களின்
கல்லறைகளிலே வீசித்திரி
அங்கும்
அந்த ஆன்மாக்கள்
உன்னேடு
உறவாடிக்கொண்டே இருக்கும்.

# புது வீடு

அங்கம் 1

ஆனந்தி

டவுனிலிருந்து எழெட்டு மைல் தொலைவில் இருக்கின்ற அந்தச் சிறு கிராமம், எரிந்து கருகிப்போன ஒரு பழைய நகரத்தின் புதிய வார்ப்புப் போலவே கண்களை எரித்தது. புறப் பார்வைக்குக் கம்பீரமாக இருந்தாலும், மனசுக்கு ஏதோ கறை இருப்பது போல் தோன்றியது.

இப்போதெல்லாம், டவுனிலிருந்து யாருமே அங்கு வருவதில்லை. அப்படி வரவேண்டிய அவசியம் இனிமேல் என்ன இருக்கின்றது? இந்தக் கிராமத்தின், பழம் பெருமைகளையெல்லாம் கறைபடுத்த வந்த இது ஒரு புதிய களுவாயே. கலிதான் மிஞ்சியது என்று சொன்னால் கோபம் வரும்.

ஆனால் என்ன செய்ய? இந்தச் சாபத்துக்கு விதிவிலக்காய், ஓர் ஆத்ம பரிகாரம் தேடிச் சாந்தி பெற நினைப்பது போல், உண்மையை நினைத்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது. இது எங்கோ சிலருக்கு மட்டுமே பொருந்தும்.

துளசிக்கு அப்படி நினைப்பதே ஆறுதலைத் தந்தது. அவள் கொஞ்ச நாளாய் பாதிக்கனவிலே விழித்துக்கொண்டிருக்கிற மாதிரி அறை ஜன்னலருகே நின்றவாறு, அகல விரிந்த கண்களை நிமிர்த்தி, ஓயாமல் வானத்தையே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்பா சுந்தரம் கூப்பிட்டாலும் காதில் விழாது. அவர் எண்பது வயதுக் கிழவன். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து வருவது போல் ஒரு பிரமையில் அவர்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டேயிருந்தது. அவளுக்கு ஒரு இலக்குமில்லாமல், அப்படிப் பயணம் செய்வதே சுகமாக இருந்தது.

அப்பாவோடு, அவள் வாழ்க்கை முடிந்தாலும் முடிந்து போய் விடலாம், அல்லது தனியாகவே வாழ்ந்து ஒரு யுகம் கழிந்துபோன பெருமையில், காலம் ஒரு சவாலாகவே நின்று அவளிடம் தோற்றுப் போகும்.

சுந்தரம் அந்தக் காலத்தை எண்ணிக்கொண்டு காத்திருக்கிறார். அவளுக்கோ, மனசு மரத்துப்போய், வாழ்வில் ஒன்றுமே மிஞ்சாமல், காலம் ஒரு சவாலாகவே, அறிவில் விழிப்பும் மனதில் ஒளிஞ்சும் சத்தியப் பிழம்புமாக, அவன் இருட்டில் நடக்கிறன்.

அவளுக்கு வயது முப்பத்தெட்டாகிறது. இருபது வயதிலே, கல்யாண மாகிப் புருஷனேடு போனவள், திடீரென்று ஒரு நாள், அவனைப் பிரிந்து, ஒற்றை மரமாகத் திரும்பி வந்தாள். அவள் தவறு செய்யமாட்டாள், என்று முடிவானபடியாலே, இதிலே தர்க்கம், குறுக்கு விசாரணை, நீதிக் காக அழுதல் எதுவுமில்லாமல் சுந்தரம் அவளைத் தம்முடனேயே ஆயுள் பூராவும் வைத்துக் காப்பாற்றவேண்டுமென்ற பிரதிக்ஞையோடு அவளை மனதால் அங்கீகரித்து மனப்பூர்வமாகவே ஏற்றுக்கொண்டார். அவளும் புருஷனிடம் திரும்பிப் போவதை விரும்பாமல் அவர் நிழலிலேயே தங்கி வாழத்தொடங்கிப் பத்து வருடத்துக்கு மேலாகிறது.

சுந்தரம் வருமானவரி இலாகாவில் உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். நிறையப் பென்ஷன் வருகிறது. துளசியைத் தவிர வேறு பிள்ளைகள் கிடையாது. மனைவி இளம் வயதிலேயே காலமாகிவிட்டாள். துளசியை அவர் சிரமமில்லாமல் வளர்ப்பதற்கு உதவியாக இருந்தவள் அவருடைய தாயாரே. அவளும் இப்போது இல்லை. மறைந்துபோன உறவு களினிடையே ஒற்றை மரமாகப் பிரிந்து நிற்கும் துளசியின் உறவு மாத் திரம் எப்படி ஒரு காவியமாகும்.

ஒரு நாள் அவள் ஏதோ கடிதத்தை எடுத்துக்கொண்டு அவர் படுத் திருக்கும் அந்த அறைக்கு வந்தாள். சாத்திக் கிடந்த ஜன்னலைத் திறந்துவிட்டு அவர் பக்கம் திரும்பினாள்.

கட்டில் சட்டத்தோடு சாய்ந்து தலையணையிலே நிலை குந்திப் படுத்த வாறு முகட்டை வெறித்த அவரின் திரை விழுந்த கண்களினூடே உயிரைத் தேடிப் பார்க்கிற பிரமையில் அவன் நின்றிருந்தான். பிறகு மெல்லமெல்ல அந்த உருவம் மறைந்து அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஜன்னலுக்கு வெளியே, நிழல் மங்கிய காட்சித் தொடரில், உயிர் அற்று வரும் தன்னுடைய கிராமத்தின் வெறுமையைக் கண்ட பிறகு, அவனுக்கு எல்லாமே மறந்து போயிற்று.

அப்போது கண்ணை விழித்துப் பார்த்த சுந்தரம் கேட்டார்.

''என்ன துளசி, வெளிநாட்டுக் கடிதமா?... விசாகன் போட்டிருக் கிறன்...?''

''தெரியவில்லையப்பா! இது லண்டனில் இருந்து வந்திருக்கு. யார் கடிதம் என்று புரியவில்லை. எதுக்கும் பிரித்துப் பார்க்கிறேனே''

அவள் கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போதே, உணர்ச்சி நடுங்கியது. அதை அவசரமாகப் படித்து முடித்துவிட்டுக் குழம்பிச் சிவந்த முகத்தை நிமிர்த்திக் கண்கள் கலங்க, அவரைப் பார்த்துக் கொண்டே ஓட்டாமல், அவள் அடித்தொண்டை வரண்டு பேசுகிற போது, குரல் கம்மியது.

''அப்பா! உங்கள் கதையைக் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கு. வாசகனும், வாசகன்! அவன் என் மனதிலிருந்து மறைந்துபோய் எவ்வளவு நாளாகிறது. அவன் எங்களையெல்லாம் நினைத்துக்கொண்டு இனிமேல் ஏன் வரப் போகிறான்...? அப்படி ஒரு நம்பிக்கை இருக்கிறதா உங்களுக்கு? அதை மறந்து விடுங்கோ...! இந்த வேடிக்யைப் பார்த்தீர்களா...? அவன் அண்ணு நரேந்திரனைத் தெரியுமல்லே! அவர்தான் லண்டனிலிருந்து உங்களை வாழ்த்தி எழுதியிருக்கிறார். நீங்கள் நூறு வயதுக்கு மேல் இருக்க வேண்டுமென்று, அவர் பிரார்த்திக்கிறாராம். இந்த எண்பதாவது வயதிலே, இப்படியொரு ஆசீர்வாதத்துக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே.''

அவர் புன்னகை செய்தார்.

'என்ன இருந்தாலும் நரேன் நல்லபிள்ளைதான். என்னை நினைத்துக் கடிதம் போட்டிருக்கிறானே''.

''அது மட்டுமா, அவர் தன் குடும்பத்தோடு திடீரென்று ஒருநாளைக்கு இங்கு வரப்போகிறாராம். வந்து உங்களைப் போட்டோ எடுத்துக்கொண்டு திரும்பிப் போவாராம். இதெல்லாம் பெரிய காரியமில்லையா? அவர்கள் அந்தஸ்து என்ன? அவரின் காலடி பட்டாலே எங்களுக்கு சாபவிமோசனமாகிவிடுமில்லே, அவர் எப்ப வருவாரோ என்று இருக்கு நான் விழி ஆடாமல் வாசலையே பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்னப்பா மௌனமாகி விட்டீர்கள். இன்னும் கேளுங்கோ, இருபது வருடங்களுக்கு முன் எங்களைச் சுற்றித் துருவ நட்சத்திரம் மாதிரி ஜொலித்துக்கொண்டிருந்த விசாகன் கதை தெரியுமா? நரேணண்ணு அவனைப்பற்றித்தான் கவலையாக எழுதியிருக்கிறார். அவன் நாடோடி மாதிரித் தேசம் தேசமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறானும். அவன் எங்கே இருக்கிறானென்று தெரியவில்லையாம்.''

''சரி இனிமேல் எதுவும் நமக்குக்குத் தெரியவேண்டாம். துளசி காலம் எவ்வளவு கொடூரமாக மாறிவிட்டது பார்த்தாயா?''

''இல்லையப்பா! இதுக்குக் காலம் என்று நினைத்துக்கொள்கிறதே ஒரு சமாதானப் போர்வையாய் இருக்கு. வெறும் காலம் மனிதனை விழுங்குமா? நான் ஏன், இப்படி வைர மரமாக நின்றுகொண்டிருக்கிறேன்? வாழ்க்கை லட்சியத்திலே குலையாமல் தேர்விடப் பழகினவனுக்கு பாதை சறுக்குமா என்ன? போங்கோவப்பா இதுகளையெல்லாம் மறந்து விட்டுத் தூங்கப் பாருங்கோ நான் போறன்.''

''நில் துளசி, கெட்ட கனவை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கு.''

''அப்பா! கெட்ட கனவுதான் சதா உறுத்திக்கொண்டேயிருக்கு நீங்கள் விழித்துக்கொண்டிருந்தபோதே எரிந்த ஜடமாய் நான் திரும்பி வந்தது உண்மையில்லையா? இந்த உண்மையே ஒரு கெட்ட கனவு என்று நினைத்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கு இதுக்காக ஒரு பொய்யைத் தேடிக்கொண்டு போய்ச் சாகமுடியுமா? எது முக்கியம்? சொல்லுங்கப்பா.''

இதைச் சொல்லிக்கொண்டிருந்தவள், பொங்கிவரும் அழுகையை அடக்கமாட்டாமல், முகத்தைத் திருப்பிக்கொண்டு, அவருக்குத் தெரியாமல் கண்ணீர் வடித்தாள். அவளின் கன்னமெல்லாம் வழிந்தோடிய அந்தக் கண்ணீர் மனதில் ஏற்பட்ட கறையைக் கழுவுவது போல், மார்பிலே விழுந்து தெறித்தது.

அவள் வெகுநேரமாய் அப்படியே தன்னை மறந்து நின்றிருந்தாள். நரேந்திரனின் கடிதம் இன்னும் கையில் உறுத்திக்கொண்டிருந்தது. அவள் இதை எதிர்பார்க்கவேயில்லை. ஒரு யுகம் கழித்து அது வந்து சேர்ந்திருக்கிறது. இரு துருவங்களாக, ஒட்டாமல் பிரிந்துபோன உறவை நினைத்துப் பெருமைப்பட என்ன இருக்கிறது என்றுதான் அவள் நினைத்தாள்.

அப்பா வேறு விதமாக நினைக்கலாம். அவரின் திருப்திக்காகப் பதில் எழுதிப் போடவேண்டியதுதான் என்று யோசித்தவாறு, அவள் அந்தக் கடிதத்தை மேசையிலே பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, அப்பாவிடம் திரும்பினாள்.

அவர் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தார். பகல் முழுவதும் பேப்பர் வாசித்துக்கொண்டு இருப்பார். இரவு எழு மணிக்கே தூக்கம் வந்துவிடும். யாரும் சத்தம் போட்டு அவரை எழுப்பக்கூடாது.

துளசியைத் தேடிக்கொண்டு, நிதமும் நிறையப்பேர் வருகிறார்கள். அவளுக்கு எல்லோரிடமும் சிரத்தையான அன்பு உண்டு. பொதுவாகப் பழகிக்கொண்டிருப்பதால், அவளுடைய உறவு, ஊரை இழுத்துக்கொண்

டிருக்கிறது. குழந்தைகள் ஓயாமல் வருவர். அவர்களை இழுத்து வைத்துக்கொண்டு, அவள் கதை சொல்லிக்கொண்டிருப்பாள், பகலில் ஒரே அமளிதான்.

இரவு ஆறுமணிக்குப் பிறகு. பூட்டிய கதவுகளுடன், அவளின் வீடு ஒரு தவச்சாலை மாதிரி இருக்கிறது. அப்பா தூங்கியதும், அவள் நிச்சிந்தையாக, வாசல் தூணருகே சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, விழித்துக்கொண்டிருப்பாள். அவள் படுப்பதற்குப் பத்து மணிக்கு மேலாகும்.

நிலவு தெரிய ஆரம்பித்துவிட்டது. அப்பா சாப்பிட்டுவிட்டுத் தூங்கத் தொடங்கிவிட்டார். அவரின் குறட்டை ஒலி காற்றில் கரைந்துபோகிறது.

அவள் அதைக் கேட்டவாறே, மனமில்லாமல் ஏதோ சாப்பிடுவதாகப் பெயர் பண்ணிவிட்டுத் தனது அறைக்குத் திரும்பினாள் அவளை அக்கறையாகக் கவனித்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்? எப்படிப் பார்த்தாலும் அவள் ஒரு திக்கற்ற பேதைதான். சுந்தரமும் எத்தனை நாளைக்கு இருக்கப்போகிறார். தந்தை போனால் ஒரு பெண்ணுக்குப் புருஷன் நிழல். அதுவும் மிஞ்சினால் பிள்ளை பார்த்துக்கொள்வான்.

''நான் யாருடைய நிழலில் தங்கப் போறன். என்ன இருந்தாலும் நான் ஒரு பெண்தானே. இதை மறந்துவிட்டு உணர்ச்சியை விளையாட்டாக நினைத்துக்கொண்டு வாழ்க்கை லட்சியத்தைக் கடைப்பிடிக்கிறதாய், சொல்லிக்கொள்வதிலே என்ன லாபமிருக்கு? என்னை உரிய வழியில் பவுத்திர உணர்வோடு காப்பாற்றிக்கொள்ள அதுமட்டும் போதுமா? அப்ப நான் ஏன் தனியாய் இருக்கிறேன்? அவரை நம்பிக்கொண்டு நான் சேற்றிலே புதைந்தது போதும் டைவோர்ஸ் எடுத்துவிட்டு வேறு கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கலாமே ஏன் முடியவில்லை?

அவள் இதையெல்லாம் மிகவும் கவலையோடு யோசித்து மனம் குழம்பியவாறே இரவு வெகுநேரம் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். தலைக்கு மேலே...... தூரத்தில் நிலா பிரகாசமாக எழுந்துகொண்டிருந்தது. வாழ்க்கையின் வஞ்சகக் கறையே படியாமல், குணங்களாலும் அன்பைக் காட்டுகிற வழிபாடுகளாலும் உயர்ந்து நிற்கிற மனிதர்களைப்போல கறையே படியாத அதன் முகம் வானத்துத் திரையிலே பிரகாசமாக ஒளிர்ந்தது. அவள் முகத்தை நிமிர்த்தி அதையே பார்த்துக்கொண்டிருந்தாள். ''ஏன் முடியவில்லை'' என்று மீண்டும் தன்னையே கேட்டுக்கொண்டாள். ஒரு பெண்ணைப் பொறுத்தவரை எது அவசியமோ அது — புருஷன் அன்பு அவனாலே கிடைக்கிற உண்மையான சந்தோஷங்கள் நம்பிக்கை கொள்ள வைக்கிற துணை, இவையெல்லாம் கிடைக்காமற் போனால் அந்த நிழலிலிருந்து நிலையாகவே ஒதுங்கிவிடுவேண்டியதுதான். இன்னொரு நிழலை நம்பி எப்படிப் போறது?

நான் இனிமேல் இப்படிக் கறைபட்டுப்போக விரும்பவில்லே. வாழ்க்கையிலே இதைவிட எவ்வளவோ இலட்சியங்களெல்லாம் இருக்கு. புருஷன் துணை இல்லே என்கிற நினைப்பிலே நான் வெறுமையடைந்து நிற்கிற மாதிரித் தோன்றினுலும் உண்மையில் எனது இயல்பான குணங்களை இழந்துவிட்டு நான் மாறவேயில்லே. ஒரு சாதாரண மனித உறவின் விருத்திக்காக வாழ்க்கையின் புனிதங்களைப் பங்கப்படுத்திக் கொள்வதிலே என்ன நியாயமிருக்கு? இப்படி வருகிற எதற்கும் மாருத அன்பின் புனிதமே எல்லாப் பாவங்களையும் சுட்டெரிக்கப்போகிறது. இதுவே எனக்கு ஒரு சாபவிமோசனம் ஆகிவிடாதா?

நிச்சயம் ஒருநாளைக்கு என்னைத் தேடிக் கொண்டு, விசாகன் வந்து நிற்கத்தான் போருன்... அவனைப் பார்த்து ஒரு யுகமாச்சு. சின்ன வயதிலே, எங்கள் கிராமத்தை நினைத்துக்கொண்டு, டவுனிலிருந்து அடிக்கடி அவன் வந்து நிற்கிற போதெல்லாம், எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும். அப்பவெல்லாம் அவன் மனம் எத்துணை தெளிவாக இருக்கும். களங்கமில்லாத அவன் நட்பு எனக்கு இயல்பான – மாற்றவே முடியாத என்னுடைய கிராமத்துப் பாமர குணங்களுக்கு ஈடாகவே சந்தோஷத்தை அளித்தது. அப்போது அவன் துருவ நட்சத்திரம். இப்ப எதுக்கோ கறை பூசிக்கொண்டு அலேகிருன். வானத்திலே உயரமாய் நின்று ஒளி வீசிப் பிரகாசித்த அந்தத் துருவ நட்சத்திரத்தை, உண்மையில் காலம் தான் விழுங்கி மறைத்ததா? மீண்டும் அவன் வருவானு?'

''விசாகா! உன்னை உறவென்று நினைத்து நான் அழவில்லே. இந்த மண்ணிலே கறை பூசிக் கொண்டு விழுந்த ஒரு எரி நட்சத்திரம் நீ. நீ விழுந்த இடத்திலே எல்லாம் எரிந்துபோகும். அப்படிப் போனல் மிஞ்சுவது யார்? உலகம் எங்கே திரும்பிக் கொண்டிருக்கிறது? எனக்கு இதுக்குப் பதில் சொல்லத் தெரியேலே. கிழக்குத் திசையையே பார்த்து, என் விழியெல்லாம் நனைந்து போகிறது. இருட்டிலே சூரிய நமஸ்காரத்துக்காக நான் காத்துக்கொண்டிருக்கிறேன். சதா அரித்துத் தின்னுகிற மனித உறவிலே, சிறுவயதில் எனக்கு உன்மீது ஏற்பட்டுப்போன அன்பு– நம்பிக்கை ஒன்று மட்டும்தான் என் மனதிலே சாசுவத உண்மையாய் நிலேத்திருக்கு. அது கற்பனை என்று தோன்றுகிறபோது, ரொம்ப வேதனையாக இருக்கு. உண்மையை நம்பவே சிரமமாக இருக்கு. உண்மையும் கற்பனையுமாக வாழ்க்கையின் நிழல் பிரிந்து நிற்கிறது. இந்த நிழலிலே தூங்கிச் சாகிறதைவிட, இப்ப தூக்கமே ஒரு சுகமாக இருக்கு.''

அதன் பிறகு அவள் தரையிலே பாயை விரித்துப் போட்டுக்கொண்டு, நிம்மதியாகத் தூங்கினுள்.

(வளரும்)

# உளவியலாளர் வரிசையில்..... 11

# சிறில் பேர்ட்

**CYRIL BURT** (1883 — 1965)

— இ. பாலாம்பிகை, B. A.

தற்கால உளவியலறிஞர்களுள் இவர் சிறப்பானவர். லண்டன் மாவட்டக் குழுவில் ஓர் உளவியலறிஞராகவும், பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் உளவியல் பேராசிரியராகவும் உளவியலின் வளர்ச்சிக்காக இவர் பெருமளவு தொண்டினைப் புரிந்துள்ளார். இவர் ஒரு கல்வி உளவியலாளரும் கூட. முதலில் காரணிகளைப் பற்றிய ஆய்வுகளைப் பயன்படுத்தி நுண்ணறிவு பற்றி நாம் அறிந்துகொள்வதற்குச் சிறப்பான தொண்டினைப் புரிந்துள்ளார். உளவியலின் ஆய்வில் பிரிட்டிஷ் மரபு வழக்குகளைப் புகுத்திய பேரறிஞர்களில் இவரும் ஒருவர். இவர் பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

நுண்மதியில் பரம்பரை, சூழல் ஆகிய இரண்டில் எது கூடிய செல்வாக்குடையது என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. பேர்ட்டின் கருத்துப்படி ஒருவனது நுண்மதி பரம்பரைக் காரணிகளினாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. சூழலின் செல்வாக்கு மிகவும் குறைவாகும். ஆனால் வொட்சன் போன்றோர் நுண்மதியை நிர்ணயிப்பதில் சூழலே அதிக செல்வாக்குக் கொண்டதெனக் கூறுவர். இவற்றின் விளைவுகளைக் கணிப்பிடுவதற்கு பரிசோதனைகளை ஏற்பாடு செய்வது கடினமாகவுள்ளது. ஒருவனது, பரம்பரையும் சூழலும் நுண்மதியை எவ்விதம் பாதிக்கின்றன என்பதை அறிவதற்கு அக்காரணிகளை நாம் விரும்பியபடி மாற்ற முடியாதிருப்பதே இங்கு முக்கிய தடையாகவுள்ளது,

பேர்ட் என்பார் உளப் பிறபோக்குடைய பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளின் நுண்மதியை அளவிட்டபோது 14 சதவீதமான பிள்ளைகள் மாத்திரமே உளப் பிற்போக்குடையதாக இருந்ததையும், 14 சத வீதமான பிள்ளைகளின் நுண்மதி ஈவு 100க்கும் அதிகமாக இருந்ததையும் கண்டார். இவரது கருத்துப்படி பரம்பரையையும் சூழலையும் வேறுபிரிக்க முடியாது. இவையிரண்டும் கருவிலிருந்தே நுண்மதி வளர்ச்சியில் இணைந்து செல்வாக்கு செலுத்துவன.

இவர் தனது ஆராய்ச்சியின்போது 200 நெறிபிறழ்ந்தோரைத் தெரிந்தெடுத்து ஆராய்ச்சி நடத்தினர். இவர்கள் வாழ்ந்த அதே சமூக பொரு

ளர்த்ரச் சூழலில் வாழும் சாதாரண பிள்ளைகளுடன் இவர்களுடைய நடத்தைகளை ஒப்பிட்டு நோக்கினர். களவெடுத்தல், பாடசாலைக்கு அல்லது வீட்டுக்கு ஒழுங்காகச் செல்லாமை, முறையற்ற பாலியல் தொடர்புகள் நெறி பிறழ்வடைவதற்குரிய முக்கிய காரணிகளை அறிந்து அதற்கேற்ற வழிவகைகளை வகுக்க பாடசாலைகள் பெருமளவு உதவ முடியும். நெறிப் பிறழ்வின் ஆரம்ப நிலையிலேயே அத்தகையோரை அடையாளம் காண முடியும்.

இத்தகையவர்களை ஆரம்பத்திலேயே ஆசிரியர் அடையாளம் கண்டு பிள்ளையின் தன்னம்பிக்கை வளர உதவி புரிய வேண்டுமென பேர்ட் கூறுகிறார்.


அறிவுப் பசிக்கு அரிய விருந்து!

படித்துவிட்டீர்களா!

**நான் வெளியீட்டு வரிசையில்.....**

- உறவுகளின் இராகங்கள் — ரூபா 12-50
- சிந்திக்கத் தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் — ரூபா 15-00
- மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும் — ரூபா 8-00
- மௌனங்கள் கலையும்போது...... — ரூபா 5-00
- "நான்" தொகுப்புகள் 1985 — ரூபா 25-00

நான் வெளியீடுகள் விற்பனையாகும் இடங்கள் :

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

"மணி ஓசை"
12, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜே. ரி. புத்தகசாலை**
236, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

காரியாலயம் : நான் வெளியீடு
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

அறிவுப் பசிக்கு அரிய விருந்தான
"நான்" வளர நாம் வாழ்த்துகின்றோம்!

சுவைமிக்க
சைவ உணவுகளுக்கு

ஸ்ரீ தாமோதர விலாஸ்

இல. 239, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23065

★ ★ ★

SRI RAMAKRISHNA

9, MODEL MARKET,
HOSPITAL ROAD,
JAFFNA.

Phone : 23497

# வெளிநாட்டு வாசக நண்பர்களுக்கு

"நான்" மஞ்சரியும் நான் வெளியீடுகளும் உங்களைத் தொடர்ந்து வர யாம் பெற்ற அறிவின்பத்தை நீங்களும் அனுபவிக்க, தாமதியாது தொடர்பு கொள்ளுங்கள்.

| Country | Naan (6 Issues) & Postage | 4 Naan Publications & Postage |
|---|---|---|
| England | £ 6 | £ 4 |
| Canada | $ 9 | $ 6 |
| France | 100 Franks | 50 Fanks |
| W. Germany | 25 Marks | 15 Marks |
| Rome | $ 8 u. s. | 5 $ u. s. |
| Singapore | $ 5 u. s. | 3 u. s. |
| India | 65 Rs. (Indian) | 40 Rs (Indion) |
| Middle East. | 5 $ u. s. | 3 $ u. s. |
| Zambia | $ 8 u s. | $ 6 u. s. |

**Name & Address :**

Fr. Vincent Patrick omi St Joseph's Seminary, Colombuthurai Sri Lanka. For further details please contact:

Mr, R.J. Constantine, 51 Lathom Road, East-Ham. LONDON. E6

Fr. A. J. V. Chandrakanthan 59 Herridge Street, Ottawa, Ontario K. I S048 CANADA.

Mr. D. S. Fernado, 114 Rue De Caen 924000 Courbeovic, FRANCE

Mr. S. Packiyanathau. Graben Str. 39/3, 7157 Murrhardt WEST GERMANY

Fr. G. Rosario, O. M. I. St. Paul's Iustituta, Poonamalai Madras 600056 INDIA.

Fr. L. B. Rayappu, C. P. 9061, 00100 Rome - Aurelio, ITALIA.

Fr, John Mary. Thomson Rd. P. Box. 13 SINGAPORE 9157

Mr. S. Xavier, K. A I. A. Custom P. O. Box 30084 Jeddah - 21477 K. S. A.

Mr. J. D. R. Joseph P. O. Box. 33967 Lusaka. ZAMBIA

[ நாடகம் ]

# நேற்று ★ இன்று ★ நாளை

T. M. அன்ரனிப்பிள்ளை, LL. B.

## காட்சி 1

**மூப்பன் :** "உலகே மாயம்! வாழ்வே மாயம்!
நிலையேது நாம் கரணும் சுகமே மாயம்!"

**செல்வன் :** என்ன நண்பா, தேவதாஸ் படம் ஞாபகம் வருகின்றது. இவ்வளவு விரைவில் வாழ்க்கை வெறுத்துவிட்டதோ? முற்றும் துறந்த முனிவர் என்பதுதான் உமது தற்போதைய நிலையோ?

**மூப்பன் :** அப்படி எண்ணம் எனக்கு இல்லை நண்பா. ஆனாலும், இந்தக் காலத்திலே எங்கு பார்த்தாலும் பொய்யும், புரட்டும், சதியும், கொலையும். சீச்சி...... உலகமே கெட்டுப்போய் விட்டது. இந்தக் காலகட்டத்தில் சீவிப்பதைவிட நிம்மதியாய் கண்ணை மூடிவிட்டால் நல்லதென்று தான் எண்ணுகிறேன். அப்பப்பா... என்ன கொடுமைகளெல்லாம் நடைபெறுகின்றன!

**இளங்கோ:** ஒகோ! நல்ல நேரத்தில் தான் நானும் வருகின்றேன். என்ன விவாதம் நடத்துகின்றீர்கள்? நானும் பங்குபற்றலாமா ?

**செல்வன்:** கேள் நண்பா, ஏதோ அந்தக் காலத்திலே முழு உலகும் நன்மை நிறைந்ததாய் இருந்ததாம்... இப்போதுதான் உலகம் முழுவதும் கெட்டுப்போய் விட்டதாம். இவன் இப்படிக் கூறுவதை நாம் எப்படி ஏற்க முடியும்?

**இளங்கோ :** எப்படி முடியும்? அவனுக்கு உலக சரித்திரம் தெரியாது என்பதுதான் எனது முடிவு... உலகம் தொடங்கிய காலத்திலிருந்தே நன்மையும் தீமையும் இருந்து வந்துள்ளன. இன்னும் சில காலத்தின் பின் நல்ல காலம் வருமென்ற ஒரு நம்பிக்கை என் மனதில் ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையிலேதான் நான் ஒருவாறு வாழ்ந்து கொண்டு வருகின்றேன்.

**மூப்பன் :** நல்லாய் இருக்கிறது உங்கள் நாடகம். நீங்கள் இருவரும் சேர்ந்து எனக்கு ''டூப்'' விடப் பார்க்கின்றீர்கள் என்பது எனக்கு விளங்குகின்றது. ஆனாலும் நீங்கள் என்னை ஏமாற்ற முடியாது. என்னுடைய சொந்த அனுபவத்திலே நான் கண்ட உண்மை இதுதான்: முந்தின நாட்களிலே இருந்த எத்தனையோ நன்மையான ஆட்களும் நிகழ்ச்சிகளும் இப்போதில்லை. இனிமேலும் அப்படி இருக்குமென்ற நம்பிக்கையுமில்லை.

**செல்வன் :** ஏன் காணும்! முன்பு சீவித்தவர்களை மீண்டும் இவ்வுலகிலே நாம் காண முடியுமா? அவர்களுடைய கதை முடிந்துவிட்டது. இப்போது நாம் இருக்கின்றோம். இன்னும் சில காலத்திலே நாமும் மூட்டையைக் கட்டிக்கொண்டு சென்றுவிடுவோம்; வேறு நடிகர்கள் தங்கள் நாடகத்தை நடிப்பார்கள். அது நிற்க, இந்தக் காலகட்டத்திலே எந்த நன்மையான நிகழ்ச்சிகளையும் உம்மால் காண முடிவதில்லையா? உமது கண் கெட்டுபபோய் விட்டதா? அல்லது இருட்டடிக்கின்றதா? ''நன்மையும் தீமையும் பிறர் தர வாரா'' என்பதை நினைவில் வைத்துக் கொள்ளும். எல்லாம் நமது மனதைப் பொறுத்த காரியமேதான்...

**இளங்கோ :** நானும் ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றேன். வாழ்க்கைக்கு எதிர்காலத்தைப் பற்றிய கரிசனையும் பிரதானம். எவரைப் பார்த்தாலும், நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையுடனேதான் சீவித்து வருகின்றனர். அதுதான் சரியென்று பத்துமுறையும் கூற நான் தயார்!

**மூப்பன் :** ''நல்ல காலம்வரும்; நல்ல காலம் வரும்'' என்று குருவிச் சாத்திரம் கூறுபவர்களை நம்பி ஏமாந்துபோன பலருடைய சரித்திரம் எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தமட்டில், நான் சிறுவனாய் இருந்த முந்தின காலம் என்றால் ''பொன்னான காலம்''; இப்பொழுது உள்ளதோ ''பொல்லாத காலம்''; இனிமேல் வர இருப்பது ''போக்கிலிக் காலம்''. நான் இப்படிக் கூறுவது உங்கள் இருவருக்கும் கோபமாயிருக்கலாம்...

**செல்வன் :** நண்பா, நாங்கள் கோபிக்கமாட்டோம். ஆயினும், உன்னைப்போல் பழைய பல்லவியைய புகழ்ந்து பாடிக்கொண்டே தங்கள் காலத்தை வீணாக்கி, தமக்கும் பிறருக்கும் எதுவித பயனுமின்றிப் பூமிக்குப் பாரமாய் மட்டும் சீவித்து மடிந்த பலரைப் பற்றிய சரித்திரம் எனக்குத் தெரியும். அவர்கள் தங்கள் கடைசிக் காலங்களில் தங்களிலும் பிறரிலும் நம்பிக்கையற்றவர்களாய் மாறினார்கள். இதை நான் நேரிலே கண்டறியக் கூடியதாயிருந்தது.

**இளங்கோ :** அப்படிச் சொல்லு நண்பா, சென்ற கால நிகழ்ச்சி எதையும் மாற்றி அமைக்க முடியாது என்பதை நமது நண்பன் நன்கு

அறிந்திருந்தும், 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்று அடம் பிடிக்கும் வழக்கம் அவனை ஒருபோதும் விட்டுப் போவதாயில்லை. அவன் நாம் கூறுவதை ஏற்கப்போவதுமில்லை.

**மூப்பன் :** இப்போ பார்க்கப்போனல், நீங்கள் இருவரும் உண்மையிலே என்னை அவமானப்படுத்தத் திட்டம் போடுகின்றீர்களென்று நான் எண்ணியது சரிதான்! இங்கே பாருங்கோ, உங்களைப் போல் பலபேரை நான் கண்டிருக்கின்றேன். உந்தப் பயறு என்னிடத்தில் அவியாது. இதை நன்ருக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கோ!

**இளங்கோ :** மைத்துனு! நாங்கள் இருவரும் உன்னைக் கேலி செய்வதாய் நீ எண்ணுவது தவறு. நாங்கள் நியாயத்தைக் கதைக்கின்ருேமே தவிர, உன் மட்டில் எங்களுக்கு எந்த மனக்கசப்பும் இல்லை. இதற்கெல்லாம் கவலைப்படாதே. கண்டதிற்கெல்லாம் வீணிலே கவலைப்படும் பழக்கம் உனக்குச் சிறுபராயத்திலிருந்தே இருந்து வந்துள்ளது என்று நான் கேள்விப்பட்டேன். ஒரு விடயத்தைப்பற்றி விவாதிக்கும்போது நாம் பொறுமையை இழக்கக் கூடாது. மறுதரப்பினரின் நியாயத்தையும் நாம் கேட்டுப் பரிசிலனை செய்யவேண்டும். அதுதான் முறை!

**மூப்பன் :** சரி மச்சான்! நீங்கள் என்னுடன் சண்டை போடுவதாய் நான் கூறவில்லை. ஆனாலும், நான் கூறும் நியாயங்களை நீங்கள் ஏற்றுக்கொள்வதாயில்லை. எனவேதான் நான் பொறுமையை இழக்க வேண்டி ஏற்படுகின்றது. அத்துடன், நான் வயதிலே உங்களிலும் மூத்தவன் என்பதால் எனது சொல்லுக்கும் நீங்கள் ஓரளவு மதிப்புக் கொடுக்கவேண்டுமல்லவா ?

**செல்வன் :** உண்மைதான் நண்பா, ''மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்'' என்பதும் ஓர் பொன்மொழி. ஆயினும் நாம் நமது சிந்தனு சக்தியையும் உபயோகிக்க வேண்டுமல்லவா ? சென்ற காலம் முடிந்து விட்டது; எதிர்காலம் சிலவேளை வராமலும் போகலாம். எனவே, நமக்கென்றிருப்பது நிகழ்காலமே தான். நமது காலத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும், அல்லது பின்னர் நாம் கவலைப்பட நேரிடும்.

**இளங்கோ :** இக்கட்டத்தில், நான் கூறுவதையும் மறக்கலாகாது, நண்பா! எவனைப் பார்த்தாலும் ஒரு இலக்கை நோக்கியே செயற்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. ஓர் எதிர்கால இலட்சியத்தை மனதில் வைத்துச் செயற்படுவதே சாலச் சிறந்தது. எனவேதான் எதிர்காலமே பிரதானமென்று நான் கூறுகின்றேன். இதில் என்ன தவறு?

**மூப்பன் :** சரி; சரி; இப்போது நிகழ்கால வாதிக்கும் எதிர்கால வாதிக்கும் பிணக்கு ஏற்பட்டுள்ளது, பார்த்தீர்களா? சற்று முன்னர்தானே நீங்கள் இருவரும் சேர்ந்து என்னை ஒதுக்கப் பார்த்தீர்கள். இப்போது

வகையாய் மாட்டிக்கொண்டீர்கள். இந்தச் சிக்கலைத் தீர்க்க நாம் மூவராலும் முடியாது என்றுதான் எண்ணுகிறேன். என்ன செய்யலாம்...? ஒரேயொரு இலகுவான வழிமுறைதான் என் மனதிற்படுகின்றது. நீங்கள் சம்மதித்தால், அது என்னவென்று நான் கூறுவேன். எதற்கும் உங்கள் சம்மதம் தேவை.

**இளங்கோ :** அதென்ன வழிமுறை? கூறும் பார்ப்போம்!

**மூப்பன் :** அதுவா...? அதுதான் சீட்டுப்போட்டுத் தீர்மானிக்கும் வழிமுறை அதற்கு ஒரு நிபந்தனை மட்டும் தேவை. அதென்னவென்றால் அதன்படி ஏற்படும் தீர்ப்பை நாம் மூவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான்!

**செல்வன் :** நண்பா, இப்படியான சிக்கலான விவாதத்தின் முடிவைச் சீட்டுப் போடுவதன்மூலம் தீர்மானிப்பது நமது சிந்தனை சக்தியை அவமதிக்கும் ஒரு செயலாய் அமையும். அதைவிட்டு, வேறொரு விதத்தில் நமது விவாதத்தின் முடிவுகளை நாம் அறிந்துகொள்ளுவது நலமென்று நான் எண்ணுகிறேன். அது என்னவென்று சொல்லட்டுமா?

**மூப் / இள :** சரி; சொல்லும் பார்ப்போம்!

**செல்வன் :** நம் மூவருக்கும் நண்பனான திரு. விவேகி இருக்கின்றானே! அவனது வீடு அருகிலே தானே இருக்கின்றது. அவன் ஒரு நம்பிக்கையுள்ள, நாணயமான, நாலும் படித்த நமது நண்பன். அவனிடம் சென்று, நமது பிணக்கை எடுத்துக் கூறுவோம். அவன் நேர்மையான வகையில் தனது தீர்ப்பைக் கூறுவானென்று நான் நம்புகின்றேன். உங்களுடைய கருத்து என்ன?

**மூப் / இள :** சரிதான்! அது நல்ல ஒரு ''ஐடியா'' தான். அவனிடம் சென்று கேட்டுப் பார்ப்போம். வாருங்கள்...

## காட்சி 2

**மூவரும் :** வணக்கம் நண்பா!

**விவேகி :** வணக்கம் நண்பர்களே! என்ன சங்கதி? நீங்கள் மூவரும் ''மும்மூர்த்திகளைப்போல்'' என்னிடம் வருவதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்றுதான் நான் எண்ணுகிறேன். இந்த நேரத்தில் அப்படி என்ன விசேஷம்?

**மூப்பன் :** அப்படிப் பெரிய விஷயம் எதுவுமில்லை. எங்களுள் ஒரு சிறு விவாதம் ஏற்பட்டுள்ளது, நாணயமும் நம்பிக்கைக்குரிய நண்பன்

என்பதாலேதான் எங்களது விவாதங்களைக் கேட்டு ஒரு நல்ல தீர்ப்புக் கூறவேண்டும்மென்றுதான் உம்மிடம் இப்போ வந்தோம்.

**விவேகி :** நீங்கள் மூவருமே எனது நண்பர்கள், எனவே; உங்கள் பிணக்கை எப்படித் தீர்ப்பதென்றுதான் நான் யோசிக்கிறேன். ஏனெனில், நான் எந்த முடிவைக் கூறினாலும் அது உங்களில் ஒருவரையோ, இருவரையோ பாதிக்கலாம். எனவே, தயவுசெய்து இந்த இக்கட்டான நிலையிலிருந்து என்னை விலக்கிவிடுங்கள். வேறென்ன விடயமென்றாலும் சரி மத்தியஸ்தர் வேலைமட்டும் வேண்டாம்.

**செல்வன் :** அப்படிக் கூறவேண்டாம் நண்பா! நாங்கள் சமாதானமான முறையிலேதான் வந்துள்ளோம். நியாயமான தீர்ப்பென்றால் நாங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறோம்.

**மூப்பன் :** நியாயமான தீர்ப்பென்றால் நானும் ஏற்கத் தயார். ஆனால், எனது விவாதத்தையும் நன்கு பரிசீலனை செய்யவேண்டும்.

**இளங்கோ :** நாங்கள் கூறும் நியாயங்கள் இலகுவானதாய்த் தோன்றலாம். ஆனால் தீர ஆலோசித்துத் தகுந்த தீர்ப்புக் கூறுவதிலேதான் உமது அறிவையும் ஆற்றலையும் நாங்கள் அறிய முடியும்,

**விவேகி :** எனக்கு இதையெல்லாம் கேட்கப் பயமாய் இருக்கின்றது. அப்படி என்ன விவாதம்? சுருங்கக் கூறுங்கள்,

**மூப்பன் :** நண்பா, கவனமாய்க் கேள். சென்ற காலமே மிகப் பிரதானமென்று நான் கூறுவதை இவர்கள் இருவரும் மறுக்கின்றனர்.

**செல்வன் :** நிகழ்காலம் பிரதானமென்று நான் கூறுகின்றேன். அது சரிதானே!

**இளங்கோ :** கேள் நண்பா, எதிர்காலமேதான் மிக முக்கியம் என்பது எனது கருத்து, அதில் என்ன தவறு?

**விவேகி :** அடேயப்பா! இதற்குத்தானா நீங்கள் மூவரும் வீணிலே விவாதிக்கின்றீர்கள். நான் கூற உள்ளது இதுதான்; மூன்று காலங்களுமே பிரதானமானவை. அதுதான் உண்மை!

**மூப்பன் :** நல்லாய் இருக்கின்றது உனது ஞானம்! வெகு இலகுவிலே எங்கள் மூவருக்கும் "ஐஸ்" வைத்துத் திருப்திப்படுத்தலாம் என்று எண்ணிவிடாதே நண்பா, போதிய விளக்கம் கூறிய பின்னரேதான் உமது முடிவைக் கூறவேண்டும். அல்லது நாங்கள் வீணிலேதான் உன்னைத் தேடி இத்தனை தூரம் வந்தோமென்று எண்ணிக் கவலைப்பட நேரிடும்!

**விவேகி :** உண்மையிலே நான் உங்களை ஏமாற்ற எண்ணி இவ் விதம் கூறவில்லை. உள்ளதையே நான் கூறுகிறேன்.

**செல்வன் :** அப்படியென்ருல்.........?

**விவேகி :** கவனமாய்க் கேளுங்கள். இவ்வுலகிலே நம். ஒவ்வொரு வருக்கும், சென்ற காலம்; நிகழ்காலம்; எதிர்காலம் என்னும் மூன்று வகையான காலங்கள் உண்டு. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை யிலே பிரதானம் என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**செல்வன் :** உண்மைதான்! ஆனுலும் இப்பொழுது நாம் எல்லோ ரும் நிகழ்காலத்திலேதானே சீவிக்கின்ருேம். எனவே, நிகழ்காலந்தானே பிரதானமானது!

**விவேகி :** வேருெரு வகையிலே பார்த்தால், ஒவ்வொரு கணப் பொழுதும் சென்றுகொண்டிருப்பதால் சென்ற காலமேதான் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. அதையும் நாம் மறக்கலாகாது.

**மூப்பன் :** அப்படிக் கூறு நண்பா! சென்ற காலம் மிகவும் பிரதான மென்பதைத்தானே நான் கூறுகிறேன். ஆனுல் இவர்கள் இருவரும் ஏற்க மறுக்கின்றனர்.

**விவேகி :** அதே வேளையில், எதிர்காலமென்றும் ஒன்று உண்டு. அதுவும் பிரதானமென்று நமது நண்பன் வாதாடுவதையும் நாம் மறக்க முடியுமா?

**இளங்கோ :** நன்ருகக் கூறினீர் நண்பா! எதிர்காலத்தின் மகத்து வத்தைப் பற்றி எனக்கு ஓர் பாட்டு ஞாபகம் வருகின்றது; பாடட்டுமா?

**விவேகி :** சரி பாடும், பார்ப்போம்!

**இளங்கோ :** "ஒளி மயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரி கின்றது........." எதிர்காலமேதான் மிகவும் பிரதானமானது.

**செல்வன் :** அந்தப் பாட்டை நான் தொடர்ந்து பாடட்டுமா?

**விவேகி :** சரி பாடு, கேட்போம்.

**செல்வன் :** "இந்த உலகம் பாடும் பாடல் ஓசை காதில் விழுகின் றது........." பார்த்தீர்களா! நிகழ்காலத்திலேதான் அந்தப் பாட்டின் அடியும் முடிகின்றது, நிகழ்காலத்தின் பெருமைக்கு நிகர் எதுவுமில்லை.

**மூப்பன் :** பார்த்தீரா நண்பா! சற்று முன்னர் எனக்கு முழு மாருக நின்று விவாதித்த இருவரும் இப்போது தமக்குள்ளே போட்டி

போடுகின்றனர். நீர் உண்மையான விளக்கத்தைக் கூறும் நான் கேட்கத் தயாராயிருக்கிறேன். அவர்கள்தானே இப்போது சண்டை போடுகின்றனர்.

**விவேகி :** நல்லது நண்பர்களே. நான் கூறுவதை நீங்கள் மூவரும் அவதானத்துடன் கேட்டு, ஆழச் சிந்தித்து, உங்கள் முடிவுகளை எனக்குக் கூறுங்கள்.

**மூவரும் :** சரி, கூறும் நண்பா, நாங்கள் கேட்கிறோம்.

**விவேகி :** முதலாவதாக, ஒரு உதாரணத்திற்கு, இவ்வுலகை விட்டுச் சென்ற ஒருவனுடைய காலத்தைக் கணக்கெடுத்தால், அவனுடைய உலக வாழ்வு முடிவுற்ற கதையாகிவிட்டது. அவனைப் பற்றிக் கதைப்பதென் றாலும், கணிப்பதென்றாலும், அது முடிவுற்ற காலத்திற்குரிய நிகழ்ச்சி யென்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்வோம், இல்லையா?

**மூப்பன் :** பார்த்தீர்களா? எவ்வளவு பொருத்தமான உதாரணம். சென்ற காலத்தின் முக்கியத்தை எவ்வளவு இலகுவில் விளக்கியுள்ளார் நமது நண்பன்!

**செல்வன் :** இப்பொழுது நாம் நடத்திக் கொண்டிருக்கும் விவாதத் தைப் பொறுத்தமட்டில் இதுவும் ஒரு நிகழ்கால நிகழ்ச்சியென்பதால், நிகழ்காலத்தின் மகத்துவம் தெரியவரும். அதுபற்றி நான் கூறவா, அல்லது நீர் கூற விரும்புகிறீரா?

**விவேகி :** நீங்கள் கவனத்துடன் கேட்டால் நான் கூறுகின்றேன். நீங்கள் மூவரும் கேட்க ஆயத்தமா ?

**மூவரும் :** ஆம். கூறும் கேட்போம்...

**விவேகி :** காலத்தைப் பற்றிக் கணக்கிடும்போது, வினாடி, நிமிடம், மணித்தியாலம், நாள், வாரம், மாதம், வருடமென்ற வகையில் கணிக் கலாம். இப்போது ஒரு நாளைப்பற்றிக் கணக்கிட்டுப் பார்ப்பது உபயோகமா யிருக்கும். எனவே, குறித்த ஒரு மனிதன் இன்று தனது நேரத்தை எப்படி செலவு செய்கிறானென்று கவனித்தால், அவன் செய்யக் கூடிய அல்லது செய்யவேண்டிய பிரதானமான சில காரியங்கள் இருக்கலாம். அவன் தவிர்க்கவேண்டிய சில கருமங்களும் இருக்கலாம். அவற்றில் அவன் எவற்றைச் செய்கின்றான்; எப்படிச் செய்கின்றான்; எதைச் செய்ய வேண்டியிருந்தும் செய்யாது விடுகின்றான் என்பதையெல்லாம் அவதா னித்துப் பார்ப்பது அவசியம். இதிலிருந்து நிகழ்காலம் எவ்வளவு பிர தானமென்பதை நாம் உய்த்துணரக்கூடியதாயுள்ளது.

**செல்வன் :** மிகவும் பிரமாதம்! வெகு பொருத்தமான விளக்கம்! நான் நினைத்தது போலவே உமது விளக்கமும் அமைந்துள்ளது நண்பா!

**இளங்கோ :** அது ஒருபுறமிருக்கட்டும். தாங்கள் பெறவிருக்கும் பேருக்காகவும், புகழுக்காகவும், எதிர்கால நன்மைக்காகவும், எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராய் பலர் இருப்பதையும் செயலாற்றுவதையும் நாம் அறிவோமல்லவா? அதைப் பற்றியும் ஒரு விளக்கம் கூறுவீரா?

**விவேகி :** உமது கோரிக்கையையும் மிகவும் நியாயமானதுதான். நான் ஒரு விளக்கம் கூறட்டுமா?

**மூவரும் :** கூறுங்கள் கேட்கலாம்...

**விவேகி :** சாதாரண வாழ்க்கையை நாம் எடுத்துக்கொண்டால், பெற்றோர் என்னும் அந்தஸ்தில் உள்ளவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றி எத்தனையோ மனக்கோட்டைகளைக் கட்டுகின்றனர். தங்கள் பிள்ளைகளின் கல்வியிலும், செல்வத்திலும், சமுதாய வாழ்விலும், முன்னேற்றம் அடையவேண்டும்மென்றெல்லாம் எத்தனையோ கற்பனைகளையும் எதிர்பார்ப்புக்களையும் மனதில் பதித்துச் செயலாற்றுவதை நாம் அறிவோம்.

**இளங்கோ :** பிரமாதம்! பிரமாதம்!! தொடர்ந்து கூறு நண்பா!

**விவேகி :** ஏன்! நாம்கூட துள்ளித்திரிந்த சிறு பள்ளிப் பருவத்திலே எமது எதிர்காலம் எப்படியெல்லாம் அமையவேண்டுமென எத்தனையோ இன்பக் கனவுகளைக் கண்டோம், அல்லவா? அக்கனவுகளில் பல நடைபெறாது போய்விட்டன என்பதால் கவலைதான். ஆயினும், அவற்றில் சிலவும்; அவற்றைவிட வேறு சில மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளும் நமது வாழ்வில் நடைபெற்றுள்ளன; சில இப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வேறு சில இனிவரும் காலத்திலும் நடைபெறக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவே, எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்புகள் பல வகைப்பட்டனவையாய் அமையலாம். தனது தலையிலே பார்குடத்தை வைத்துக்கொண்டு பகற்கனவு கண்ட சிறுமியின் கதையும் ஞாபகமிருக்குமென்று எண்ணுகின்றேன்.

**இளங்கோ ;** அற்காக எதிர்காலத்தைப் பற்றிக் கனவுகாணக்கூடாதென்று கூறுகின்றீர்கள்?

**விவேகி :** இல்லை; இல்லை! வேண்டுமானால் நீர் தாராளமாய்க் கனவு காணலாம். எதுவித ஆட்சேபனையுமில்லை. எதிர்காலத்தைப் பற்றி எவனும் அக்கறையுடனே இருப்பது அவசியம். ஆயினும் கனவு காண்பதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. நன்மையான ஓர் கனவை நனவாக்க முயற்சி செய்வதுதான் பிரதானம்! அதற்கான தகுந்த வழிவகைகளைத் தேர்ந்தெடுத்து, படிப்படியாய் அந்த இலக்கை நோக்கித் தினமும் தைரியத்துடன் முன்னேறிச் செல்லவேண்டும்.

இதையேதான் வேதங்களும் நமக்குப் போதிக்கின்றன. சில இலக்குகளைச் சொற்ப காலத்தில் இலகுவில் அடையக்கூடியதாய் இருக்கும். வேறு சில இலக்குகளை அடைவதற்காக நமது வாழ்நாளெல்லாம் முயற்சி செய்துகொண்டேயிருக்க நேரிடலாம்!

**செல்வன் :** எப்படித்தான் நீங்கள் விவாதித்தாலும், நிகழ்காலமே தான் மிகவும் பிரதானமென்று பகுத்தறிவுள்ள எல்லா மக்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

**மூப்பன் :** ஓகோ! இதேதெடா புதிய ஞானம் உனக்கு... சற்றுப் பொறு; நமது நண்பன் விவேகியின் தீர்ப்பு எப்படியென்று பார்ப்போம்.

**விவேகி :** உதாரணத்திற்கு உங்களில் ஒருவனைப் பற்றிக் கூறுவது நலமென்று எண்ணுகின்றேன்.

**மூப்பன் :** ஏன் நண்பா? உம்மைப் பற்றியே கூறினால் நலமாயிருக்கும். அல்லது, எங்களுள் மீண்டும் ஓர் சர்ச்சை ஏற்படக்கூடும்.

**விவேகி :** சரி, அப்படித்தான் வைத்துக்கொள்ளுவோமே! எனது சென்றகாலம் ஒரு வகையில் சுகமும் துக்கமும் கலந்ததாய் நடைபெற்று முடிந்துவிட்டது. அது என்னைப் பொறுத்த மட்டில் எனது சரித்திரமாகி விட்டதென்று கூறலாம். ஏனெனில், அதை மாற்றி அமைக்க முடியாது. ஆயினும், சென்றகால நிகழ்ச்சிகளிலிருந்து நான் பல பாடங்கள் கற்றுள்ளேன். நான் எனது எதிர்காலத்தைப் பற்றி அதிகம் சிந்தித்து, அதை ஆவலுடன் எதிர்பார்த்து, மனம்பாலே குடித்துக்கொண்டிருப்பதாய் நீங்கள் கூறலாம் அதில் தவறில்லை. ஆயினும், எனக்கென்று இப்போதிருப்பது நிகழ்காலமே. இதைத் தக்க முறையில் பயன்படுத்தாது வீணாக்கினால் அதனால் எந்தவிதமான பயனும் ஏற்படமாட்டாது.

**செல்வன் :** அப்படியென்றால், நாங்கள் மூவரும் தர்க்கம் போட்டுக் கொண்டு உம்மிடம் இங்கு வந்ததால் இப்போது உமது நேரம் வீணிலே விரயமாவதாய் எண்ணி, இப்படி மறைமுகமாய்ப் பேசுகின்றீரோ என்று தான் நான் யோசிக்கிறேன். உள்ளதைக் கூறும் நண்பா!

**விவேகி :** உண்மையிலே நான் அப்படியான கபட எண்ணம் மனதில் வைத்து எதையும் கூறவில்லை. உங்கள் விவாதம் பிரமாதமான விடயத்தைப் பற்றியதென்றுதான் நான் கூறவேண்டும். ஏனெனில் இந்த விவாதத்தின் பயனாய் காலத்தின் மகத்துவத்தை நாம் எல்லோரும் உணரக்கூடிய ஓர் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**செல்வன் :** உண்மையில் நண்பா எங்களுக்கும் மிகமகிழ்ச்சிதான்! இப்போது உமது முடிவுகளை அறிய நாங்கள் மிகவும் ஆவலாயுள்ளோம்.

**விவேகி :** நமது நாளாந்த வாழ்விலே ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நாம் ''என்னதான் நடக்கும் நடக்கட்டுமே'' என்ற ''ஏனோதானோ'' மனப்போக்குடன் பார்வையாளர்களாக அல்லது அந்த நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படுபவர்களாக வாழாவிருக்காமல், அந்த நிகழ்ச்சிகளுக்கு நாமே தான் கர்த்தாக்களாக முன்னின்று செயலாற்றி, அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றபின், அவை நமக்கு மன நிறைவுள்ள, மகிழ்ச்சியான சிந்தனைகளை ஏற்படுத்தக்கூடிய ''பசுமை நிறைந்த நினைவுகளாய்'' இருக்க நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

**மூப்பன் :** நன்று கூறினீர் நண்பா, தொடர்ந்து கூறும் நாங்கள் கேட்கத் தயாராயிருக்கின்றோம்.

**விவேகி :** நடந்தவைகள் நடந்தவைகளாயிருக்கும். இப்போது நடப்பவைகள் நல்லவைகளாய் இருக்க நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் இனிமேல் நடக்கவிருப்பவைகளும் நலமே அமையக்கூடியதாய் நாம் விரும்புவதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவைக்குரிய தகுந்த செயல்திட்டங்களையும் நாம் திறமையுடன் வகுத்துச் செயல்பட முயற்சிப்போமென்று பிரதிக்ஞை எடுப்போம். அதன் பயனாய், நமக்கும் பிறருக்கும் நன்மை ஏற்படக்கூடிய வகையில் நமது வாழ்க்கையை அமைப்போம்.

மீண்டும் கூறினால், சென்ற காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதால் மட்டுமோ; அன்றேல் எதிர் காலத்தைப் பற்றி கற்பனை உலகிலே சஞ்சரிப்பதாலோ; அல்லது நிகழ்காலத்தை வீணாக்குவதாலோ பயன் எதுவுமில்லை.

சென்றகால நிகழ்ச்சிகளினால் நமக்கு நல்ல அனுபவம் உண்டாகியுள்ளது. எனவே, எதிர்காலத்துக்குரிய செயல் திட்டங்களை முறையே வகுத்து, இப்போது நமக்கென்றிருக்கும் நிகழ்காலத்தைத் தக்க விதத்தில் பயன்படுத்தி நமக்கும் பிறருக்கும் நன்மை ஏற்படச் செய்வோமாக... இதுவே பல வகைகளிலும் சிறந்த முறையாகும்!

**இளங்கோ :** மிக்க நன்றி, நண்பா! நாங்கள் இனிமேல் வீணிலே சண்டையிடாமல் எங்கள் கருமங்களைத் திறமையுடன் கவனிப்போம்.

**மூவரும் :** வணக்கம் நண்பா!

**விவேகி :** சென்றுவாருங்கள். வணக்கம்!

'நான்'' வளர்ச்சியில்
நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

# காசன் தேயிலை

# CARSON'S TEA

★ ★ ★

வேறெந்தத் தேயிலையும் தரமுடியாத

மணம், குணம் நிறைந்தது.

ஒழு முறை பரீட்சித்துப் பார்த்தால்

தெரியும் அதன் சுவை !

★ ★ ★

விபரங்கட்கு :

## காசன் தேயிலை விநியோகஸ்தர்

அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

காதலிப்போரிடம் ஓர் வினு!

# மின்னலுக்குப்பின் இடிதானு?

இப்பிரபஞ்சதில் காதலிப்போரே
இப்பேதையின் வினுவுக்கு
அப்பழுக்கற்ற உண்மையினே
தப்பாது அளித்திடுக.
இப்போது கேளும்,
இருண்ட என் வானில் மின்னல்போல் வந்தான்.
மருண்ட என் பார்வையில் ஒளி துலங்கவும் செய்தான்
சுருண்ட என் கூந்தலேக் கவி பாடியும் வைத்தான்
திரண்ட தோளுடைய அவன் பெயர் துஷ்யந்தன்.

இருண்ட வானில் வரும் மின்னலின் பின் இடிதான்
இயற்கையின் நியதி இது
இதுவே சமுதாய நியதியுமா ?
இதயம் தாங்குதில்லே; ஆறுதல் சொல்

காதலிப்போர் வரைவராம் இதயம்
கூடவே அம்புகள் இரண்டுடன்
காதல் மன்மதனின் பாணங்களாம் அவை — என்
காதல் மன்னவனும் வரைந்தான் அன்று.

அப்பல்லோ விண்சென்ற நேரமது
* ரோகிணி புவியை வலம் வந்த நேரமதிலும்
மீண்டும் வரைந்தான் அம்புகள் இரண்டினே
ஏவுகணைகளாய் என் இதயமதைத் தாக்கினுன்
ஏவுகணைகளைவிடக் கொடியவை அச்சொல்லம்புகள்.
கேளும்;

ஏஞ்ஜலீன், திருநெல்வேலி.

*பணம் தரும் நட்பு பகட்டானது*
*பாசம் தரும் நட்பு மகிழ்வானது.*

''தப்பாக நினைப்பாய் என்னை
உன்னுடன் அதிகம் பேசினுல்''
தரிசனம் இடையாதா என
பாதச் சுவடுகளின் பின்னுல்
பரிதவித்துத் திரிந்தபோது
தப்பாக நினைத்திருப்பேன் என்பது
அவனுக்குப் புரிந்திருக்க நியாயமில்லைத் தான்
அது காதல்வெறி கண்ணை மறைக்கும் பருவமாம்
அவனும் நானும் அன்று அட்வான்ஸ் லெவலாம்.

இன்றோ,
பெருந்தெருக்கள் திணைக்கள
பொறியியலாளனும் அவன் — நானும்
பெருந்தனத்தை சீதனமாக
பெரிதுவக்க முடியா
பட்டதாரி ஏழையாம்.

கேளும்;
சீதனமற்றோர் காதலித்தால்
மின்னலுக்குப்பின் இடிதானு ?
இயற்கையோடொத்த — சமுதாய வாழ்வு
என்பதன் நிருபணமா இது ? — அன்றி
சூழலாதிக்கவாதத்தின் விளைவா இது ? எனின்,
மானிட ஆதிகம், மனிதப் பண்பு
மேலோங்கும் நாள் என்று ?
இளையோரே!
விடையளித்தல் உங்களுடையதே!!

× செய்மதி

கவிதையில் வரும் பெயர்கள், காலங்கள் அனைத்தும் கற்பனையே.

படித்தவன் எல்லாம் பண்பாளன் அல்ல
பண்பாளன் எல்லாம் படித்தவனும் அல்ல

அறிவுச் சுடரான "நான்" பணி வளர வாழ்த்துகின்றோம்!

கலர் பிலிம் வேலைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்

நகரின் மத்தியில் நவீன கலர் புகைப்படக் கலையகம்

★

# ஸ்ரூடியோ டில்கா

(பஸ்நிலைய முன்மேல்மாடி)

202 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 24174

WITH THE BEST COMPLIMENTS FROM

★

# Emsaljee Amijee Stationers

Wholesale and retail Stationers,
Schools and office Stationery Supliers.

580, HOSPITAL ROAD,
JAFFNA.

T'Phone : 22166

சிறுகதை

# அவனும் ஓர் அகதி

யாழ் பாலன்

பார்வைக்கு எல்லோரும் மனிதர்கள் தான். ஆனால் அதில் எத்தனை பேர் மனித மிருகங்கள். பார்த்தீங்களாப்பா, அவன் அண்ணாவை எப்படிக் கூறித் திட்டினான் என்று. இந்த நிலைக்கு வந்ததே எங்கள் வீட்டால் தான் என்று ஒரு நிமிடம்கூட சிந்திக்கவில்லை, என்ன சமூகம் அப்பா இது?

மீரா... என்ன பேச்சு பேசுகிறாய்? நீ கூட உன் வார்த்தையால் உன்னைத் தாழ்த்திக் கொள்கிறாயே! படித்ததை பட்டம் பெற்றதைக் கூறிப் பெருமை கொள்ளவில்லை. பண்பான பிள்ளைகளை வளர்த்ததை எண்ணித்தான் பெருமைப்படுகிறேன். அதிலிருந்து தவறிவிடாதீர். நீங்கள் இருவரும் என் இரு கண்கள். இதில் எந்தக் கண்ணில் தூசி பட்டாலும், இரண்டும் மூடியே திறக்கும். காந்தன் வீட்டுக்கு வருவதில்லை, ஆனால் அவன் ஊருக்கு நல்லதைச் செய்யட்டும். அதற்காகவாவது அவன் படிப்பைத் தொடரட்டும் என்றுதான் தூரத்தே விட்டேன். இன்று அவன் நிலை அறியமுடியாத நிலையில், அவனது நண்பன் டினேஷ் கூறியதில்தான் அறிந்துகொள்ள முடிந்தது.

இன்றைய நிலையில் எவன் எங்கு உயிருடன் இருப்பான் என்பதை அறியமுடியாத நிலையில் தூற்றுவார்வாயாவது, நல்ல தூதுதரும் சாதனமாக விளங்குகிறதே! இதுவும் நன்மைக்குத்தான்!

அப்பா, நான் ஏதோ கூற நீங்கள் என்மீது அல்லவா குறை காண்கின்றீர்கள். டினேஷ் படிப்பதற்கும் பள்ளியில் சேர்வதற்கும் அண்ணன் பட்ட அக்கறை, இதுவரை எங்கள் வீட்டில் அம்மா அவன் மேல் காட்டிய கரிசனை அத்தனையையும்எண்ணாது அண்ணாவின் நிலைபற்றிக் கவலைகொள்ளாது ஏதோ கூடத் திரிந்ததே பாவம் என பழிவேறு கூறுகிறானே!

எந்த தகப்பனோ தாயோ தன் பிள்ளை செல்லப்பிள்ளை, மற்றது எல்லாம் தெருப்பிள்ளை என்று நினைப்பதில்லை, ஆனால் அவர்களுடைய சூழல் நட்புத்தான் ஒவ்வொருவரையும் அப்படி உருவாக்கிக் கொள்கிறது. மீரா, இளமைத் துடிப்பின் பேச்சும் அவசர முடிவும் தான் அவனை இப்படிப் பேச வைத்தது.

என்ன... என்ன... அப்பாவும் பிள்ளையும் கொஞ்ச நேரமாவது சந்தோஷமாக இருக்க மாட்டீங்களா? நான் காந்தனின் விடயமாக அறிய

அக்கினஸ் வீட்டிற்குச் சென்று வருவதற்குள் என்ன புதிய மோதல் உங்களுக்குள்?

அம்மா... அம்மா... அப்பாவிடம் நான் சண்டைக்கு போகேலேம்மா... டினேஷ் வந்து... அண்ணுவைத் திட்டினர். அப்பாவும் அதனைக் கேட்டுத் தலையாட்டும் பொம்மையாக இருந்தாரம்மா, அதுதான்...

''என்ன அதுதான் அடுத்ததையும் சொல்லன்'' என மீராவின் அம்மா தங்கம் குரல் கொடுத்தாள்.

தங்கம், நீ இளைய மகன் என்று அழைப்பியே டினேஷை! அவன் தான் வந்து காந்தன் தன்னையும் காட்டிக் கொடுக்கப் பேரகிருனும் என்று கதைத்தார்களாம். அதுதான் அவன் பயத்தால் கத்திட்டுப் போருன்... அது கிடக்க காந்தன் நிலை என்னவாம்.

விசாரணை நடக்குதாம். பள்ளியால் வரேக்க பாழ்பட்டுப் போனவங்கள் பிடிச்சிட்டு ஏதேதோ குற்றம் எல்லாம் சுமத்திப் போட்டாங்கள் என்று நாங்கள் கலங்கிறம். சும்மா சுத்தித் திரியிறதுகளுக்கு வாயை வைச்சுக் கொண்டு கிடக்க ஏலாதுபோல...

தங்கம், நீ என் கொதிக்கிருய்? அவன் டினேஷ் அடுத்த கிழமை ஜேர்மனி போகிருனும். அதுக்கிடையில தன்னை இழுத்தாலும் எண்டு அவன் கத்துருன்.

அதுக்கு இஞ்ச பெடியள் பிடிபட ஒருசிலர் மட்டும் அவங்கட துக்கத்தைச் சொல்வி சுகம் அனுபவிக்கவல்லோ அங்க போகினம். இங்க எத்தனை அகதி முகாம். அதில படுகிற கஷ்டங்களுக்கு ஏதும் உதவ முடியாத வசதி படைத்த முதலைகள் கூட எல்லாம் அங்கபோய் அகதிக்காசு எடுத்து இங்க அனுப்பி அனுபவிக்கத் துடிக்குதுகள். ஆற்றயேன் வீடு எரிய அந்த சூட்டில தங்கட குளிர்காயப் பாக்குதுகள். தங்கத்தின் மனக்குமுறல் வார்த்தையில் தீர்ந்தது.

தங்கமக்கா... தங்கமக்கா... ஓ, செல்லம்மாவா, என்னடி பிள்ளை? என்ன பெரிய சத்தமா இருக்கு, ஊரில நடக்கிற கூத்தில்ல, உன்ர வீட்டில நடக்கிறத பாத்தா...?

என்ன... என்ன புதுக்கதை சொல்லிருய் செல்லம்மா? இவன் டினேஷ் ஏதோ பலதை அளந்து கொட்டிக்கொண்டு போருன். நீயும் இங்க கத்திறதைப் பாத்தா...! ஊர் வம்பை வதந்தியாய்ப் பரப்ப செல்லத்தைத்தான் செய்தித்தாளாய்ப் பயன்படுத்துவார்கள் அவ்வூர் மக்கள். என் என்ன புதிசா அறிஞ்சிட்டாய் ஊரில போர் நிறுத்த ஒப்பந்தம் நடந்தது போல உங்கட போரை நிறுத்தவும் ஓர் ஒப்பந்தம் நடத்திஞல்

தான் சரிவரும் போல கிடக்கு. என்ன செல்லம் சொல்லுறாய்? இல்லே, இவன் டினேஷ்சுக்கு ஊரில கணபதியின்ர பெட்டைக்குக் கலியாணப் பேச் செல்லோ நடக்குது.

என்ரி செல்லம், டினேசுக்கே? அவன் என்ன உழைச்சுக் கொட்டு றான்? கணபதிக்கு என்ன விசரா? அவன்ர மருமகன் வாத்தி வேலே பாக்குது. அவனைத் தானே கேட்டதாக சொன்னாங்க, நீ புதிசா சொல் லுறாய்...?

இல்லேயக்கா, டினேஷ் வெளிநாடு போறான் எல்லோ, அது தான் பெட்டையும் போகும் எண்டு கதைக்கினம். சீதனக் காசிலே ரிக்கற் எடுத் துக் கொண்டு அகதி முகாமுக்கு கூட்டிப் போறானும். அதுதான் அவசரப் படுகினம்.

கணபதிக்கு வெளிநாட்டு மோகம். பிள்ளையை வில்லண்டமாய் அகதி முகாமுக்கு அனுப்ப முயலுகிறார் போல! போலி வேடம் எத்தனை காலம் தான் நிலேக்கப்போகுது? என்ன அகதியிலும் பார்க்க ஆசிரியத்தொழில் என்ன குறைவாய்த் தெரியுதோ கணபதிக்கு. கெடுகுடி சொற்கேளாது. இப்ப ஒரு பக்கத்திலே அவங்க அழிக்கிறாங்கள். மற்றப் பக்கத்திலே அகதி முகாமுக்குப் போற அவசரத்தில அரைகுறை விலேக்கு வித்துப் போற தில ஒரு சந்தோஷம். இதில கணபதிக்கு வெளிநாடு எண்டதும் வாயைப்பிளந்து ஓம் எண்டாராம். கனவுலகில் இப்ப அவரும் அங்க இருப்பதாக ஒரு நினைவு. என் முந்தின மாதிரி எங்கட சனம் சாதா ரணமாக கலியாணம் செய்துவைக்க முடியுதே பார். சும்மா இருந்த வனுக்கு கொழுத்த சீதனம் எண்டால் டாக்குத்தர், எஞ்சினியருக்கு எப் படி இருக்கும்? அவங்க கூட சேவைக்காகப் படிக்கிறாங்களா அல்லது வேள்விக்கு வளக்கிற ஆடுமாடுக்குத் தீனி போடுகிறமாதிரி, ஆடு மாடு கொழுத்தா நல்ல விலே அதுபோலத்தான் அதிகம் படித்தா கொழுத்த சீதனம் எதிர்பாத்தல்லோ. படிக்குதுகள் இதில ஆசிரியத் தொழிலின் மகிமை எங்க தெரியப்போகுது இதுகளுக்கு.

''வீட்டுக்காறர்... வீட்டுக்காறர்''. ஆரு கணபதி அண்ணனே! என்ன புதிசா இந்தப்பக்கம்...? இல்லே பிள்ளே, அதிகம் வெளிக்கிட அவங்கட கூத்தால முடியுதில்லே. இப்ப என்ர மகளுக்கும், டினேஷுக்கும் இந்த வெள்ளிக்கிழமை கலியாணம். அதுதான் சொல்ல வந்தனான் பிள்ளே. திடீரெண்டு வந்துது, செய்துபோடுவம் எண்டுதான்...! ''ஏன் அண்ணே அவசரம்? அடுத்த மாதம் நல்ல நாள் இருக்கெல்லே?'' பிள்ளே, அது வரைக்கும் பாத்தா பிரயாணம் செய்ய முடியாதாம். அதுதான் இப்ப நாள், திகதி, சாதகம் எல்லாம் பாக்க நேரம் எது? நாட்டு நிலேயும் பிளேற் திகதியும் பாத்தெல்லோ வைக்க வேண்டியிருக்கு. இனி எப்ப சேராகிறது. நாம் எப்ப நிம்பதியாகிறது?

''அப்ப அண்ணை கலியாணம் முடிய இரண்டு பேருமா அல்லது வீட் போட போறியளோ?'' இல்லை. முதலில அவையள் போயிற்று பின்தான் நாங்களும் போவம் எண்டு பாக்கிறம். கலியாணச் செலவு வேற கிடக்கு. வாறன் பிள்ளை என்று நடந்தார். அந்தப் பேச்சின் விமர்சனம் வீட்டில் தொடர்ந்தது.

அந்த வெள்ளிக்கிழமை வாணவேடிக்கையுடன் கூடிய திருமணமோ என விமர்சிக்கும் அளவு இரவே தொடங்கிவிட்டது. அடிக்கடி கேட்கும் அந்த வெடி தான் மறுநாள் தினசரி பல செய்தியுடன் பிரயாண வசதி யின்மை, வழியில் கண்ணி வெடிகள், பஸ் கடத்தல் தொடர்வதால் திட்டமிட்ட அவர்களின் பிரயாணமும் தடைப்பட்டது. இச்செய்தி திருமண வீட்டிலும் நிலைதனை மாற்றியது. 18 செலவுடன் சென்றவர்கள் இப்ப 35 வரை தேவையாம். இதுகூட டினேஷுக்கு தலையிடிதான். பார்ப் போர் எல்லாம் பிரயாணத்தை பற்றியே கேள்விகளைத் தொடுப்பர். செல வுக்குப் பணம் கேட்டால் ஒதுங்கும் இனசனம் இப்ப ஏற்பட்ட இடைஞ்சலை சொல்லிக் கேலி செய்வதில் ஒரு ரசனைதான்! வம்பளக்கும் பூனைகளுக்கு விளையாட்டு. டினேஷ் போன்ற எலிகளுக்கல்லோ சிவன் போகுது. கண பதியின் நிலை தர்ம சங்கடம் தான். நின்ற வெள்ளத்தை வந்த வெள் ளம் அடித்துப்போன நிலையில் திண்டாடுகிறார். வெளிநாட்டுச் செக்கால் கடன் அழிக்க கனவுகண்ட கணபதி என்ன செய்வேன் என்ற திகைப் புடன் செயற்பட்டார்.

காந்தனின் செய்தி காதில் விழுந்தது. விடுதலைக்கு ஏற்ற வழிகளும் உண்டாம், பள்ளி மாணவர்களுடன் கணபதியின் மருமகன் வாத்தி சேந்து முயற்சிப்பதான செய்தி கணபதிக்கு எட்டியது.

''செல்லம் என்ன கனநாளாய் இந்தப் பக்கமாய்க் காணேல்ல''. ''இல்லை அண்ணை, காந்தன் வீட்டில கொஞ்சம் வேலை கிடந்தாப்போல'' என்று கதையைத் தொடர்ந்தாள். ''இவன் காந்தன் படிக்கவெண்டு போயிற்றுக் கண்ட பொடியங்களோட சுத்தித் திரிந்ததால்தான் இப்ப இந்த நெருக்கு. இதுக்குப் போய் அரியம் வாத்தியேன் அலையுது? சும்மா இடக்கேலாம வில்லலண்டத்தை எல்லே விலைக்கு வாங்கப்போகிறான்'' என்று மருமகனை திட்டித் தீர்த்தார் கணபதி.

என் அண்ணை இப்ப ஊரே திரண்டு நிக்குது, அதில வாத்தி அரி யம் மட்டும் எட்ட நிண்ட சரியில்லைத்தானே அதுதானுக்கும்... இவங்கட தொல்லையால எங்கடயள் ஒரு இடத்துக்கும் போய்வரப் பாதையில்லை. இவையள் என்ன கெட்டித்தனம் செய்து போட்டினம்? இப்ப சும்மா போய் வந்த எல்லோருக்கும் எத்தனை சோதனை!

''என் அண்ணை, மகள் குடும்பம் புறப்படல்லையோ? இப்போ போற தும் பெரிய சிக்கலாம்''

18, 20 வதிலே போனதுகள் போயிற்றுது. இப்ப செலவு 30–35 வருகுது. கலியாணச் செலவும் போக, இப்ப இரண்டும் போகக் காசும் காணுது. அதுதான் தனிய மருமகன் மட்டும் முதலில் போய் பின் அனுப் புவம் எண்டுதான் இருந்தா, பொடியளின்ர தொல்லையால கொழும்புக் கும் செல்ல முடியாம நிக்குதுகள்.

''ஓமண்ணே, காந்தனும் வரப்போகுதாம். அங்கேயும் அவள் மீரா வுக்குக் கலியாணப் பேச்சல்லே. தங்கம் அக்கா வீட்டில கதை அடிபடு குது, அதுதான் அரியம் வாத்தியும் அக்கறைப் படுறதைப் பாத்தா...''

அப்படியே சங்கதி செல்லம் இவனுக்கு அவங்கட வீட்டுநிலே தெரி யல்லப் போலே. நான்கூட மருமகன் டினேஷைக் கெதியில அனுப்பிவிட வேண்டும். பின் காந்தனும் வந்திட்டா பழைய சினேகிதத்தில... அரியம் வாத்தி அநியாயமாய் அழியப் போகிறுனுக்கும். அவனைக் கண்டால் சொல்லு அவன்ர நன்மைக்குத்தான் நான் சொன்னதாக. நானும் டினேஷின்ர விசயமாக கொழும்புக்குப் போய் அனுப்பி வரப் போறன். இந்த வாரம் எப்படியும் எங்க சுத்தி எண்டாலும் போகத்தான் வேணும். செல்லத்தின் வெறுவாய்க்குக் கிடைத்த வெற்றிலே மாதிரி செய்தி பல கிடைத்த சந்தோஷத்தில் நகர்ந்தாள்.

பல இடம் சுத்தி டினேஷின் பயணம் தொடர்கிறது. கணபதியின் மனம் ஏதோ ஆறுதல் அளிக்க டினேஷின் அகதிப்பயணம் வெற்றியில் முடிந்தது கணபதி வீட்டாருக்கு மகிழ்ச்சி தான்.

கணபதி வீட்டிலே எல்லோர் எதிர்பார்ப்பும் டினேஷின் கடிதம் நல்ல சேதி தரும் என்று. தங்கம் வீட்டிலோ காந்தனின் வரவு கிட்டுமா?... மீராவின் மணவாழ்வு எப்படி அமையப் போகிறது என்று கணபதியின் மகளிற்கோ கன்னி கழிந்து ஒரு மாதம். ஜூனி கடல் கடந்தால்தான் ஏற் படவேண்டும். இன்றைய நிலையில் எதிர்பார்ப்புக்கள் தொடர்கின்றதே தவிர நிறைவேற சுமுக நிலே தோன்றவில்லே.

எதிர்பார்ப்புகள் எவர் வாழ்விலும் இருப்பது நல்லது தான். அதன் தன்மை நன்மை பயக்கும் எதிர்கால வாழ்வின் உரமாக அமைவது தான் நல்லது.

ஏனையோரின் துன்பத்தில் இன்பம் காணும் சிலரது சுயநல எதிர் பார்ப்புகள் ஒருவித திருட்டுத் தனத்தையும் போலி கௌரவத்தையும் காப்பதாகவே அமைந்து விடுகின்றன.

எதை எதிர்பார்க்கிறுய்? அதை எப்படிப் பெற முயல்கிறுய்? அத ஞல் நிரந்தர மகிழ்வை ஏனையவர்களிடம் இருந்து பறிப்பதாக இராது

முயற்சியின் மூலம் பெறுவதால்தான் எதிர்பார்ப்பின் நற்பயனை அனுப விக்க முடியும்.

டினேஷன் கடிதம் பல கதை கூறியது. கணபதி வீட்டில் மகிழ்வு தான். ஆனால் எதிர்பார்ப்புகள் அதுவல்லவே. உடன் பதில் பல கோரிக் கையுடன் தொடர்ந்தது. மனைவியின் வேண்டுதல் விரைவில் சந்திக்க வேண்டும் என, கணபதியோ பணம் அனுப்பும் வழிமுறையுடன் பட்டகடன் பட்டியலும் சேர்ந்து சென்றது.

பாவம் டினேஷ்! அகதிமுகாம் உணவுடன் சிறு தொகை உதவிப் பணம்; இத்தனை கோரிக்கைகளையும் எப்படி நிறைவேற்றுவான்! எத்தனை காலம் ஆகும் என்ற ஏக்கத்தில் எதும் உழைப்பைத் தொடர சட்டம் இடம்தராதிருப்பினும் முயற்சியின் பயன் நண்பர்களுடன் ஏதோ வியா பாரம் செய்து பணம் சேகரிக்க பல வழிகளில் முயன்றான்.

சிறு தொகைப் பணம் கணபதி பேரில் வந்தது. ஊரார் புகழைத் தன்பக்கம் திருப்பப் பலருக்கும் கூறி பெருமை கண்டார் கணபதி. அவரது ஊரில் அகதி முகாம் உண்டு. அதற்கு உதவிட மனம் இல்லா தவர். அவரது குடும்பம் உயர அயல்நாட்டு உதவி பெற்று அடுத்து பய ணத்தையும் தொடர முயன்றார்.

''என்னண்ண, இப்ப காணமுடியிறேல்ல'' என்ற செல்லத்தின் குரல் கேட்டு கணபதி ''ஓம்... ஓம் வீட்டில் ஆரும் இல்லை. அடிக்கடி இவங்கட தொல்லை வேறு அதுதான்! எப்படி தங்கம் வீட்டில... என கேள்விக்கணை தொடுத்தார்.

காந்தன் இவ்வாரம் விடுதலையாம் அதில தங்கம் அக்கா ஓடித் திரி யுது. அரியம் வாத்தியின்ர பள்ளியும் அருகில அகதி முகாமும் அங்கயும் அகதிகளுக்கு உதவிறதில் அதுகளுக்கு ஒரு வேலைதான்.

''என்ன செல்லம் மகனைத்தான் விட்டுட்டு அலையிது எண்டா. இப்ப இதுகளுக்கு என்னும் என்னும் அறிவு வரேல்லையே பார். அரியம் வாத் தியும் அநியாயமாய் போய் மாளப்போகுது பார்.''

''என்னண்ணை ஊரில உள்ளவங்கட உதவி எடுத்துதான் அந்த அகதி முகாமும் நடக்குது. இப்ப அவங்கட உதவியும் இல்லை. செலவுக் கும் வழி இல்லை. அதிலதான் ஊரில அரியம் வாத்தியும் பணம் சேர்க் குது.'' ''சும்மா நெடுகலும் அகதிக்கும், அதுக்கும், இதுக்கும் எண்டு எத்தனையள் சேர்க்குது. இதுக்கெல்லாம் இஞ்சை என்ன கொட்டியா கிடக்கிறது செல்லம்? நாங்க எவ்வளவு செலவு செய்து, அங்க இஞ்ச

போவம் எண்டால் இவங்கட தொல்லை பெரிசாக் கிடக்கு'' எனச் சீறிச் சினந்தார்.

அவர் உலைகூட அகதிப் பணத்தால்தான் ஏறுவதை உணராத கண பதிக்கு வாசல் மணியின் ஒலி கேட்டு வந்த மடல் கண்டு பிரித்தார்.

''மனைவி, மாமா, என் முயற்சிக்கு இங்கு தடைவந்துள்ளதுடன் அரச விசாரணையிலும் உள்ளேன். அடுத்து என்ன நடக்குமோ தெரிய வில்லை. அதுவரை எதுவும் அனுப்ப முடியாது''

என நீட்டோலையினை படித்ததிலிருந்த கணபதி கதவு சத்தம் கேட்ட போது அங்கே டினேஷின் தோற்றம்தான் தெரிந்தது.

அதிக தேவையால் அவனது வியாபாரம் போதை வஸ்து கடத்திய தால் வந்த வினை — நாடுகடத்தப்பட்டான் இன்று அவனும் ஓர் அகதி தான்! அவன் முன் காந்தனின் குடும்பத்துடன் அரியம் வாத்தியும் அன் புடன் வரவேற்க அந்த அகதி முகாம் காத்திருக்கிறது.

[யாவும் கற்பனை அல்ல]

★

# செங்கதிர் விடியல் காட்டிச்.....

— நெடுந்தீவு லக்ஸ்மன் —

மனஇருள் நீங்க அன்பு
மலர்ந்திட உலகமெங்கும்
இனஇருள் தகர்ந்து மாந்தர்
இன்பமாய்க் குலவிப் பாரில்
நனிசிறந் துவகை கொள்ளும்
நாளெனப் பரிதி புரவி
தனில் வரும் திருநாளாகும்
தமிழர் நாள் பொங்கல் புதுநாள்

மங்கல மனையின் மாட்சி
மழலைகள் சிரிப்பின் ஆட்சி
எங்கணும் சிறக்கும் உழவன்
ஏர் வென்ற புகழின் சாட்சி
பொங்கிடும் பசும் பாலோடு
பொலிந்த நெல்லரிசி பொங்க
இங்குவாழ் தமிழர் தம்மின்
இடர் களைந்துரிமை பொங்கச்
செங்கதிர் விடியல் காட்டிச்
செல்லட்டும் பொங்கல் நாளில்.

உடல் பசிக்கு உணவுண்டு
உள்ளக் குறைதீர்க்க ',நான்'' உண்டு.

FOR YOUR NEXT GROCERIES

Visit ,

★ ★ ★

THREE 'G' GROCERY

69, 4th CROSS STREET,
JAFFNA.

We lead other's follow.

# தவிப்பு !

சொந்த நாட்டில் வாழுதற்கு அஞ்சி
சொத்து சுகம் சேர்க்க மனம் விஞ்சி
எந்த நாடு சென்றேனும் வாழ்வோம்
என்பதுதான் எம்மவர்கள் தவிப்பு.

உள்ள பொருள் காணி நகை விற்று
ஊர் முழுதும் வட்டிக் கடன் பெற்று
குள்ளரான ' ஏஜென்சி ' கள் கையில்
கொடுக்கையிலே நெஞ்சினிலே தவிப்பு.

காசு பெற்ற ' ஏஜென்சி ' கள் நாளை
கடத்துகின்றான் என்கின்ற வேளை
" விசா " என்று வருமென்று நாளும்
வழிகாத்து நிற்கையிலே தவிப்பு.

" வந்துளது விசா உடன் கொழும்பு
வருக " வென சேதியினை விளம்பு
தந்தியினை கையினிலே வாங்கும்
தருணமதில் நெஞ்சினிலே தவிப்பு.

கப்பலேறும் நாளதுவும் நெருங்க
கவலைகளும் ஓரளவு சுருங்க
இப்பொழுதே நல்ல காலம் என்று
எண்ணுகின்ற போதும் ஒரு தவிப்பு.

ஆயுத்தங்கள் பல நூறு செய்தும்
அயலவர்கள் விருந்து அன்பு பெய்தும்
நேயத்தைக் காட்டுகின்றபோது
நெஞ்சினிலே தோன்றுவதும் தவிப்பு.

இனசனத்தார் இனியவர்கள் சூழ்ந்து
" இரயி " லடியில் " எயர்போர்ட் " டில் வந்து
மனமுருகி அழுது விடை சொல்ல
மகிழ்வெல்லாம் மறந்த ஒரு தவிப்பு.

அந்தரத்தில் ஊர்தியது இளம்ப
அன்புடையோர் நெஞ்சமெலாம் கலங்க
" இந்த நாட்டு மண்ணதிலே மீண்டும்
என்று மிதிப்போம் " என்ற தவிப்பு.

ஆயிரமாய் இலட்சமாய் சேர்த்தும்
அனுபவித்தும் ஆசைதீரப் பார்த்தும்
தாயகத்தில் வாழ்பவரை நாட்டை
தனக்குள்ளே எண்ணுகையில் தவிப்பு.

ஆண்டுரெண்டு மூன்று என உழைத்து
ஆதனங்கள் பொருள்கள் உடல் இளைத்து
மீண்டும் இங்கு வந்தபோதும் தவிப்பு
மீண்டும் போகவேண்டும் என்றும் தவிப்பு.

நாவண்ணன்

தவிப்பு !

சோதனையிலும் சாதனை செய்து
வேதனையிலும் போதனை தந்து
ஆளுமையால் ஆணவத்தை அகற்றும்
அறிவியல் மஞ்சரி "நான்" பணி தொடர
வாழ்த்துகிறோம்!

சற்றுப் பொறுங்கள்!

உங்களுக்குத் தேவையான
எல்லா விதமான —

எசன்ஸ் வகைகள்,
கேக் சாமான்கள், விளைவு சூடம், வெற்றுப் போத்தல்கள்,
ஓடிக்குலோன், பேக்கரிக்குத் தேவையான
மூலப்பொருட்கள், இனிப்புவகைகள், இன்னும்பல.
நீங்கள் இதுவென்று பெயரிடுங்கள்,
நாங்கள் பெற்றுத் தருவோம்.

ஒரே கூரையின் கீழ்
அங்கும் இங்கும் அலையாமல்
பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் நம்பகமான ஒரே ஸ்தாபனம்

★
★
★

# பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி பின்புறம்)

# வாழ்க்கை வாழ்வதற்கே

— F. L. A. பிள்ளை

பிறப்பு என்று ஒன்று இருக்குமட்டும் இவ்வுலகில் இறப்பு என்பதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். மனிதன் பிறந்தது தொட்டு இறக்கும்வரையில் அவனது வாழ்க்கை முறையானது உளவியற் தாக்கத்துடன் கூடிய மனப்பக்குவத் திற்கு ஒட்டியதாகவே இருக்கின்றது. மனிதன் மனிதனுக வாழவேண்டும். சிந்திக்கத் தெரிந்தவர் சிந்தனு சக்தியை வளர்க்கவேண்டும் என்ற வார்த்தைகள் சொகுசான, பகட்டான வாழ்க்கை வாழுபவர்களிடமும் சேரிகளில் வாழும் வசதியற்ற ஏழைகளிடமும் தாராளமாகப் பரிமாறப் படுகின்றன. மற்றும் மனிதத் தன்மையற்றவன், மனிதாபிமானமற் றவன் என்ற வார்த்தைகளும் மற் றவர்களைச் சாடுவதற்கேற்ப கருவிகளாகப் பலதரப்பட்டவர்களிடையே பயன்படுத்தப்படுகின்றன.

மனிதத்தன்மை, மனிதாபிமானம், சிந்தனு சக்தி என்று வாயினுல் உதிர்க்கும் பதங்களை எந்த அலகினுல் அல்லது அளவீட்டினுல் அளக்கின்றுர்கள் என்பதை நோக்குவோமாயின் ஒருவன் பார்த்திருக்கும் சமூகத்திற்கு ஏற்ப மற்றவர்களைப் பாதிக்காத வகையில் தன் நடைமுறைகளைக் கையாளுவானுயின் அவன் புனிதன், பண்புள்ளவன், பெருமனம் கொண்டவன் என்ற நல்லோரைக் குறிக்கும் சொற்களுக்கு உரியவனுகின்றுன். இதற்கு மாறுக மற்றவர்களைத் துன்புறுத்துவதிலும், கொள்ளை, கொலை செய்வதிலும் பொழுதைக் கழிப்பானுகில் அவன் மனித மிருகம், பகுத்தறிவில்லாதவன், பக்குவமடையாதவன், தாய் தந்தை வளர்த்த வளர்ப்பு சரியில்லை, ஒழுங்கான குடும்பத்தில் பிறக்கவில்லை என்ற கூற்றுக்களுக்கு ஆளாவான்.

மேலும் ஒருபடி சென்று மனித நடத்தைகள் ஏன் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன என்று நோக்குவோமாயின் அவனில் ஏற்படும் உளவியல் தாக்கங்களே அவனது நடத்தையை நிர்ணயிக்கின்றன. எனினும் இவைகள் உளவியல் சிகிச்சைகள் மூலம் மாற்றி அமைக்கப்படுகின்றன. அன்னையின் கருவறையில் இருக்கும்போது அன்னையில் ஆதிக்கம் செலுத்தும் உணர்ச்சிக் கூறுகள் அவனது கரு வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்துகின்றன. கருவறையில் இருக்கும் போது தாய்க்கு ஏற்படும் தாக்கங்கள் சிசுவிற்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஆனுல் இப் பாதிப்பு அவனது செயற்பாட்டில் கூடிய பங்களிப்பைச் செலுத்தாவிடினும்

இவைகளும் அடிப்படைக் காரணங் களாக அமைகின்றன.

அவனது சூழல், சுற்றுடல், சமூக அமைப்பு, பொழுதுபோக்கு கள் உளவியல் ரீதியாக அவனில் மீளசைவு செய்யப்பட்டு அவனை அத் தகைய ஒரு நிலைக்கு உட்படுத்துகின் றன. இத்தகைய உளவியல் தாக்க பிரதிபலிப்புகளுக்கு ஒரு சில விதி விலக்குகளும் இருக்கலாம். இன் னும் சிலர் தமது குடும்பத்தின் கஷ்டநிலையினைக் கண்டு அதிலிருந்து தன் குடும்பத்தை விடுவிக்க வேண் டும் என்ற விடாமுயற்சியின் மூலம் தன்னை யதார்த்தவாதியாக உரு வாக்கி தன் இளைய சகோதரர்களை நல்ல நிலைக்கு இட்டுச் செல்லலாம். இவற்றை சில பெரியார்களின் வாழ்க்கையில் காணக் கூடியதாக உள்ளது. உதாரணம், ஆபிரகாம் லிங்கன், காமராஜர் இத்தகைய முன்னேற்ற வளர்ச்சி ஓர் உளவியல் தாக்க பிரதிபலிப்பின் வெளிப்பாட் டால் ஏற்படும் வெற்றியேயாகும்.

எப்போது ஒருவன் தான் கஷ் டமான குடும்பத்தில் பிறந்தவன், தன்னால் முன்னுக்கு வரமுடியாது, வறுமையில் வாடுபவன், எதற்கும் இலாயக்கற்றவன் எனும் தாழ்வு மனப்பான்மையில் உழலுகின்றானோ அவன் ஒரு போதும் வாழ்க்கையில் முன்னுக்கு வரமாட்டான். மாறாக, தன்னைப் போல் மற்றவர்களுக்கும் எத்தனையோ கஷ்டங்கள் உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண் டும். துன்பமுள்ளவன் துணிச்ச லுடன் கூடிய மனப்பான்மையை வளர்த்து வாழ்வை வளமுள்ளதாக மாற்றி வாழ்க்கை வாழ்வதற்கே என்ற மன உறுதியுடன் வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும்.


மருந்தில்லா மருத்துவம்
மனித மகத்துவத்தின் இருப்பிடம்
மக்கள் மனதில் நிலைத்திடும்
மங்காத அறிவூட்டும் பிறப்பிடம்
'நான்' தரும் தனித்துவம்
வாழ்க வளர்க பல்லாண்டு.

WITH BEST COMPLIMENTS
FROM

X. B. Morais
Dental Technician and Optician
50, CLOCK TOWER ROAD,
JAFFNA.

அறிவுச் ஊரங்கம் "நான்"
ஆளுமையின் சிகரம் "நான்"
எம் உறவில் கலக்கும் :'நான்''
என்றும் வாழ வாழ்த்துக்கள்!

DEALERS IN ALL KINDS OF BICYCLES AND SPARES.
SPECIALIST IN CYCLE REPAIRS
55 YEARS EXPERIENCE

# CYCLE BAZAAR

50, MANIPAY ROAD,
JAFFNA.

Prop: P. Anthonipillai

உளத்தாக்கத்தைப் போக்கி,
உன்னத ஆலோசனை தந்து
உளவியல் நோக்கால்
நல்வழி காட்டும் 'நான்' வாழி!

DEALERS IN PETROLEUM PRODUCTS

# D. A. PILLAI & SONS

Opp. P. W. D. JETTY,
GURUNAGAR.

Prop. D. A. Pillai

# வைத்திய நிலையில் இன்று

— Dr. A. R. கிருஷ்ணசாமி

இன்றைய உலகில் வைத்தியத் துறையில் பல்வேறு மருத்துவ முறைகள் கையாளப்படுகின்றன. ஆயுள்வேதம், அலோபதி போன்றவை முக்கியமானவை. இவற்றில் ஹோமியோபதி போன்றவை மிக வேகமாக நம் மத்தியில் பரவி வருவது கண்கூடு.

இந்த ஹோமியோபதி வைத்தியமுறை 1775ம் ஆண்டு டாக்டர் சாமுவேல் ஹனமன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இப்பெரியார் அலோபதி வைத்தியத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்தும் தன் குழந்தைக்கு ஏற்பட்ட சுகவீனத்தை இவரின் அலோபதி வைத்தியமுறையால் குணப்படுத்த முடியவில்லை. இறுதியில் குழந்தை மரணத்தைத் தழுவியது.

இதனால் விரக்தியடைந்த இவர் இம்மருத்துவத் துறையைக் கைவிட்டார். இம் மருத்துவ முறை தற்காலிகமாகத்தான் நோயைக் குணமாக்குமே அன்றி நிரந்தரமாகக் குணமாக்காது என்று கண்டார்.

இந்நிலையில் இவருக்கு மருத்துவ நூல்களை மொழிபெயர்க்கும் தொழில் கிடைத்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான் இவர் இந்த மருத்துவ முறையைக் கண்டார். இவர் கண்டுபிடித்த உண்மையை வெளியிட்ட போது, இவரை பைத்தியக்காரன் என்று பட்டம் சூட்டினர். இதன் காரணமாக இவர் நாட்டைவிட்டே ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இவரின் சிஷ்யர்கள் இவருடன் இணைந்து உழைத்ததன் காரணமாக இதன் உண்மையை மக்கள் உணர்ந்து, இவரைப் புகழ்ந்து வரவேற்றனர். இன்று, அமெரிக்கா, ஜேர்மன், இந்தியா போன்ற நாடுகளில் வெகு வேகமாக இவ்வைத்தியம் பரவியுள்ளது.

இந்த வைத்தியத்தின் தன்மை பின்வருமாறு :

நெருப்பை நெருப்பால் அணைப்பது, அல்லது பகையைப் பகையால் வெல்லுதல் என்ற தத்துவத்தையுடையது. அதாவது ஒரு நோயை உண்டாக்கக்கூடிய மருந்தை, அதே நோயைக் குணப்படுத்த அதே மருந்தை அனுபிரமாணம் பாவித்தால் அந்நோய் குணமாகும் என்பதாகும்.

டாக்டர் ஹனமன் சில மருந்துகளை தன் உடலில் பிரயோகித்துப் பரீட்சித்தார். பிராணிகளிலோ வேறு இனங்களிலோ பரீட்சிக்கவில்லை.

மருந்தின் தன்மை அனுப்பிரமாணமே. அதாவது ஒருதுளி பாவிக்கும் முறைகளும் மற்ற வைத்தியங்களிலிருந்து வேறுபட்டவை.

சில கொடூரமான நோய்களுக்கும் மிக இலகுவான வைத்தியமுறை இதுவாகும்: மூளைக்காய்ச்சல், மூளைச்சோர்வு, யானைக்கால், மனநோய் போன்றவற்றை மிக எளிதாக மாற்றக்கூடியது.

[ அனுபவம் புதுமை ]

# வேதம் ஓதிய வாசகர்

— சுந்தர் —

நான் ரயிலில் வாசிப்பதற்காக கொண்டு சென்ற சஞ்சிகைகள், புத்தகங்கள் எதுவும் என் கைவசம் இருக்கவில்லை. அவை எல்லாம் சகபிரயாணிகளின் கரங்களில் தாலாடிக்கொண்டிருந்தன. எனக்குப் படிப்பதற்கு ஒரு புத்தகமும் இல்லாதிருந்ததால் நான் கொழும்பு விநியோகத்திற்குக் கொண்டு சென்ற பார்சலைப் பிரித்து ஒரு 'சிரித்திரனை' எடுத்துப் படிக்கலானேன். அருகேயிருந்தவரின் கடைக்கண் பார்வை சிரித்திரனில் பட்டதும் ''தம்பி இந்தப் புத்தகத்தைத் தாரும் படித்து விட்டுத் தருகிறேன்'' என்றார். நானும் அவரிடம் அதைக் கொடுத்து விட்டு வாசிக்க ஒன்றும் இல்லாததால் ரயில் பெட்டியில் எழுதப்பட்டிருந்த வாசகங்களை வாசிப்பதற்காகத் தலையை நிமிர்த்தினேன். என் அருகிருந்த அன்பர் என்னை அதையும் வாசிக்க முடியாத நிலைக்குத் தள்ளிவிட்டார். ''தம்பி உம் மூக்குக்கண்ணாடியைத் தாரும் படித்துவிட்டுத் தருகிறேன்'' என்றார். அதையும் கழற்றி அவரின் கரங்களில் வைத்தேன். அவர் மூக்குக் கண்ணாடியை அணிந்து சிரித்திரனை ஆய்வு செய்பவர் பாவனையில் பக்கங்களைப் புரட்டினார். சிறிது நேரத்தின்பின் திடீரென்று ''பளார் பளார்'' என்று எனது தொடையில் இரு அடிகள் வைத்தார். திடுக்குற்ற நான் ''என்னையா புத்தகமும், கண்ணாடியும் படிக்கத் தந்துதவியதற்கு நீங்கள் செய்யும் கைமாறு இது?'' என்று கேட்டேன். ''ஓசிப் புத்தகம் படிக்கும் தமிழருக்கு உறைக்க அடித்திருக்கிறார் மகுடியார்'' என்றார் அவர், என்னை மகுடியார் என்று அறியாத அவர் எனக்கே அந்தக் கேள்வி பதிலை வாசித்துக் காட்டினார். ''தமிழ் மக்கள் சிங்களம் படித்தால்?'' என்ற கேள்விக்கு, சிங்களப் புத்தகங்களையும் ஓசியில் படிப்பார்கள் எனப் பதில் கூறியிருந்ததையும் படித்துக் காட்டினார். பின்பு உணர்ச்சிவசப்பட்டவராய் சிரித்திரனை மூடி வைத்து ஓசி வாசகர்களைப்பற்றி நீண்ட பிரசங்கம் செய்தார். ரயில் கோட்டை நிலையத்தில் வந்து நின்றபொழுது அவரும் தனது பிரசங்கத்தை நிறுத்திக்கொண்டார். நான் அவரிடம் பிரியாவிடை பெறுமுன் ''ஐயா அடியேனும் உங்களுக்கு ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன்'' என்றேன். ''என்ன? என்ன?'' என்றார். ''தன்னைப் பார்த்துச் சிரிக்கத் தெரிந்தவனே உலகில் உயர்ந்த பண்பாளன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றேன்.

For Your

Next Frozen Foods

Visit

JAffNA PHARMAY

CLOCK TOWER ROAD,
JAFFNA.

'நான்' மலர் சிறக்க
நாம் வாழ்த்துகிறோம்!

உங்கள் தேவை
எங்கள் சேவை
சகலவிதமான பொருட்களும்
சகாய விலையில் பெற
நாடுங்கள்

செந்தில் ஸ்பொட்

2, புனித மரியாள் வீதி,
நாவாந்துறை.

மங்கள விழாக்களை மகிழ்விக்க
சுவையான
சிற்றுண்டி வகைகளுக்கு
நாடுங்கள்!
பற்றிஸ், கட்லற்,
மட்டன்ரோள், கொத்துரொட்டி,
முட்டை ரொட்டி, புறியாணி,
நூடில்ஸ், கேக் வகைகளுக்கு
(ஓடர்கள் குறித்த நேரத்தில்
தரப்படும்)
தரம்! சுவை!! நிதான விலை!!!

அன்ரன் பேக்கரி

K. சந்திரபோஸ்
(சந்திரன்)
புனித அந்தோனியார் கோவில்
முன்பாக
பாஷையூர்.

With

Best

Compliments

From

Suppiah & Co

4, KASTURIAR ROAD,
JAFFNA.

# ஆள் பாதி ஆடை பாதி

வி.பி.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகையானவன். ஒரே மாதிரியான இருவரைக் காண்பது அரிது. இரட்டைப் பிள்ளைகள் கூட ஏதாவதொரு வகையில் வேறுபட்டே காணப்படுவார்கள். ஒரே முகவெட்டு, ஒரே நிறம், ஒரே உடலமைப்பு உடைய இருவர் சிந்திக்கும் திறன், உணர் திறன், பேசும் திறன் போன்ற பலவற்றில் வேறுபட்டுத் தோன்றுவார்கள்.

**தனித்துவமானவன் மனிதன் :**

ஒவ்வொரு மனிதனும் தான் இன்னார் என்று கூறுவதற்கு ஏற்றவாறு அவனில் சில சிறப்பம்சங்கள் தனித்துவமிக்கதாய் காணப்படுவது இயல்பாகும். அவனுக்கென்று ஓர் தனிப்பாணி, தனித்துவமான போக்கு, நடை, உடை, பாவனைகளில் கூடுதலாக, உள, உணர் வெளிப்பாடுகளில் காணப்படும். நான் அவனை / அவளைப் போல் ஆடவேண்டும், பாடவேண்டும் என்று ஏங்குவதும், கொப்பியடிக்க முற்படுவதும் ஒரு வகையில் உளப் பிறழ்வின் அறிகுறியேயாகும். நானே என்னைக்குறித்து அடிக்கடி வெட்கப் படுகின்றேன், எனது நிகழ்கால நிலையைக் கண்டு அருவருப்படைகின்றேன் என்றால் எனது ஆளுமை ஆரோக்கியமான நிலையில் இல்லை என்றே அர்த்தமாகும். மனிதன் தனது ஆளுமையில், தனது ஆற்றல்களில் பெருமை கொள்ள வேண்டும். தனது திறமைகளில், தகைமைகளில் பூரிப்படைய வேண்டும்.

**அவனுக்கு நிகர் அவனே!**

மாறிவரும் சூழலில் ஊறு இழைக்காமல் வாழ முற்படும் மனிதன் ஆறுவதற்கு முன்னரேயே நீறு பூத்த நெருப்பாக மாற்றப்படுகின்றான். கண்மூடித்தனமான கலாச்சாரத் திணிப்புக்கள், பிறரது சொந்த விடயங்களிலே அநாவசியமான தலையீடுகள், தமது தவறுகளை அலட்சியப் படுத்திக்கொண்டு பிறர் நூற்றுக்கு நூறு பூரணத்துவமானவர்களாக வாழவேண்டும் எனக் கட்டாயப்படுத்துதல், இப்படித்தான் உடுக்கவேண்டும், இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற அதிகார மிரட்டுதல்கள், எமது சமூகத்தின் அநாகரிகத்தை, பிற்போக்குத் தன்மையினை எடுத்துக் காட்டுகின்றன. ஆணுக்கொரு சட்டம், பெண்ணுக்கொரு சட்டம் என்று ஆளுக்கொரு சட்டம் அமைப்பது அவசியமற்றதாகும், ஒருவர் தான் விரும்பிய

படி உண்வு உண்பதற்கு, ஆடை அணிவதற்கு, தலை சீவுவதற்குச் சுதந்திரம் இல்லை என்று அறைகூவல் விடுப்பது காட்டுமிராண்டித் தனமாகும்; வெட்கத்துக்குரிய செயலாகும்.

ஒருவன் தனது ஆளுமையினை வளர்க்க முற்படும்பொழுது சமுதாயம் முட்டுக்கட்டையாக விளங்குதல் முறையன்று. ஆள் பாதி, ஆடை பாதி என்ற நிலையில், அதாவது ஆளுமையும் பண்பாடும் இணைந்த நிலையில் மனிதன் உளரீதியாகவும் சமூகரீதியாவும் பரிணும வளர்ச்சி பெறுகின்ருன். அவனுக்கு நிகர் அவனே! அவளுக்கு நிகர் அவளே! என்ற ரீதியில் ஒவ்வொரு மனிதனும் வாழ எத்தனிக்கையில், அவன் / அவள் தனது ஆற்றல்களை வளர்த்து தனது ஆளுமையில் முழுமைபெற முயற்சி செய்கையில், சமுதாயம் ஊக்குவிப்பை வழங்குதலே நியாயமாகும்.

**ஆளுமைச் சிதைவு**

உடற் தோற்றம், உள்ளம், உணர்திறன், இயல்பூக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டமைந்த சக்தித் தொகுப்பதே ஆளுமையாகும். ஒருவரின் ஆளுமைச் சிதைவுகளுக்குத் தனியனுகவும் கூட்டாகவும் பல காரணிகள் செயற்படுகின்றன. இவற்றை அகவயமானவை, புறவயமானவை என இரண்டாகப் பிரிக்கலாம். அகவயமான காரணிகளாக தன்னம்பிக்கையீனம், தாழ்வு உணர்வு, தவருன மதிப்பீடு போன்றவை காணப்படுகின்றன. புறவயக் காரணிகளாக இயற்கையின் எதிர்பாராத நிகழ்வுகள், பிறரது தவருன தலையீடுகள், அநீதியான குற்றச்சாட்டுகள், அழிவுசார் விமர்சனங்கள் போன்றவை செயற்படுகின்றன. தொடர்ச்சியான தோல்விகளும் அடிக்கடி ஏற்படும் ஏமாற்றங்களும் ஒருவரது ஆளுமையைப் பெலவீனப்படுத்துகின்றன. தூக்கமுமின்றி, ஆக்கமுமின்றி அல்லற்படும் மனித உள்ளங்களில் எக்கமே மிகுந்து காணபபடும். முரண்பட்ட உள்ளம், பிளவுபட்ட ஆளுமை, அடிமைப்படுத்தப்பட்ட மனம், அரக்கத்தனமான சுபாவம் சிதைவுற்ற ஆளுமையையே சித்தரிக்கின்றது.

**ஆளுமைச் சீரிணக்கம்**

வேதனையின் விளிம்பில் நின்று வாதனைப்படும் மனிதன், சாதனையை நிலைநாட்ட, ஆளுமைச் சீரிணக்கம் செய்து கொள்வது அவசியமாகின்றது. முரண்பட்ட சக்திகளை தன்னகத்தேயும் புறத்தேயும் கொண்டு வாழும் மனிதன் அகம் சார்பாகவும் சூழல் சார்பாகவும் ஓர் ஒருங்கிசைவை மேற்கொள்ள வேண்டியவனுகின்ருன். நேரிய சிந்தனைகள், சீரிய செயற்பாடுகள், முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் போன்றவை தீவிரமாக்கப்படும்பொழுது மனித ஆளுமை சீராக்கம் பெறுகின்றது. வாழவேண்டும், வளரவேண்டும் என்ற உந்துகை வலுப்படுத்தப்படுவதற்கு மற்றவர்களை வாழவைத்தலும், வளரவைத்தலும் இன்றியமையாததாகின்றது.

ஆளுமைச் சீரிணக்கம் பின்வரும் மூன்று படிநிலைகளில் நிறைவேற்றப்படலாம். அவையாவன :

1. தனிமனித உள்ளத்தில் எழும் போராட்டங்களை இனம் காணுதல்
2. அப்போராட்டங்களுக்கான காரணிகளை உய்த்தறிதல்.
3. அவற்றை வெற்றிகொள்ளும் மாற்றுத் திட்டத்தை வகுத்தல்.

மனித உள்ளம் மனத்திற்கும் மனச்சான்றிற்குமிடையே, போலிக்கும் உண்மைக்குமிடையே, அறியாமைக்கும் அறிவிற்குமிடையே, அரக்கத்தனத்திற்கும் இரக்கத்திற்குமிடையே போராட்டத்தை நிகழ்த்தி வருகின்றது. சிலவேளைகளில் அன்பொழுகப் பேசுபவன் வேறு சந்தர்ப்பங்களில் வேங்கை போலச் சீறிப் பாய்கின்றான். பலதும் படித்தறிந்த அறிஞனும் சில சந்தர்ப்பங்களில் பாமரத்தனமாய் செயற்படுகின்றான். பலவற்றில் பலசாலியாகக் காணப்படுபவன் சிலவற்றில் பலவீனமாகக் காட்சியளிக்கின்றான். இவ்வாறு எழும் உளக்கொந்தளிப்புகளையும் மனப்போராட்டங்களையும் இனங்கண்டு, அவற்றிற்கான காரணிகளை உய்த்தறிந்து, அவற்றை முறியடிக்கும் மாற்றுத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்த வேண்டும். இம் மாற்றுத் திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும். அவையாவன:

1. ஒருவர் தன்னிலுள்ள பலங்களையும் பலவீனங்களையும் ஆராய்தல்.
2. தன்னிலும் ஏனையோரிலும் காணப்படும் திறமைகளுக்கும் நற்பண்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.
3. வாழ்வில் பிரச்சனைகள், தோல்விகள், ஏமாற்றங்கள் ஏற்பட்டதும் உடனே நம்பத் தகுந்த ஒருவரிடத்தில் ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துதல்.
4. ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஆர்வத்தோடு ஈடுபடல்.
5. தனது ஆற்றல்களை நினைவுகூர்ந்து தன்னைத்தானே பாராட்டிக் கொள்ளுதல்.
6. பிறரைப்பற்றி அநாவசியமாய் குறை கூறும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல்.
7. நேர அட்டவணைப்படி வாழ்க்கை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்
8. ஒழுங்காக ஓய்வு எடுத்தலும் மீளாய்வு செய்தலும்.
9. சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களை அன்றாடம் காலையிலும் மாலையிலும் நினைவு கூருதல். உ-ம்: யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம், உதவி செய்து உயர்வடைவோம், பொது நலம் காப்போம் – புதுயுகம் படைப்போம், அகந்தையை ஒழிப்போம் – ஆற்றலை வளர்ப்போம், மடமையை ஒழிப்போம் – அறிவினை வளர்ப்போம்.

பண்பாட்டின் பெயரில் தனிமனித சுதந்திரம் பறிக்கப்படுதல் முறையன்று. எவரையும் எதற்கும் அடிமையாக்குதல் கூடாது. ஆளுக்கோ அன்றேல் பொருளுக்கோ அடிமையாகுதலும் கூடாது. தனிமனித வாழ்க்கைக்கு, தனிமனித வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காத, ஒருதலைப் பட்சமான சட்டங்களும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் திட்டமிடப்பட்டு முறியடிக்கப்படவேண்டியவையே. ஒவ்வொரு மனிதனிலும் தான் முக்கியமானவன் என்ற உணர்வே முதன்மைப்படுத்தப்படுகின்றது எனக் கருத்துரைக்கின்றார் உளவியலாளர் கால்யுங். மனித மாண்பினை மேம்படுத்தாது, மனிதனை மட்டம் தட்டும் பண்பாட்டுக் கோலங்கள் வானவில்லின் வர்ணஜாலங்கள் போன்றதேயாகும். தனிமனித ஆளுமை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகத் திணிக்கப்படும் . பண்பாட்டுப் பலாத்காரம் விரும்பத் தகாததேயாகும்.

விதவைகள் பொதுவான வீட்டுச் சடங்குகளில் பங்குகொள்ளக் கூடாது, அவர்களில் விழித்தால் தீட்டுப்பட்டுவிடும். பெண்கள் பேதைகள், ஆண்கள் ஆள்பவர்கள், போன்ற பழமைவாதங்கள் வேண்டப்படாதவையே. ஆண்கள் கேட்டால் உரிமை. பெண்கள் கேட்டால் ஆணவம் என்ற மனநிலை மாற்றப்படவேண்டும். இருபாலாரும் ஆளுமை வளர்ச்சிக்கு தடைக் கல்லாய் இராது, நல்ல முன்மாதிரிகளைப் படிக்கற்களாக்கி வாழ முற்படவேண்டும். ஒரு முறை செய்த தவறிற்காக ஒருவன் சாகும் வரை தண்டனை அனுபவிப்பது அவசியமற்றதாகும். உதாரணமாக ஒருவன் தான் செய்த குற்றத்திற்காக ஓராண்டுசிறைத் தண்டனை அனுபவித்தபின் திருந்திய உள்ளத்தோடு ஒரு புதிய வாழ்க்கையை வாழவேண்டும் என்ற நோக்கோடு வீட்டிற்கு வருகின்றான். ஆனால் சமுதாயம் அவனுக்கு அழியாத பட்டத்தைச் சூட்டி, அவனை மீளவும் ஒரு சமூகவிரோதியாக மாற்றி சிறைக்கு அனுப்புகின்றது, சித்திரவதை செய்கின்றது. தனிமனிதனின், சமூகங்களின் நியாயமான எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவேண்டும். உத்தமமான உறவுகள் உதயமாக வேண்டும். நித்தமும் மனிதனை மனிதனாக மதிக்கின்ற, மனித முன்னேற்றத்திற்கு முதலிடம் கொடுக்கின்ற பண்பாடுகள் வளர்க்கப்படவேண்டும்.

**நேரிய சிந்தனை :**

மனிதருள் மாணிக்கங்கள் இலைமறை காய்களாகத் திகழுகின்றார்கள். அரும்பெரும் தன்மைகளை, ஆற்றல்களைத் தம்மகத்தே கொண்டு வாழும் இவர்களை இனம் காணுவது மனித வளர்ச்சிக்கு அவசியமாகும். மனிதன் தன்னிலுள்ள திறமைகளை, சிறந்த பண்பாடுகளை, சமூகத்திலுள்ள நல்ல பழக்கவழக்கங்களை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண

ருதல் வேண்டும். தன்னால் முடியும் என்ற எண்ணம், தனது திறமைகளில் நம்பிக்கை, தானோ அன்றேல் மற்றவர்களோ திறமையாகச் செயற்படும்பொழுது பாராட்டுதல், அனுகூலமான சமுதாய ஈடுபாடுகள், பரந்த மனப்பான்மை போன்றவை நேரிய சிந்தனையில் ஊறிய நல்வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

> ''எனினும் நான் மகிழ்வுறுகிறேன். எனது ஆற்றல்களை நினைந்து அகமகிழ்கின்றேன். என்னோடு பேசுவதை, என்னோடு பழகுவதை, என்னோடு சேர்ந்து வாழ்வதைப் பலர் விரும்புகின்றார்கள். எனது வாழ்க்கை விழுமியங்கள், எனது செயற்பாடுகள் ஒரு மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்கி வருகின்றன''.

என்று மனநிறைவுடன் வாழுகின்ற மனிதர்களே பேறுபெற்றவர்கள். மகிழ்வில்லாத மனித வாழ்க்கை மகத்துவமற்றது. இலட்சியமில்லாத மனிதமனம் பாலைவனம் போன்றது. மனித உணர்வுகளை, மனித பண்பாடுகளை மதித்து, மற்றவர்களை

மகிழ்வித்து மகிழ்கின்ற,
வளர்வித்து வளர்கின்ற
வாழ்வித்து வாழ்கின்ற,

மனிதர்களே மகத்துவமானவர்கள். ஆழப்படுத்தப்பட்ட ஆளுமையை அவர்கள் வெளிப்படுத்தி ஆற்றலுடன் வாழுவார்கள்.

---

# வாழ்க்கைக்கு சில யோசனைகள்

1. வாடிய நாரில் வாடாத மலரைத் தொடுக்கும் சமுதாயம் வாடாத நாரில் வாடிய மலரை தொடுப்பதில்லையே.

2. உன் நம்பிக்கையை பணத்தின் மீது வையாதே. பணத்தை நம்பிக்கையான இடத்தில் வை.

3. நீ உனக்காக உருவாக்கும் நியாயம் அநியாயம்.

4. தன்னம்பிக்கை அற்றோரின் பாதை தடைக்கல்லே. தன்னம்பிக்கை உள்ளோரின் பாதை படிக்கல்லே.

5. நிழல் உண்டானல் அங்கு பொருளிருக்கும். சிந்தனை சரியாக இருந்தால் செயல் செம்மையுடன் விளங்கும்.

---

# சிந்தி! திருந்திடு!

இந்து சமுத்திர மத்தியின் முத்தென
முந்து கவிஞரும் மெத்தவே மெச்சினர்
சந்தி சிரித்திடும் விந்தையை இத்தினம்
சிந்தி! திருந்திடு! புத்தியைப் பெற்றிடு!

புத்த ரளித்திட்ட சத்திய போதனே
மெத்த மறந்திட்ட புத்தியர் சாதனே
யுத்த களத்திடை நித்திய வேதனே
செத்த தமிழ்க்குடி எத்தனே நீ நினே!

மெத்த மகத்துவம் தம்மிடம் உண்டென
சித்த மனேத்திலும் ''தம் நலம்'' கொண்டனர்
மெத்த மிகப்பல ''தலைமைகள்'' பூண்டனர்
ஒத்த மனம்தனே தம்முள் இழந்தனர்.

பாதி உடைமையை 'சிரினர்'' கொன்றனர்
மீதி உடைமையை ''தலைமைகள்'' தின்றன
போதி உறவினர் தம்மிடை ஒன்றினர்
பாதி கேட்டவர் பாதைகள் மாறினர்.

ஒற்றுமை தான்பலம் என்றவர் இன்றெனில்
சற்றுமே தான்அதன் சிந்தனே இன்றியே
சொற்கணே யால்தமுள் வக்கணே பகன்றிடு
பிற்குணம் தானது நீங்குதல் என்ருே?

பாதி அழிந்ததை மீட்குதல் முடியுமா?
மீதி அழிவதை காக்குதல் ஆகுமா?
சேதி அதுதனேப் பார்த்திருப் போமெனில்
மீதி உயிரதும் போகுதல் ஆகுமே!

நித்தியம் ஒற்றுமை காத்திடு வோமெனில்
இந்தலம் வெற்றியும் பெற்றிடு வோமே!
சத்தியம் நித்தமே காத்திடு வோமெனில்
சித்தியும் நிச்சயம் பெற்றிடு வோமே.

— யாழூர் அழகன்



# ஆசானின் பதில்கள்

**கே. நான் என்பதே ஆணவத்தைக் குறிக்கும் சொல் என எதிர்க்கும் சமூகத்தில் ஆசானின் பதில்கள் என கர்வத்தொனியில் பதில் தர முனைவது ஏன் ?**

முருகையன், கிளிநொச்சி

ப. நான் என்ற ஆணவத்தை அழிக்க ஓர் ஆசானின் வழிகாட்டலும் வேண்டுந்தானே? 'நான்' என்ற ஆணவம் அழிந்தவரே ஆசானுகும் தகுதியும் உடையோர். கர்வமுடையோர் ஆசானுகும் தகுதி அற்றோர். எனவே 'ஆசானின் பதில்கள்' என்ற தொடரில் கர்வம் இருக்க முடியுமா? வழிகாட்டல் தான் இருக்கும். தொடர்ந்து ஆசானோடு உறவாடுங்கள் ஆசானை அறிவீர்கள்.

**கே. ஆசானே! உளவியல் என்றால் என்ன ? மனிதனுக்கு முக்கியமானதா ? விளக்கமாகக் கூறவும்.**

ராஜேஸ், மன்னார்

ப. 'மனித நடத்தை' பற்றிய ஆய்வுதான் உளவியலாகும். மனிதன் புற உலகையும் அதனோடு தொடர்புடைய தன்னையும் காலம்தோறும் புதிது புதிதாக அறிந்து வருகிறான். சமூக இலக்கத்தில் தன் நடத்தை பற்றி அறியும் ஆர்வத்தில் விஞ்ஞான பூர்வமாக அவன் மேற்கொண்ட முயற்சிகளே உளவியலாயிற்று. தன்னையும் சமூகத்தையும் அறிந்துகொள்வது முக்கியமாயின், உளவியலும் மனிதனுக்கு முக்கியம் தானே?

**கே. ஆசான் அவர்களே, பிறக்கும் புத்தாண்டில் மக்களிடம் எதனை எதிர்பார்க்கின்றீர் ?**

கௌரி, நல்லூர்

ப. மக்கள் மக்களாக வாழவேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

கே. உளவியல் ரீதியில் சகல மனிதப் பிரச்சனைக்கும் தீர்வு காணமுடியு மானல், மதங்கள் அல்லது மதவழிப் போதனைகள் தேவையானது தானு ?

செ. மதியழகன், வளலாய்

ப. இதயமில்லாத இந்த உலகத்திலே இதயமாக மதம் இருக்கிறது. உங்களுக்கு வருகின்ற சகல துயரங்களையும் உங்களின் சகல ஒளிவு மறைவுகளையும் நீங்கள் நம்புகின்ற கடவுளைவிட இச்சமூகத்தில் வேறு யாரிடம் மனம் விட்டுச் சொல்வீர்கள்? அல்லது சொல்லத்தான் முடியுமா? மற்றவர்களிடம் கடவுள்போல் நம்பிக்கை வைக்கின்ற 'பரலோக ராஜ்யம்' ஒன்று இங்கு தோன்றும் வரை மதங்களும், மதவழிப் போதனைகளும் நிலைத்தே நிற்கும். உளவியல் ரீதியில் மாத்திரம் சகல மனிதப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண முடியாது. எனெனில் மனிதனின் இலக்கு சக்தி உளவியல் மாத்திரம் அன்று.

கே. சமகால இலக்கியச் சர்ச்சைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களைப்பற்றி, ( ஈழமுரசு, மல்லிகை, ஈழநாடு பத்திரிகையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சர்ச்சை ) யும் அவர் தம் பிணக்குகள் பற்றியும் '' நான் '' வாசகர்க்கு சற்று விளக்கமாகத் தர முடியுமா ஆசானே ?

செ. தவலட்சுமி, சாவகச்சேரி

ப. நீங்கள் இரண்டு வினுக்களை வினுவுகிறீர்கள். ஒன்று பிரச்சனை பற்றி; மற்றது பிணக்கு பற்றி. பிரச்சனை இது தான்.

1. எழுதுவதைத் தெளிவாக எழுதவேண்டும்என ஒரு சாரார் கூற, எல்லாவற்றையும் தெளிவாக எழுதுவது சிரமம் என இன்னெரு சாரார் கூறுகின்றுர்கள்.

2. விமர்சகன் படைப்பாளிக்கு வழிகாட்டத் தேவையில்லை என ஒரு சாரார் கூற, விமர்சகனின் வழிகாட்டல் படைப்பாளியை நெறிப் படுத்தும் என இன்னெரு சாரார் கூறுகிறுர்கள்.

நீங்கள் வினுவிய பிரச்சனை பற்றிய சாரம் இதுதான். இதனடியாகவே பிணக்குகள் எழுந்தன. தனிமனித உறவுகள், தாம் வரித்துக்கொண்ட கொள்கைகள், மற்றவர் பற்றிய உளப்பதிவு என்பன பிணக்குகளுக்குக் காலாயின. அவற்றை விபரித்தல் ஆசானுக்கு அழகன்று.

கே. மெய் வருந்தக் கூலி தரும் என்ற முதுமொழிக்கு உமது விளக்கம் என்ன ?

செல்வி ப. தவநந்தினி, இருபாலை

ப. உழைப்பீர்! உயர்வீர்!

கே. எதிர்பார்ப்புகள் அனைத்திலும் தோல்வியையே கண்டு மனம் துவளும் ஒருவன், தன் வாழ்வின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறி ஒரே ஒரு முறை நிகழ்ந்த தோல்வித் தடத்தால் மனம் மறுகும் இன்னொருவன். உளவியல் ரீதியில் அதிக பாதிப்புக்குள்ளாபவர் இவ்விருவருள் யார்?

ந. விமலாம்பிகை

ப. இரண்டாமவன்.

கே. ''மனோ ஏன் இப்படிச் செய்தாள்'' என்ற சம்பவத்தில் 'நான் பிரயோசனம் அற்றவள்' என்ற வசனம் என்னைக் கவர்ந்துள்ளது. ஆனாலும் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் தாழ்வு மனப்பான்மை என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே. வாழ்வில் சிலர் தற்கொலை புரிகிறார்கள். இன்னும் சிலர் தியாகம் செய்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை கட்டுப்பாடுகளுடன், வழிப்படுத்தப்படும் பெண்களிலும் ஆண்களே தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ஈழராணி, யாழ்ப்பாணம்

ப. இறுதி வசனத்திலேதான் உங்கள் வினா வெளிப்படுகிறது. முயற்சிகளுக்கு ஏற்ப வெற்றி கிட்டாதபோது – சமூகத்தில் தனக்குரிய இடம் தரப்படாதபோது தாழ்வு மனப்பான்மை தோன்றுகிறது. இச்சமூக அமைப்பில் இவை ஆண் பெண் இருபாலாருக்கும் நடைபெறுகிறது. எனவே இருபாலாரிலும் தாழ்வு மனப்பான்மை கொண்டோருண்டு. எனினும் இச்சமூகம் ஓர் ஆண் ஆதிக்கச் சமூகமாகும். ஆணே முதன்மையாவன் என்பதே இப்போதைய சமூகத்தின் விதி. முதன்மையாக தனக்கு உரிய இடம் கிடைக்கவில்லை என்பதே பெண்களைவிட ஆண்களிடம் இப்பண்பு கூட இருப்பதற்குக் காரணம்.

கே. எதிர்பார்ப்பிற்கும், ஆசைக்குமுள்ள வித்தியாசம் என்ன?

யஸ்ரின், சுரேந்திரன்

ப. எதிர்பார்ப்பில் நிட்சயம் இருக்கும் – ஆசையில் நிட்சயமின்மை இருக்கும்.

# உளக் குண முறை

ஆளுமைக் கோளாறுகளை உளவியல் முறைகளைக் கொண்டு சிகிச்சை செய்வதை "உளக் குண முறை' எனலாம். உளவழி நரம்பு நோய்களைக் குணப்படுத்துவதற்கு இம்முறை தெரிந்தெடுக்கப் படுவதோடு இது சிறந்த பயன்களையும் தந்துள்ளது. கருத்தேற்றம், நன்மதி கூறல், விளக்கம், அறிவுரை, தூண்டுதல், அறிதுயில் ஆகியன முன்பே பயன்படுத்தப்பட்டு வரும் சில முறைகளாகும். இவற்றிற்கு முன்பிருந்த பெருமை இன்று இல்லை எனினும், இவை அறிகுறிகளை உடனடியாக நீக்குகிறதாலும், பயன்படுத்த எளிதாகையாலும் இன்று பாரியளவில் பயன்படுகின்றன.

இவை மேல்வாரியாக அறிகுறிகளை நீக்குவதிலேயே கவனம் செலுத்துகின்றன எனவும், ஆதாரமான உளப் போராட்டங்களைப் புறக்கணிக்கின்றன எனவும், இம்முறைகளால் தற்காலிக நோய் நீக்கமே கிடைக்கிறது எனவும் குறை கூறப்படுகின்றது. மேலும் நோய் நீக்குபவருக்கு முனைப்பான பங்கினைத் தந்து, நோயாளியைச் சார்ந்து நிற்கச் செய்வதுடன், செயலுறுமலும் இருக்கச் செய்கின்றன என்பது மற்றைய குறைபாடாகும்.

இன்றுள்ள புதிய முறைகளில் தன்னுடைய சிக்கல்களைப் பகுத்தாய்வதிலும், சிகிச்சை செய்வதிலும் நோயாளி திறம்படப் பங்கெடுத்துக் கொள்கிறுர். அறிவுரையாளர் முன்னைவிட செயலற்ற பங்கினை மேற்கொள்ளுகின்றுர். நோயாளி தாமாகவே சிந்திக்கவும், தம் கருத்துக்களைத் தடையின்றி வெளியிடவும் ஊக்குவிக்கப் படுகின்றுர். நோயைக் குணப்படுத்துபவர் மிகக் குறைவாக உரையாடி, அடிப்படையான பிரச்சனையைக் கண்டுபிடிக்கின்றுர்.

— சாள்ஸ் யஸ்ரின் சுரேன் —

உளக்காலுதல் (Mental Catharsis), உளப் பகுப்பாய்வு (Psycho Analysis), பலவந்தமில்லாக் குணமுறை (Non – directive Therapy) என்பன புதிய சில நுண்முறைகளாகும். இம் முறைகளைப் பரந்து பயன்படுத்துவது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் இம்முறைகளைப் பயன்படுத்தச் சிறப்புப் பயிற்சி பெற வேண்டும். இம்முறைகள் நோயைக் குணமாக்க அதிக காலம் எடுக்கின்றன. இம்முறை பணச் செலவை அதிகரிக்கும்.

ஆனால் இரு உளக்குண (பழைய, புதிய) முறைகளைப் பாவிக்கும்போதும் நோயாளிக்கும், குணப்பத்துபவருக்கு மிடையே பரஸ்பர ஈட்டம் இருக்கவேண்டும்.

விளக்கின்றி ஒளியில்லை விளம்பரமின்றி வியாபாரமில்லை

# MANIKKURAL ADVERTISING SERVICE

★ வர்த்தகப் பெருமக்கள் வளம்பெற வழிகாட்டி ★

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையங்களிலும்,
மினிபஸ் தரிப்பு நிலையங்களிலும் நிற்கும்
பிரயாணிகள் கேட்டு மகிழ

தினமும் காலை முதல் மாலை வரை
இசை சேர்த்து ஓசை தரும் ஒப்பற்ற விளம்பர சேவை.

## மேஜர் ஷண் நடாத்தும்

# மணிக்குரல் விளம்பர சேவை

ஆண் — பெண் இரு குரல்களுடனும்
இன்னிசையும் சேர்த்தளிக்கும் அற்புத விளம்பர ஒலிபரப்பு

உங்கள் விளம்பரத் தேவைகள் எதுவானாலும்
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

# MANIKKURAL

மத்திய பேருந்து நிலையம் யாழ்ப்பாணம்.

# ஒரு விமர்சனம் கதையாகிறது!

— ராணி மேரி

திடீரென்று கண் விழித்தேன். அறையில் 'லைற்' இன்னமும் எரிந்துகொண்டிருந்தது. வயலட் எதையோ எழுதிக்கொண்டிருந்தாள். மணி 12–40 மேசைக் கடிகாரம் காட்டியது. இவள் என்ன எழுதுகிறாளோ? சமீபத்தில் பரீட்சையும் இல்லை அவசரமாகக் கொடுக்க வேண்டிய ரியூட்சும் இல்லை.

''வயலட், இவ்வளவு நேரமாகியும் நித்திரை கொள்ளாமல் என்ன எழுதுகிறாய்?''

''சிறு கதை விமர்சனமொண்டு அவசரமாக எழுதவேண்டியிருக்கு; அதுதான் எழுதுறன்.''.

எனக்கு எரிச்சல் வந்தது — நடுச்சாமத்தில் விமர்சனம் எழுதுகிறாளாம். ''அது இந்த நேரத்திலையா எழுதுகிறது? பேசாமல் படு; நாளைக்கு எழுதலாம்''

''ஏன் மல்லி 'லைற்' எரியிறது உனக்குத் தொந்தரவா இருக்கா? இதை நாளைக்கு அனுப்பவேணும் அதுதான் அவசரமாக எழுதுறன்.''

'' 'லைற்' றால எனக்கொரு இடைஞ்சலும் இல்லை. இந்த நேரத்திலை நித்திரைகொள்ளாமல் இருக்கிறியே எண்டுதான் சொல்றன். சரி, நீ எழுது''.

நான் மறுபக்கம் திரும்பிப் படுத்தேன். வயலட் ஒரு எழுத்தாளி, ஓய்வு நேரங்களில் கதை, கட்டுரை எழுதுவாள். பல்கலைக் கழகத்திற்கு வந்தது முதல் கடந்த இரண்டு வருடங்களாக இருவரும் இந்த அறையில்தான் குடித்தனம், ஒரே வகுப்பு, மல்லிகா என்ற பெயரைச் சுருக்கி மல்லி என்று அன்பாகக் கூறிப்பிடத் தொடங்கியதும் வயலட்தான். நான் திரும்பவும் தூங்க ஆரம்பித்தேன்.

''மல்லி, பிளீஸ் ஒருக்கா எழும்படி. கொஞ்சம் 'ஹெல்ப்' பண்றியா?''

வயலட் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள். கண்களைக் கசக்கிக்கொண்டே அவளைப் பார்த்துக் கேட்டேன். ''என்ன ஹெல்ப்? எழுத்து வேலை தரப்போறியா?''

''இல்லை எழும்பிவா சொல்றன், பிளீஸ்'' என்னைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் மேசைக்குப் பக்கத்தில் இருந்த மற்றக் கதிரையில் இருத்தினாள் வயலட். எனக்குச் சற்றுக் கோபம் கூட வந்தது, நித்திரையைக் குழப்பிச் சாமத்திலே எழுப்பி உட்கார வைத்து விட்டு...... ஒரு சிநேகிதி என்ற உரிமையில்தானே இப்படிச் செய்திருக்கிறாள். எல்லோரிடமும் இப்படிச் செய்வாளா? என்ற எண்ணம் மனதில் எழுந்து எனது கோபத்தை அடக்கியது.

''மல்லி, ரீ போடுறன். இதை வாசி'' என்று கூறியவள் வெட்டிய பத்திரிகையினை என் பக்கமாகப் போட்டுவிட்டு ஹீட்டரைப் பிளக்கில் செருகிறாள்.

''சரி, விடமாட்டியே'' என்று கூறிக்கொண்டே முகத்தைக் கழுவி விட்டு அலுமாரியில் இருந்த லட்டு ரின்னைத் திறந்து ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு அந்த ரின்னை வயலட்டிடம் கொடுத்துவிட்டுப் பத்திரிகையினைக் கையில் எடுத்தேன். 'வீரகேசரி'ப் பத்திரிகையின் ஒரு பக்கம்; பெனடிக்ற் பாலன் எழுதிய ''கீழைக்காற்றும் ஓங்கி வீசும்'' என்ற சிறு கதை —

''சத்தியநாதன் – உதவி வங்கி முகாமையாளர், பூரணி – ஆசிரியை. சத்தி மூன்று வருடமாகக் காதலித்தவளைக் கைவிட்டு சீதனத்திற்காகப் பூரணியை மணந்துகொண்டவன். வேறொருவனே தனக்கேற்றவன் எனப் பூரணி நினைத்திருந்தாள். ஆயினும் அந்த நினைவுகள் மனதைவிட்டு வெளியாகு முன்பே அவள் சத்தியின் மனைவியானாள். அவள் எதிர்பார்த்த வாழ்க்கை அமையவில்லை. பூரணி கூறுவதுபோல், சத்தி இரவில் சதை இரப்பவனாகவும் பகலில் உயிரை வதைப்பவனாகவும் இருந்தான். ஒரு விடுமுறை நாளில் இன்னமும் பிள்ளைகளில்லாத அவர்களின் வாழ்க்கை காலையில் ஆரம்பிக்கும் விதத்தை ஆசிரியர் சித்தரித்திருந்தார். சத்தி பூரணியை ஒரு வேலைக்காரியிலும் கேவலமாக நடத்தினான். சிறிய விடயங்களிலும் அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் — ஒருவருக்குப் பிடித்த உணவு மற்றவருக்குப் பிடிக்காது — ஒருவருக்கு இனித்த சினிமாப் பாடல் மற்றவருக்குக் கசந்தது. காலையில் படுக்கையறையில் ஆரம்பமான கசப்புணர்வு மதியபோசனத்தின் முன்பே பூரணியின் மீது அடி உதைகளாக விசுவரூபமெடுத்தது. பிரச்சினையின் உச்சக் கட்டத்தில் பூரணி தாலியையே கழற்றி எறிந்துவிட்டாள்''. இவ்வாறு கதை முடிகிறது.

வாசித்து முடித்துவிட்டு வயலட்டைநோக்கினேன். ஆவி பறக்கும் தேநீரை எனக்கு நீட்டினாள். முகத்தில் பட்ட குளிர்ந்த நீரும் வயலட்டின் சுவையான தேநீரும் தூக்கக் கலக்கத்தை முற்றாக விரட்டியடிக்கவே நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். வயலட் சொன்னாள்,

''மல்லி, உந்தக் கதை முடிவைப்பற்றி ஒரு விமர்சனப் போட்டி; நாளைக்கு எப்பிடியெண்டாலும் அனுப்ப வேணும். அதைப்பற்றி உன்னோடை கதைக்கிறதுக்குத்தான் உன்னையெழுப்பி உதிலை இருத்தியிருக்கிறன். உந்தக் கதையிலை பூரணி எடுத்த முடிவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''உப்பிடியான முடிவுள்ள வேறு கதைகளையும் 'வீரகேசரி'யிலை வாசிச்சிருக்கிறன். மண்டூர் அசோகாவின் ''நாணல்கள் நிமிர்ந்தால்''இல் வரும் நித்தியாவும், நித்தியகீர்த்தியின் 'சுமைகள் குறைகின்றன'வில் வசந்தாவும்; அருண் விஜயராணியின் ''கற்பு நிலையொன்று சொல்ல வந்தால்...'' இல் வரும் வித்யாவும் பூரணியின் முடிவைத்தான் எடுக்கினம். ஆனால் அவை ஒவ்வொருவருக்கும் காரணங்கள் வேறு. அடிச்சு, உதைச்சு அவமதிச்சாலும் ஒரு பெண் கணவனுடன்தான் வாழவேண்டுமென்பது அவ்வளவு சரியாக எனக்குப் படவில்லை. துணையொண்டு தேவையென்பதற்காக மனிதப் பண்பில்லாத ஒருவனைக் கணவனாகக் கொண்டு வாழ ஏலுமா? ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே படைத்தவனுடைய நோக்கம் — அதில்தான் வாழ்வும் முழுமை பெறுகிறது. ஆனால் வாழக் கூடியவர்களுடன்தான் வாழமுடியும் இல்லையா? கழுத்தில் தாலி ஏற வேண்டுமென்பதற்காக யார் அதைக் கட்டினாலும் கழுத்தை நீட்ட முடியுமா? கட்டியபின் அவன் ஒரு கணவனுக்குரிய நிலையில் இருந்து இறங்கி விட்டால் கட்டிவிட்டானே என்பதற்காக அந்தத் தாலியைத் தொடர்ந்தும் அணிந்துகொண்டிருப்பதில் ஏதாவது அர்த்தம் இருக்க முடியமா? கணவன் தன் நிலை தவறினால் அவன் கட்டிய தாலிக்கு என்ன மகிமை?''

''நீ சொல்றது சரிதான் மல்லி, கணவனுக்குரிய தன்மை இல்லாத ஒருவனுடன் குடித்தனம் செய்ய முடியாதுதான். அதிலும் சத்தியநாதனைப் போல ஒருவனுடன் வாழவே இயலாது. அது ஒரு நரக வாழ்க்கையெண்டதையும் நான் ஒப்புக்கொள்ளுறன். அதே நேரத்திலை இன்னொரு கோணத்திலையும் பாக்க வேண்டியிருக்கு?''

''என்ன கோணம்?''

''கல்யாணம் ஆனவங்க இப்பிடிப் பிரிஞ்சுபோனால் அவங்கிடை பிள்ளைகள், ஒழுக்கம், சமுதாயக் கட்டுக்கோப்பு எல்லாம் என்ன ஆகிறது?''

''கணவனைப் பிரிந்து விட்டால் பிள்ளைகள் வாழ்வு பாழாகி விடுமென்று ஒரு தகுதியில்லாத துணையுடன் ஒரு பெண் எத்தனை நாளைக்கு வாழ முடி

யும்? அது மட்டுமா, சத்தியநாதனைப் போன்ற ஒரு தந்தையுடன் இருப்பதால் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் என்ன நன்மை ஏற்படப் போகிறது? தினமும் தாயுடன் சண்டைபிடித்து அவளை அடித்து வதைக்கும் ஒரு தகப்பனிடமிருந்து அவர்கள் என்னத்தைத்தான் கற்றுக்கொள்ள முடியும்? தகப்பனில் வெறுப்புத்தான் மிஞ்சும். ஏச்சு, அடி, உதை, அழுகை நிரம்பிய அமைதியற்ற வீட்டுச் சூழலை விட்டு ஒதுங்கியிருக்கவே பிள்ளைகளும் விரும்புவார்கள். இந்த நிலையில் பிள்ளைகளின் படிப்பு பாழாகிறது மட்டுமல்ல வீட்டிலிருக்கும் நேரத்தைத் தவிர்ப்பதற்காக அவர்கள் தகுதியில்லாத சிநேகிதர்களோடையும் எதிர்பாலாருடனும் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனாலை வேறை பிரச்சினைகள் உண்டாகுது''

''நீ சொல்றதைப் பார்த்தா மல்லி, பிள்ளைகள் தகப்பன்ரை பாசத்தை அறியாமலே வளரவேண்டி வருமே, தாய் தந்தையின்ரை அன்பு பிள்ளைகள் சீராக வளர்கிறதுக்குத் தேவை''

''வயலட், சத்தியநாதனைப் போல ஒரு தகப்பன் பிள்ளைகளிலை மட்டும் அன்பு காட்டுவானெண்டு நினைக்கிறியா? மனைவியை வெறுக்கிறவன் அவள் பெறும் பிள்ளைகளை மட்டும் தூக்கிச் சீராட்டுடப் போறுனே? பிள்ளைகளும் அன்பிலை பிறந்த பிள்ளைகளாக இல்லாமல் வெறுப்பிலை பிறந்ததுகளாகத்தானிருக்கும். தகப்பன் சில சமயம் சாக தாய் பிள்ளைகளை வளர்க்கயில்லையா? சத்தியநாதனைப் போல ஒரு தகப்பன் இருந்தாலும் இல்லாவிட்டலும் ஒண்டுதான்.''

''கணவன் — மனைவி பிரிஞ்சு வாழுறதாலை ஏற்படும், ஒழுக்கம், சமுதாயக் கட்டுக்கோப்பு சம்பந்தமான பிரச்சனையள் பற்றி நீ என்ன சொல்லுறாய் மல்லி?''

கணவன் — மனைவி பிரிஞ்சு போறதாலை சமுதாயக் கட்டுக்கோப்பு உடைஞ்சு ஒழுக்கக் குறைவு ஏற்படுமெண்டால் வயலட், சீரில்லாத ஒரு துணையுடன் வாழுறதாலைஒழுக்கம் எந்த விதத்திலை உயர்ந்துவிடும்? பரஸ்பர அன்பு குடும்ப வாழ்வுக்கு உயிர். அது குடும்பத்தில் கிடைக்காதபோது வெளியில் அதனைத் தேட வெளிக்கிட்டால் ஒழுக்கத்திற்குப் பங்கம் வாராதா? எந்த ஒரு மனித உயிரும் அன்புக்காக ஏங்குகிறது; அன்பு கிடைக்கவேண்டிய இடத்தில் கிடைக்காதபோது அது கிடைக்ககூடிய இடத்தை மனிதன் நாடுகிறுன். இந்த வகையில் கொடுமைக் காரக் கணவனின் மனைவி இன்னொரு துணையையும் அடங்காப் பிடாரியின் கணவன் வேறொரு பெண்ணையும் நாடக்கூடும். இப்படியான சம்பவங்கள் எத்தனையோ இன்று இரகசியமாக நடக்குது. அப்போதெல்லாம் ஒழுக்கத்தின் நிலை என்ன? திருமணம் ஆயுள்காலப்

பந்தம், அது நிலைத்திருக்கிறது கணவன் — மனைவி கையிலைதான் இருக்கு. இந்தப் பந்தத்தின் புனிதத்தை உணராதவர்கள் சேர்ந்து வாழுறதிலை அர்த்தமோ சந்தோஷமோ இல்லை. சமுதாயம் தனது அங்கத்தவருக்கு நல்லதொரு துணையைக் கொடுக்காவிட்டால் அதன் கட்டுக்கோப்பு உடையத்தான் செய்யும். ஏனெண்டால் நல்ல குடும்ப களின்ரை கூட்டுத்தான் நல்ல சமுதாயம், கழுத்தை நீட்டினதுக்காக ஒருத்தி எவ்வளவு நாள் அடியும் உதையும் படுவது? சமுதாயக் கட்டுக் கோப்பையும், குடும்ப ஒற்றுமையையும் காக்க பெண்கள்தான் அடியும், உதையும்பட வேண்டுமா; ஏன் அதனைக் காப்பாற்றுவதிலை ஆண்களுக்குப் பங்கில்லையா; அல்லது பெண்சாதிமாரை அடிச்சு உதைச் சுத்தான் குடும்பத்திலையும், சமுதாயத்திலையும் கட்டுப்பாட்டை காப் பாற்றலாம் என்று ஆண்கள் நினைக்கினமோ? மொத்தத்தில் பூரணி செய்தது எனக்குச் சரியாகவே படுகிறது. சத்தியநாதன் பூரணியை ஒரு அடிமையாகவெல்லோ நடத்தினன். ஏன் அவள் அந்த அடிமை வாழ்வைச் சகிக்கவேணும்?''

''மல்லி, நூறு 'தாங்ஸ்' உனக்கு, நீ இவ்வளவு சொல்லுவாய் எண்டு நான் எதிர்பார்க்கவில்லை. இதை வைச்சு நான் நல்லதொரு விமர்சனம் எழுதிப்போடுவன். இன்னொரு ரீ போட்டுத் தாறன் குடிச் சிற்று நீ படு, உன்னோடை 'டிஸ்கஸ்' பண்ணினது எவ்வளவு நல்லது பாத்தியா? உவ்வளவு விஷயத்தையும் தலையுக்கை வைச்சுக்கொண்டு நித்திரை கொள்ளப் பாத்தியேடி'' எனக் கூறிவிட்டுத் தேநீர் தயா ரிக்கத் தொடங்கினள் வயலட். நேரம் அதிகாலை 2-46.

''அதிருக்க வயலட் என்னோடை மட்டும் 'டிஸ்கஸ்' பண்ணிப் போட்டு எழுதினல் சரிவருமோ?''

''நான் ஏற்கனவே கலியாணமான ஆக்களோடை இதைப்பற்றிக் கதைச்சனன். எல்லாத்தையும் தொகுத்துக்கொண்டு கடைசியாகத் தான் உன்னோடை 'டிஸ்கஸ்' பண்ண இருந்தன். இண்டைக்குப்பின் பின்னேரம் கதைப்பமெண்டிருந்தன்; அதுக்கிடையிலை நீ 2-30 படத் துக்கு இழுத்துக்கொண்டு போட்டாய். நானும் பிறகு அதை மறந்து போனன். படுக்கிறதுக்கு முந்தி மேசையை ஒழுங்கு பண்றபோது எழுதிக் குறையிலை விட்ட இந்தப் பேப்பர் கண்ணிலை பட்டுது'' எனக் கூறியவாறே வயலட் தேநீரை நீட்டினள்.

''அவை என்ன சொல்லிச்சினம்''.

''நான் சந்திச்ச கலியாணமான ஆண் — பெண் எல்லோரும் பூரணியின்ரை முடிவு சரி எண்டுதான் சொல்லுகினம்'' நான் தேநீ ரைக் குடித்துவிட்டுப் படுத்தேன்; வயலட் எழுதத்தொடங்கினள்.

ஆண்டு பல வளர்ந்தவன் " நான் "
ஆளுமை எம்மில் வளர்த்தவன் " நான் "
என்றும் வழிகாட்டும் " நான் " வாழ்க வளர்க.

# பெமலி காடின்ஸ்

களைப்பாறி, இளைப்பாறி, உண்டு மகிழ
குருநகர் வங்கசாலை வீதியில் அமைந்திருக்கும்

★ நவீன குளிர்பான சிற்றுண்டிச்சாலை ★

- நெல்லிரசம்
- முந்திரிகை ரசம்
- பெசன் கோடியல்
- தேனீர்
- காப்பி

இது மட்டுமா? உங்களுக்குத் தேவையான

- ஜாம்
- கோடியல்
- இனிப்பு வகைகள்
- சொக்கலேட்
- பிஸ்கட் வகைகள்
- மாஜரீன்
- பட்டர்

இன்னும் பல
ஒருமுறை நீங்கள் விஜயம் செய்தால்
மறுமுறை எம்மை நாடுவீர்கள்

# பெமிலி காடின்ஸ்

( சிற்றுண்டிச் சாலை )

நவீன சந்தை ( வங்கசாலை வீதி அருகில் )
குருநகர் ( சின்னக்கடை )
யாழ்ப்பாணம்.

# "நான்"
# வரலாற்றுக் கண்ணோட்டம்

— தொகுப்பு : லு. கிறேஷியன்

இன்றைய இளைஞர்கள்தான் நாளைய தலைவர்கள். அவர்களின் ஆளுமையின் வளர்ச்சியில்தான் எதிர்கால சமூகத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது. வாழ்க்கையின் இளமைப்பருவம் இனிமையானது. ஆனால் இவ் இளமைப் பருவத்தில்தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. காரணம், அப்பருவத்தில்தான், அவன் வாழ்க்கை என்றால் என்ன? அதை எவ்வாறு அமைக்க வேண்டும்? சந்தேகங்கள் சரியானதா? இன்பங்கள் வளராதா? என்ற ஏக்கங்கள் அடிமனதில் தோன்றுவதை உணர ஆரம்பிக்கின்றான். அவ்வாறான உள்ளங்களின் அவல நிலையைப் போக்கி, அமைதியான வாழ்க்கையை அமைத்து, உண்மையை உணர்வதற்கும், உயர்ச்சியை அடைவதற்கும், மற்றவரின் உள்ளத்தை இலகுவாகப் புரிந்து கொள்வதற்கும், உலகோடு ஒத்து வாழ்வதற்கும் ஏற்றதாக்கி, நொருங்கிய உள்ளங்களை மெருகூட்டி வளர்ப்பதற்கும், உடைந்த உறவுகளைப் புதுப்பிப்பதற்கும், உயர்ந்த குறிக்கோளை வலுப்படுத்துவதற்கும் ஒரு வழிகாட்டி வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்த கண்டி, அம்பிட்டிய குருமடத்தில் பயின்றுகொண்டிருந்த சகோதரர்கள் இவ் இளம் உள்ளங்களுக்கு எங்ஙனம் உதவலாம் என சிந்திக்கலாயினர். தாம் நேரில் சந்தித்து உரையாடினால் ஒரு சிலருக்கே தமது உதவி கிடைக்குமாதலால், ஒரு சிறு பத்திரிகை வாயிலாக தமது உதவிகளை, குறிப்பாக உளவியல் கருத்துக்களைப் பரிமாறினால் அநேகம் பேர் பயன் அடைவர் என்ற கருத்தை அருட்திரு சிங்கராயர் அவர்கள் முன்வைத்தார். இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், இறையியல் மாணவர்களான அன்ரனிப்பிள்ளை, ஜெரூட் ஆகியோரால் "நான்" என்னும் தலைப்பிடப்பட்டு உளவியல் மஞ்சரியாக 1975 ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதன்முதல் வெளியிடப்பட்டது.

1976ம் ஆண்டு மார்கழி மாதம் வரை மூன்று மாதத்துக்கு ஒருமுறை வெளிவர ஆரம்பித்தது. ஒவ்வொரு முறையும் ஒரு கருத்தை மையமாகக் கொண்டு படைப்புக்களைப் படைப்பதென்றும், பிரதி ஒன்றின் விலையை ஒரு ரூபாவிலிருந்து 35 சதத்துக்கு குறைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் இம் மஞ்சரிக்கு பல எதிர்ப்புக்கள் தோன்றின. குறிப்பாக பொருளாதாரப் பிரச்சனை மேலோங்கி நின்றது. இதனால் சஞ்சிகைப் பிரதிகளின் தொகை 1000 — 1200 இருந்து 500 ஆக குறைவடை

யத் தொடங்கியது. ஆயினும் வாசகர்களின் ஒத்துழைப்பினாலும் சகோதரர்களது முயற்சியினாலும் இம்மஞ்சரியின் வளர்ச்சி பலமடைய ஆரம்பித்தது.

''நான்'' வளர்ந்து கொண்டிருக்கும் வேளையில் ''ஞானதீபம்'' ''புதிய உலகம்'' போன்ற சஞ்சிகைகள் தோன்ற ஆரம்பித்தன. இவ்வேளையில் தான் ''நான்'' சஞ்சிகையை நிறுத்திவிட்டு தம்மோடு இணைந்து பங்காற்றும்படி ''நான்'' குழுவினர் கேட்கப்பட்டனர். எனினும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இவ்வாறு ஆரம்பகாலம் தொடக்கம் இற்றைவரை பல கஷ்டங்கள் வந்தபோதும் சலிப்படையாது இளைஞரின் அறிவுக்கு மெருகூட்டி, ஆற்றலுக்கு உரமூட்டி, அசையாத நம்பிக்கையில் இளைஞரை வழிநடத்தி சாதி, சமய வேறுபாடுகளின்றி சமூகத்தில் தோன்றியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வுகாண விழைந்துகொண்டிருக்கின்றது ''நான்'' உளவியல் மஞ்சரி. மதம் கடந்த இதன் பணி மேலும் பரவலாக்கப்பட்டு வருகின்றது.

''நான்'' மஞ்சரி இளைஞருக்கு மட்டும் அன்றி அனைத்து பருவத்தினருக்கும் உகந்த உயர்கருத்துக்களையுடைய ஒரு அறிவுக் களஞ்சியம் ஆகும். எதிர்காலத்தில் எம் நாட்டில் அநேக எழுத்தாளர்கள் உருவாக வேண்டும், புதிய படைப்புக்களைப் படைக்க வேண்டும் என்பதனை விரும்பும் ''நான்'' புதிய எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. உளவியல் கருத்துக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பது என்ற நோக்கில் எழுத்தாளர்களாகும் நீங்கள் உங்களின் படைப்புக்களை உளவியல் கருத்துக்களுடன் இதழ்களின் தலைப்புகளுக்கேற்ற படைப்புகளையே படைக்கவேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றது. மேலும் உங்கள் ஆக்கங்களை தெரிவு செய்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. பலதரமான கட்டுரைகள், கதைகள் கிடைத்தும், பொருளாதாரப் பிரச்சனையின் காரணமாக ஒரு சில படைப்புக்களையே பிரசுரிக்க முடிகின்றது. எழுத்தாளர்கள் தமது முயற்சியைக் கைவிட வேண்டிய அவசியமில்லை. தொடர்ந்தும் எழுதுவதையே ''நான்'' விரும்புகின்றது.

ஈழத்தில் வெளியாகும் அநேகமான சஞ்சிகைகளில் ''நான்'' சஞ்சிகையே ஓர் உளவியல் சஞ்சிகை என்பதை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதும் பெருமைக்குரியதும் ஆகும். ஆனால் இம் மஞ்சரியை வளர்த்து இதன் நிலைப்பாட்டினை நீடிக்கச் செய்வது வாசகர்களைப் பொறுத்ததே. குறிப்பாக ஒவ்வொரு வாசகரும் தம் நண்பர்களுக்கும் அறிந்தவர்களுக்கும் ''நான்''ஐ அறிமுகம் செய்து அவர்களையும் சந்தாதாரராக்கி இதன் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்.

ஈற்றில், ''நான்'' என்ற பதம் ஆணவத்தை அல்ல; ஆளுமையையே குறிக்கின்றது. நாம் என்ற சமுதாயம் வளர்வதற்கு நான் என்ற ஆளுமை வளர்வது அவசியமாகின்றது. நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்.

# குழந்தைக்கீடாமோ

கூன் பிறை நிலவு நாணும்
தண்ணொளி வதனம் கண்டு
மான் விழி மருளாத் தேங்கும்
மென் மலர் விழியின் வீச்சு
ஏன் மொழி எமக்கிங் கென்று
இன்னையும் மொழிய அஞ்சும்
தேன்மொழி ஊற்றின் மூலம்
மழலை யென் குழவிதானோ ?

அந்திவான் அழகின் தேட்டம்
அரம்பையின் கலையின் ஆட்டம்
சுந்தரப் பிறப்பின் கூட்டம்
சுடரொளிக் கதிரின் கோட்டம்
அந்தர மின்னல் ஓட்டம்
சிந்தையைக் கிள்ளும் நாட்டம்
எந்தையர் புவியிற் சொன்ன
அணியெலாம் குழந்தைக் கீடோ ?

குஞ்சியெழில் வஞ்சியரை
கோலமயில் தோகைதனை
வெஞ்சமரில் வென்றவரை
வேல் எடுத்து நின்றவரை
தஞ்சமென வைத்த கவி
பாயிரங்கள் யாவுமொரு
கொஞ்சு மொழி சிந்துகவி
குழந்தை தனக் கீடாமோ ?

குங்குமச் சிமிழாய்த் தோன்றும்
கோதையர்க் கழகு கூட்டும்
மங்கலம் தந்தே வாழ்க்கை
பேற்றினை உயர்த்தும் பாரில்
தங்கிடும் துயர்கள் தம்மை
தகர்த்திடும் வலிமை தன்னால்
பொங்கிடும் மனித வாழ்வின்
பூரணம் குழந்தை தானே!

— வளவை வளவன்

தன்னம்பிக்கையூட்டும் நானே
தாழ்வு மனப்பான்மை அகற்றும் நானே
நம் இனத்தின் வழிகாட்டி நானே
நீ வளர்க! வாழ்க! வழிகாட்டுக!

பெமலி சொப்

யாழ் 225, நாவலர் வீதியில் —
ஒரே கூரையின் கீழ்
உங்களுக்குத் தேவையான எல்லாவித

- சாப்புச் சாமான்கள்
- அலங்காரப் பொருட்கள்
- கேக் சாமான்கள்
- பலசரக்கு வகைகள்
- அன்றாட பாவனைப் பொருட்கள்
- கராய்கறி வகைகள்

எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

★

நாடுங்கள்

பெமிலி சொப்

225, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

★

கிளை :

பெமலி காடின்ஸ்

நவீன சந்தை,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

# உள விளையாடல்கள் பலரகம்

— ரூபன் மரியாம்பிள்ளை

"அவன் ஒரு பச்சைக்கள்ளன். முன்னுக்கொண்டு பின்னுக் கொண்டு சொல்லி நேரத்திற்கேற்ற மாதிரி நடிப்பான். பேக்காட்டக் கூடிய இடத்தில் பேக்காட்டியும் விட்டுவிடுவான். அவனை நம்ப ஏலாது" — இது போன்ற வார்த்தைகளை மற்றவர்கள் அனுப்போடு சொல்வதைக் கேட்டிருக்கிறோம். நாம் அனுபவத்தோடு சொல்லியும் இருக்கிறோம்.

உள்ளத்தின் மறைவான நோக்குடன் நடத்தப்படும் இந்த விளையாட்டுக்களை உளவியலாளர் "எரிக் பொண்" (Eric Berne) உள விளையாட்டுக்கள் என அழைக்கிறார். அவர் 1964ம் ஆண்டு எழுதிய 'Games people play' என்னும் ஆங்கில நூலில் இந்த உள விளையாட்டுக்கள் பற்றி விரிவாக ஆராய்கிறார். நாம் எமது வாழ்க்கையில் சந்திக்கும் இந்த உள விளையாட்டுக்கள் பற்றி உளவியலாளர் எரிக் பெர்ணின் கருத்துப்படி மிகவும் சுருக்கமாக ஆராய்வோம்.

உளவியல் விளையாட்டுக்கள் தொடக்கமும் முடிவும் கொண்டு மறைவான நோக்குடன் நிகழும் செயலுறவாகும். இவற்றிற்குப் பல காரணங்கள் இருப்பினும் அன்பின்மைதான் பொதுவான முக்கிய காரணமாக அமைகிறது. இந்த விளையாட்டுக்களால் நன்மையும் தீமையும் உண்டு. எல்லா உயிரினங்களிலும் இந்த விளையாட்டுக்கள் அவற்றின் நிலைக்கேற்ப நடைபெறுவதை நாம் காணலாம். விலங்குகள் தம் கவர்ச்சியால் தம் இன விலங்குகளைக் கவர்வது விலங்குகளின் உள விளையாட்டாகும். மலர்கள் மகரந்தச் சேர்க்கையை நிகழச்செய்வது இயற்கையின் ஒரு விளையாட்டாகும். இந்த இயற்கையின் விளையாட்டை யாரும் நிறுத்த முடியாது. இந்த இயற்கையின் விளையாட்டுக்கள் பற்றி எரிக் பெர்ண் தன் "Sex in human loving" எனும் புத்தகத்தில் விரிவாக ஆராய்கிறார்

மனித விருப்பங்கள், ஆசைகள், உணர்ச்சிகள் எல்லாம் சமூகத்தில் நிறைவேறுபவை அன்று. நிறைவேறாத ஆசைகளை மனிதன் வலுக்கட்டாயமாக நிறைவேற்றத் துடிக்கும்போது அவை சமுதாயத்தையும் சமூகப் பண்பாட்டையும் பாதிக்கும். இவற்றை நிறைவேற்றத் துடிக்கும் அவன்

நிறைவேறாத வேளைகளில் சமூகத்தில் இருந்து தப்பி ஓடவும் முடியாது தவிக்கிறான். எனவே அவற்றை மறைமுகமாக அடைய ஒரு குறுக்கு வழியைக் கண்டுபிடிக்கின்றான். இந்தக் குறுக்கு வழிதான் உள விளையாட்டாக அமைகிறது. இந்த உள விளையாட்டுக்கள் வழியாக மனிதன் தன்னிலே ஏற்றுக்கொள்ள மறுக்கும் சினம், அச்சம், குற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மை, இயலாமை, வெறுப்பு, அழுகை ஆகிய உணர்ச்சிகளைத் தவிர்த்து மனச்சுமையை நீக்கி வாழ்வில் வெற்றி பெறத் துடிக்கிறான். இந்த உளவிளையாடல்களில் அறிவைவிட உணர்ச்சிக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. அறிவிற்கு இடம் தராது உணர்ச்சிக்கு மட்டும் இடம் தரும்போது உள விளையாட்டுக்கள் தீமை தரும்.

1. **தன்னில் பிறரைப் பிரதிபலிப்பது**

மற்றவர்களிடம் இருக்கும் நற்பண்புகளையும் கருத்துகளையும் உடை நடை பாவனைகளையும் ஆராய்ந்து பார்க்காமல் கண்மூடித்தனமாக அப்படியே ஏற்பதுதான் தன்னில் பிறரைப் பிரதிபலிப்பதாகும். மற்றவர்கள் போல் வாழவும் அதே சமயத்தில் தன் விருப்பப்படி வாழவும் துடிக்கும் இவன் இரண்டிற்கும் ஒரு சமரசம் ஏற்படுத்திக்கொள்ளாமல் தவிக்கும் ஒரு நிலைதான் இதுவாகும். இதனை ஆங்கிலத்தில் Hero Worship என அழைக்கிறோம்.

2. **பிறரில் தன்னைப் பிரதிபலிப்பது**

தன்னில் இருப்பதாகக் கண்டறிந்த ஒரு குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக அதனைத் தன்னில் ஏற்றுக்கொள்ளாது ஏதாவது சாட்டுச் சொல்லி அதனைப் பிறரில் தன்னைப் பிரதிபலிப்பதாகும். ''ஆடத் தெரியாதவனுக்கு மேடை சரியில்லை'' எனும் பழமொழியையும் ''எல்லாரும் செய்தாரங்க நானும் செய்தேன்'' என்ற சாட்டு மொழியையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

3. **அறிவு சார்ந்த விளக்கம் கொடுத்தல்**

என்ன நடந்தாலும் எப்படி நடந்தாலும் 'தான்' எனும் நிலையை இறுகப் பற்றிக்கொள்வதற்காக தனக்குத் தோல்வியோ, அழிவோ ஏற்படும் வேளைகளிலும் அறிவு சார்ந்த விளக்கம் கொடுத்து தாங்கள் செய்வது பிழை எனத் தெரிந்தும் சரி என வாதாடித் தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் நிலையே இதுவாகும்.

இந்த உள விளையாட்டுக்களில் ஒரே ஆள் பல வேடங்களைப் புனைந்து பல மனித நிலைகளில் மாறிமாறித் தோன்றக் கூடும். இவ்வாறு அவர்கள் வழக்கமாகப் புனைகின்ற வேடங்களை மூன்று வகைப்படுத்தலாம். **(1) துன்புறுத்துபவன் (Presecutor), (2) மீட்டவன் (Rescuer), (3) துன்புறுபவன்**

(Victim). இதற்கான சரியான உதாரணத்தை ஒரு குடும்பத்தில் நாம் காணலாம். மகன் குற்றம் செய்யும்போது தந்தை தண்டிக்கத் தாய் பரிந்து பேசுகிறாள். இங்கு தகப்பன் துன்புறுத்துபவனாகவும், தாய் மீட்பவளாகவும், மகன் துன்புறுபவனாகவும் ஆகின்றனர். அதே குடும்பத்தில் வேறு ஒரு சமயத்தில் மகனின் குற்றத்திற்குத் தாய் தண்டிக்க தகப்பன் பரிந்து பேசுகிறார். இங்கு தாய் துன்புறுத்துபவளாகவும், தகப்பன் மீட்பராகவும், மகன் துன்புறுபவனாகவும் மாறுகின்றனர். இன்னுமோர் சந்தர்ப்பத்தில் மகனுக்கு அதிக செல்லம் கொடுத்து விட்டதாகத் தாய் கடிய, தகப்பன் தன் தவற்றை உணர, மகன் இனிக் குற்றம் செய்யமாட்டேன். என மன்னிப்புக்கேட்கிறான். இங்கு தாய் துன்புறுத்துகிறாள்; மகன் மீட்கிறான், தகப்பன் துன்புறுத்தப்படுகின்றார். இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் நேரத்திற்கும் இடத்திற்கும் தேவைக்கும் ஏற்ப உள விளையாடல்களில் வேறுபட்ட தோற்றங்களைப் புனைகிறான். சமூகத்தில் ஏமாற்றுபவர்கள், ஏமாறுபவர்கள், உதவி புரிபவர்கள் ஆகியோரும் இப்படியே செயற்படுகின்றனர்.

நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதரின் உள விளையாடல்கள் சிலவற்றை இங்கு பார்ப்போம். ஒவ்வொருவரின் நடத்தையின் பின்னணியையும் காரணத்தையும் கூர்ந்து கவனிக்கும் ஒருவர் அவர்கள் விளையாடும் உள விளையாட்டையும் அதற்கான காரணங்களையும் கண்டுகொள்ளலாம்.

1. **குடிகாரன்** — ஒருவன் தாங்க முடியாத துன்ப நிலைகளை அனுபவிக்க அழைக்கப்படும்போதோ, விரக்தி மனப்பான்மையாலோ, வாழ்வில் தோல்வியாலோ குடிக்க முற்படுகிறான். தோல்வி, தனிமை, வெறுமை, அன்பின்மை, மதிப்பின்மை என்பவற்றிலிருந்து வெற்றி பெற மனிதன் விளையாடும் உள விளையாட்டுத்தான் குடி. இவர்கள் தாம் செய்வது பிழை எனத்தெரிந்தும் "நான் செய்யிறது தவறுதான்" என்று தன் குற்ற உணர்வை வெளிப்படுத்துவது மூலமோ "பழகிவிட்டேன் இனி விட ஏலாது" என்றோ "குடிக்கிறது உடம்பிற்கு நல்லதுதானே" என்றோ அறிவு சார்ந்த விளக்கங்களைக் கொடுத்து தம் விளையாட்டைத் தொடர்ந்து நடாத்துவர்.

2. **தாழ்வு மனப்பான்மை உடையோர்** — ஏற்க முடியாத தாழ்வு மனப்பான்மையை நீக்குவதற்காக உயர்வு மனப்பான்மையைத் தன்னில் கொண்டிருப்பதுதான் இவர்கள் விளையாட்டு. எதிலும் உயர்வு பெற வேண்டும் என்பதற்காக எல்லாம் தெரிந்தவர்போல் நடித்து எல்லாவற்றிலும் தடக்கி விழுவர்.

3. **குற்ற உணர்வினர்** — இவர்கள் தம் குற்ற உணர்வை மறைப்பதற்காக மற்றவர் குற்றத்தையே எப்போதும் பேசுவர் அல்லது திருத்த

முயல்வர். அவனது குற்ற உணர்வு குறுகுறுப்பதால் தன்னையும் திருத்த முடியாது மற்றவரையும் திருத்த முடியாது தவிப்பர். "உன்னைத் தெரியாதா?", "பெரிய சுத்தமான ஆள் எண்டு நினைப்பு" என்று மற்றவர்கள் கேட்டுவிடுவார்கள் என்பதற்காக இந்த வார்த்தைகளை தாமே பாவித்து விளையாடுகின்றனர்.

4. **போட்டி மனத்தவர்** — போட்டியில் தோற்றுவிடுவோம் என்று பயப்படுபவர்களும், மற்றவர்களை எனக்கு மேலே போகவிடக்கூடாது என நினைப்பவர்களும், சிறுவயதில் ஏற்றுக்கொள்ளப்படாதவர்களும், உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கப்படாதவர்களும் இந்த விளையாட்டை விளையாடுவர். இவர்கள் எப்போதும் எதிலும் போட்டி மனத்தவராக இருப்பர். இந்தப் போட்டிக்காக எத்தனை உறவுகளை முறிக்கவும், பகைக்கவும், யாருடன் சண்டை போடவும் இவர்கள் தயங்குவதில்லை.

5. **தனிமை விரும்பி** — தனது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்க மாட்டார்கள், எனக்கு உயர்ந்த மதிப்புக்கொடுக்க மாட்டார்கள் எனப் பயப்பிடுகிறவர்கள் தனிமையை விரும்பி மற்ற எல்லோரையும் குற்றம் சாட்டுவார்கள். மற்றவர் செய்த எதிலும் குற்றத்தையும் குறையையும் கண்டுபிடிப்பர். நல்லதைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள். தன்னோடு யாராவது சேர்ந்துவிட்டால் அவரை எப்போதும் தன்னோடு வைத்திருந்து மற்றவர்களுக்கும் எதிராக்கித் தனக்கு நன்மை சம்பாதிப்பார்கள். இவர்களது தனிமைவிளையாட்டு கலையும்போது வாழ்வில் மிகவும் வருந்துவர்.

6. **பெருமை பாராட்டுபவர்** — இந்த விளையாட்டு விளையாடுகிறவர்கள் தமது இயலாமையை ஏற்றுக்கொள்ளாது மற்றவர்களை மட்டம் தட்டிக் கொண்டிருப்பர். தமக்குப் புகழ்சேர்ப்பதற்காக எந்த வேலையையும் செய்யத்தயாராக இருப்பர். எப்போதும் தம்மைப்பற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதோடு தாம்தான் உலகிலே முக்கியமானவர்கள்போல் நடிப்பர்.

7. **இருதலைக்கொள்ளி எறும்பினன்** — இவர்கள் எல்லோரையும் எல்லா நேரங்களிலும் திருப்திப்படுத்தும் விளையாட்டை விளையாடுவர். குற்றங்களைச் சுட்டிக்காட்டவோ, சொல்ல வேண்டியவற்றைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லவோ துணிவில்லாத இவர்கள் எல்லோரையும் திருப்திப்படுத்த முனைவர்.

இது போன்று இன்னும் பல உளவிளையாட்டுகளை எரிக் பெர்ண் தனது "Games people play" என்னும் புத்தகத்தில் ஆராய்கிறார்.

இந்த உள விளையாட்டுக்களால் நன்மையும் தீமையும் உண்டு என மேலே கண்டோம். நன்மையான உள விளையாட்டுக்களை எப்படி விளையாடுவது என்பதைப் பார்ப்போம்.

(i) உண்மை உருவை உலகிற்குக் காட்டி விளையாடினால் அவனுக்கும் சமூகத்திற்கும் பயன் உண்டு. எனவே முகமூடிகளை அணிந்துகொள்ளாது உண்மை உருவை உலகிற்குக் காட்ட முற்பட வேண்டும்.

(ii) எப்படியும் முன்னேறிவிட வேண்டும் என்ற எண்ணத்தைவிட்டு தன் குறைகளையும் நிறைகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு அவற்றில் வாழ்ந்து வெற்றி பெற முயல வேண்டும்.

(iii) எல்லா விளையாட்டின் உட்பொருளும் பிறர் தொண்டிற்கு ஊன்று கோலாக வேண்டும். தன்னை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்காட்டாது தானும் மற்றவரும் முன்னேற வேண்டும் என்ற நோக்குடன் இந்த விளையாட்டில் பங்குகொள்ள வேண்டும். அதுவே நல்ல உள விளையாட்டாகும்.

---

# மங்கையர்க்கு ஓர் மடல்

**அன்புசால் மங்கையரே,**

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா" என்று பாடிய புரட்சிக் கவிஞர் வாக்குக் கொப்ப பாரினிலே மங்கையராய் பிறந்த நாம் மங்கையின் மாண்பை, மாதரின் சக்தியை, பெண்ணின் பெருமையை உலகிற்கு வெளிக்கொணர்வது எம் ஒவ்வொருவர் கடமையாகும். ஒருநாட்டின் வளர்ச்சியை, நாகரீகத்தை அறியப் பல்வேறு அளவு கோல்கள் உண்டு ஆயினும் அங்குள்ள மாதரின் மாண்பே சிறந்த அளவுகோல் என்பது ஆன்றோரின் வாக்கு. "அழகுசெய்யும் அணியல்ல பெண்ணுக்கு அணிகலன் நல் ஒழுக்கமே" என்பது அறிஞர் மெனெடனரின் வாக்கு.

"அறிவுள்ள பெண் ஒரு களஞ்சியம்" என்கின்றார் ஜார்ஜ்மெடித். எனவே தங்கள் அறியாமையை நீக்கி அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். சமுதாய வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணிக்க முன்வர வேண்டும். உணவு சமைப்பது மட்டும்தான் நம் கடமையல்ல. சமுதாயத்ததைதியில் நாட்டில் மறுமலர்ச்சி சமைப்பதே நம் கடன் என உணர்ந்து செயற்பட வேண்டும். கருத்தற்ற மூடப் பழக்கவழக்கங்களை, சட்டங்களை, கொள்கைகளை வேரோடு களையவேண்டும் இன்றைய மங்கையரே நாளைய தாய்மார். எனவே மனையரட்சிக்குரிய குணங்களை நம் உடைமையாக்கிக்கொள்ள வேண்டும். வரவுக்கேற்ப செலவுசெய்து குடும்பத்தைச் சீராக நடத்தப் பழகிக்கொள்ள வேண்டும். பெண்களால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. அவர்கள் நினைத்தால் எதையும் செய்யமுடியும். எனவே எப்போதும் சிந்தித்து சரியானவற்றையே செய்துவந்தால் அவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் பெரும் சேவை செய்தவர்களாவர்.

ஆகவே, மங்கையரே, போற்றுதற்கும் பெருமைக்கும் உரிய பெண்மையை அழியவிடாது பெண்ணின் பெருமையை உலகறியச் செய்து சீருடன் வாழ்வோம் முன்வாருங்கள்.

— அ. மேரி அக்னஸ்

# "நானென்னும் தன்மை நிலை"

நானென்றும் நாமென்றும் நாங்களென்றும் நாட்டுவதும்
நீயென்ற நீங்களென்று நேர்நிறுத்திக் காட்டுவதும்
ஏனென்று கேட்பதுவும் என்னுடைய தென்பதுவும்
தேனென்றும் செந்தமிழின் செல்வாக்கார் சீர்மொழியே!

நானென்ற நாமமொன்றி நாட்டிற்கு நல்லதையே
தேனென்றும் செந்தமிழிற் செப்புகின்ற சீரேடே
மானென்று மன்னுதற்கு மானிலத்து மாந்தரெல்லாம்
ஈனங்க ளைக்களைய இங்கிதங்கள் ஈட்டுதியே!

நானென்று செப்பிநின்று நல்லதையே நாட்காட்டி
கோனென்ற கோப்புற்றுக் கொள்கைக் கொலுவிருந்தே
தானங்கள் செய்குவையே தண்டமிழார் நானேடே
மானம் மரியாதை மக்கள்தம் மாட்சியென்றே!

நானென்ற தன்மைநிலை நற்போக்கு முன்னிலைக்குக்
கூனிக் குறுகாது கூடிப்போ கூர்மொழியே
நானென்னும் நல்லுறுதி நாட்டில் நலம்பெறவே
நானென்னும் நல்லேடே நற்காப்புச் செய்குவையே!

தன்மையை முன்னிலையை சாற்றும் படர்க்கைதனை
முன்னும் இலக்கணங்கள் முத்தமிழின் பொக்கிஷமே
நன்னயமாய்க் கொள்வதினால் நானென்னும் தன்மைநிலை
பொன்மயங்கள் பூரிக்கும் பொற்பென்று கொள்ளுவமே.!

ஆணவத்தால் நானென்று ஆர்ப்பரித்துக் கூறுவது
கோணவைக்கு மென்றுசொல்லிக் கூறும் சரித்திரங்கள்
பேணுகின்ற வெற்றிமையால் பேச்சின் பெறுமதிகள்
மாணுதலே யாகி மனவுறுதி மாட்சிதரும்!

எழுதும் கருத்துகளை ஏற்கும் இதயங்களை
முழுதும் முறைநெறியால் முன்னிலைக்குக் கொண்டுவந்தே
உழுது விதைவிதைக்கும் உன்னதமார் ஒண்மைநிலை
வழுவாது செய்துநிதம் வாழியவே நானேடே!

— கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

வளர்ச்சியில் உயர்ச்சி பெற்று
வாசகர் மனதைக் கவர்ந்த
"நான்" வாழ நாம் வாழ்த்துகிறோம்.

- PHOTOGRAPHERS
- VEDIO RECORDING,
- BLOCK MAKING
- PHOTOSTAT and COLOUR PRINTING

★

# CHITRALAYA

( Air Conditioned )

18, STANLEY ROAD,
JAFFNA.

Dial : 22522

புத்தாண்டின் புதுமலராய் புதுவாழ்வை
வழிகாட்டிட நான் வளர நாம் வாழ்த்துகிறோம்

LEADING OPTICIANS

and

DENTAL TECHNICIANS

★

# S. M. FERNANDO

13, MAIN STREET,

( 1 st Cross Street Junction )

JAFFNA.

# சலனம் - சந்தர்ப்பம் - சங்கடம்

— ஜனகமகள் சிவஞானம்

இங்கிதமான பொழுது ஆனாலும் பாரதியின் மனம் மட்டும் எதை யெதையெல்லாமோ எண்ணி எண்ணிக் குழம்பிப் போனது. யன்னல் கதவுகளை அகலத் திறந்துவிட்டு உடற்புழுக்கத்தை மாற்றிக் கொண்ட அவளால் மனப்புழுக்கத்தினை அகற்றிக் கொள்ளவே முடியவில்லை. மன தின் எந்தக் கதவினைத் திறப்பது? யாரை வெளியேற்றுவது அவளுக்கே புரியவில்லை.

சிறு வயதில் நான்கு சகோதரிகளுக்கு மூத்தவளாய், ஓரளவு கஷ்ரங் களுக்குள் வாழ்ந்து பழக்கப்பட்டவள்தான் பாரதி. ஆனால் இப்படி யொரு மனக்கஷ்ரத்தை அவள் என்றுமே அனுபவித்ததில்லை.

அவளது நெருங்கிய தோழி ஒருத்தியின் வாயிலாக முதன்முதலாக கேள்விப்பட்ட பொழுது பாரதி அந்த விஷயத்தைபபற்றி அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

ஏன்...? ராஜேஸ் மீது, அவளுக்கு ஆத்மார்த்தமான அழுத்தமான நம்பிக்கை. இவையெல்லாம் பொறாமைக் கண்கொண்டு நோக்குபவர்களின் வெறும்புரளி என்றே அவள் கணித்திருந்தாள். ஆனால் அதனை அவளே நேரில் கண்ணுற்றபொழுது......? வார்த்தையில் வடிக்க முடியாதளவு வேதனைக்குள் அவள் ஆட்பட்டுப்போனாள். அந்த நம்பிக்கைத் துரோ கத்தைத் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்குத் தளர்ந்துபோன மனதிற்கு அழுவதைத்தவிர வேறொன்றையுமே செய்ய இயலவில்லை.

கோலிங் பெல் அலறுகிறது.

அவசரஅவசரமாய் எழுந்து, ஈரலித்த விழிகளைத் துடைத்துவிட்டு அகத்தினை முகம் பிரதிபலித்துவிடாதவாறு சர்வ ஜாக்கிரதையாகி வந்து கதவைத் திறக்கிறாள். அதற்குள் கோலிங் பெல் எத்தனை தரம் அலறியது என்பதனை பாரதி கணக்கில் எடுக்கவில்லை.

எவ்வளவு நேரமாய் பெல் அடிக்கிறன் உனக்கென்ன காது செவிடே இவ்வளவும் என்ன செய்தனீ?

''வந்து நித்திரையாய் போயிற்றன்''

'இந்த நேரத்திலே உனக்கென்ன நித்திரை? போய்த் தேத்தண்ணி கொண்டு வா.'

எரிந்து விழுந்த கணவன் ராஜேசுக்குத்தான் பொய் சொல்லுகிறோம் என்பது பாரதிக்கு உள்ளூரத் தெரிந்திருந்தும், ஏமாற்றுவதைவிட, பொய்யிறுப்பது ஒன்றும் பிரமாதமான விஷயமல்ல என மனம் சமா தானம் சொல்லிக்கொள்ள சமையலறைக்கு வருகிறாள் பாரதி.

தேநீரை எடுக்கவெனக் கிளாஸைக் கழுவுகையில், தவறி விழுந்து கிளாஸ் நொருங்குகிறது.

'ஏனப்பா? கிடக்கிறதெல்லாத்தையும் போட்டு நொருக்குகிறாய். ஏலா தெண்டு ஒரு சொல்லுச் சொல்லியிருந்தால் நான் தேத்தண்ணி போட்டுக் குடிச்சிருப்பனே.'

உச்சஸ்தாயியில் கத்துகிறான் ராஜேஸ்.

'எனக்கொண்டுமில்லை. நான் நல்லாய்தானிருக்கிறன்.'

'என்ன? வாய் ஒரு மாதிரி நீளுது. நான் கஷ்ரப்பட்டு உழைச்சுக் கொண்டு வந்துபோட உனக்குத் திண்டு திண்டு கொழுத்துப் போச்சுது. அந்த நேரம் என்ரை பேரன்ஸ்ஸோடை சண்டை பிடிச்சனான். எனக்கு வேக்கிங் கேளாப் பாத்துச் செய்து வையுங்கோ. அப்பதான் வாறவளுக்கு உழைப்பு, களைப்பெண்டா என்னண்டு புரியுமெண்டு சொன்னனான். அதை அவையள் கேட்டிருந்தினமெண்டால் எனக்கிண்டைக்கு ஏனிந்த கழுத்தறுப்பு.'

'அதுதான் இன்னுமொரு வேக்கிங் கேளைத் தேடுறீங்களாக்கும்.'

'பாரதி! நீ...... நீ......'

'மனுஷனுக்கு பலவீனங்கள் இருப்பது உண்மைதான். ஆனால் துரோ கம் செய்யிறேமே எண்ட மன உறுத்தல் கூடவா இல்லாமல் போயிற்றுது'

'இப்பென்ன நடந்து போச்செண்டு கூச்சல் போடுறாய்?'

'உங்களையே உயிருக்குயிராய் நம்பிக்கொண்டிருக்கிற எனக்குத் துரோகம் செய்யாதேங்கோ. தெரிஞ்சோ, தெரியாமலோ நீங்கள் செய்த தவறுகள், உங்களுக்குள்ள இன்னொருத்தியின்ரை தொடர்புகள் எல்லாத் தையும் விட்டிடுங்கோ.'

'என்னை அதிகாரம் செய்ய உனக்கு அதிகாரமில்லை. விளங்கிச்சுதே, நான் ஆம்பிள்ளை எப்பிடி வேணுமெண்டாலும் நடப்பன். இங்கை இருக்க

விரும்பினால் வாயைப் பொத்திக்கொண்டிரு. இல்லையோ போடி வெளியிலே.'

வெகு சுலபமாய், காலில் ஒட்டிக்கொண்ட கடற்கரை மணலை உதறி விடுமாற்போல் தட்டிவிட நினைக்கின்ற கணவனை நினைக்கையில் அவன் மனதின் போலித்தனம் அவள் இதயத்தினை ஆழமாய் பிறாண்டுகிறது. இது வேஷமா? அல்லது அறியாமையா? பாரதிக்கே புரியவில்லை. நெருப்பிலும், முள்ளிலும் இருப்பது போன்ற பிரமை பாரதிக்கு. அழுது அழுது வற்றிப்போன விழிகள் எந்த வகையிலும் சமாதானமுற மறுக்கின்ற மனது. இனிமேலும் ஒரு வாழ்க்கையா? என்ற வெறுப்பு. எல்லாமும் அவனை விரக்தியின் நிலைக்குத்தள்ள, தன் உடுப்புகளைச் சூட்கேஸினுள்த் திணித்தவள், ராஜேசுக்கும் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறுகிறாள் பாரதி.

எத்துணை சந்தோஷகரமான வாழ்வு இத்தனை சீக்கிரத்தில் அர்த்த மற்றுப்போகும் என்றவள் கனவிலும் நினைத்திருந்ததில்லை. திருமண மாகி எத்தனையோ தடவைகள் பிறந்தகம்போய் வந்திருக்கிறாள் பாரதி.

ஆனால் இப்படி ஒரு நிலையில் தன்னந்தனியளாய் அவள் போவது இதுதான் முதற் தடவை. வித்தியாசமான இந்த விஜயம் நிச்சயம் அவளைச் சார்ந்தவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கப்போவது உண்மை.

வெறுமனே நிஜத்தை மறைத்து போலி நாடகமாட பாரதி தயாரில்லை. தாயாருக்கும் சகோதரிகளுக்கும் அவள் உள்ளது உள்ளபடி சொல்லப் போகிறாள். அதிலாவது வேதனைச் சுமை சற்றே குறைவுறாதா? என்ற நப்பாசை அவளுக்கு.

பஸ்ஸை விட்டு இறங்கி மளமளவென தன் பிறந்து வளர்ந்த வீட்டினை நோக்கி நடக்கிறாள் பாரதி. மம்மல்ப் பொழுதானதால் அவளைப் பலருக்கு அடையாளம் தெரியாமல் போனதில் அவளுக்குச் சற்று நிம்மதி. இல்லையேல், வந்த காரணம், அதுவும் இந்த வேளையில் சூட்கேசும் கையுமாய், தன்னந்தனியளாய் புறப்பட்டு வந்த காரணத்தைக் கேட்டுப் பிடுங்குகின்ற அறிந்த, தெரிந்தவர்களுக்கு மறைக்க அவள் எத்தனையோ பொய்களைத் தேடியலைந்திருக்க வேணும்.

வீட்டின் வாசலிலே அரிக்கன் லாம்பு கண்சிமிட்டியது. தேவார பாராயணங்களை ஒப்புவிக்கின்ற அம்மாவின் குரலையும் மீறி கடைசித் தங்கை வினோபாவின் சிரிப்பொலி அவள் செவியில் வந்து மோதுகிறது. திருமணத்திற்கு முன்னால், அவளும் இதுபோலத்தானே இளஞ்சிட்டுப் போல் வாழ்ந்தாள். ஆனால் இன்றோ ஒரு சிறகிழந்த பறவையைப் போல் எத்துணை துயரங்கள்!

வறுமைகள், கஷ்டங்கள் வாட்டினுலும் எந்தக் கவலையையுமே பொருட்படுத்தாது சகோதரிகளோடு சகோதரியாய், ஒரு தாய்க்கு மகளாய் வாழ்ந்த அந்த வசந்தகாலம் இனி என்றுமே திரும்பாதுதான். என்ருலும் அந்த இனிய இளமைப் பருவம் என்றுமே மறக்கமுடியாதது என எண்ணுகையில் அவளையுமறியாமல், அவளிடமிருந்து ஏக்கப் பெருமூச் சொன்று விடைபெறுகிறது.

''வசந்தாக்கா, செல்வியக்கா, ஓடியாங்கோ'' கூச்சலிடுகிருள் விஞே.

''என்னடி? என்ன?''

''எங்கடை பெரியக்கா வந்து நிக்கிரு''

''என்னடி விஞே கனவே காண்கிருய்''

வசந்தா மட்டுமல்ல, பாரதியைக் காணும் வரை யாருமே நம்பவில்லை.

பாரதியின் கையிலிருந்து சூட்கேஸ் செல்வியின் கரம் மாறுகிறது.

''அத்தான் எங்கை? அக்கா'' செல்விதான் கேட்கிருள்.

''............!''

''அவர் பின்னலை வந்துகொண்டிருப்பார். நீ சூட்கேசைக் கொண்டு போய் வைச்சிட்டு, சாப்பாட்டுக்கு ஆயத்தப்படுத்து, போ செல்வி''

பின்னல் வந்த அம்மாவின் குரல் கேட்டு செல்வி உள்ளே போகிருள்.

''அம்மா! ...அ... அம்... அம்மா''

அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த அத்தனை துயரமும் அவளையும் மீறி வெளிப்பட்டதில் அம்மாவின் தோளில் முகத்தைப் புதைத்தவாறு விக்கி விக்கி அழுகிருள் பாரதி.

''என்னடி? ஏன் அழுருய்? என்னண்டு சொல்லன்?''

''அம்மா அவர் வரேல்லை, நா...நான் அவரை விட்டுப் பிரிஞ்சு வந்திட்டான்.''

''ஏனடி?''

அம்மாவின் ஆச்சரியத்தில் அமிழ்ந்து போய்விடவில்லை. ராஜேஷின் துரோகத்தனம், அதனைத் தட்டிக் கேட்டபொழுது அவளுக்கு அவன் சொன்ன பதில், அவளடைந்த ஏமாற்றம், யாவற்றையும் அழுகையினூடே அம்மாவுக்குச் சொல்கிருள். இந்த வடிகால்கூட இல்லாமல் போயிருந்தால்...? நினைத்துப் பார்க்கவே பாரதிக்குப் பயமாக இருந்தது. அவளைத் தவிர மற்றெல்லோருமே விக்கித்து விறைத்துப்போய் நிற்கிருர்கள்.

''அக்கா, அப்பா சாகமுதல் இருந்த காணியை எங்கள் நாலு பேருக்கும் பிரிச்சு எழுதிப் போட்டுத்தான் செத்தவர். அப்பிடி இருந்தும் எனக்கெண்டு எந்த ஆதாரமுமே இல்லாத நிலையிலை அந்தக் காணியை விக்க ஒப்புதல் குடுத்து, வித்து, உங்களுக்குக் கலியாணம் செய்தமேக்கா. அது...அ...து இப்பிடி ஒரு நிலையில் வைச்சுப் பார்க்கவா?''

வசந்தா அக்காவின் எதிர்பார்ப்புக்கள் சிதைந்துபோன நிலையில் வசந்தாவின் தோற்றுப்போன தியாகங்களின் வெறுமையின் வெளிப்பாடே அவை என்பது பாரதிக்கு நன்கு புரிந்தது.

''பாரதி! குடும்பம், வாழ்க்கை எண்டால் இதைப்போலை ஆயிரம் விஷயம் இருக்கத்தான் செய்யும். எல்லாத்தையும் பொறுத்து வாழுறதுதான் பெருமை''

''அம்மா... நீ... நீங்களேம்மா இப்பிடி எல்லாம் கதைக்கிறீங்கள்''

''பாரதி! நீ நல்லா யோசிச்சுப்பார். மூத்தவள் நீ புருஷனை விட்டிட்டு வாழாவெட்டியாய் இங்க இருக்க உனக்கு இளையதுகள் இதுகளை ஆரடி ஓமெண்டு கலியாணங் கட்டுவாங்கள். சொல்லடி பாப்பம்!''

'வந்ததும் வராததுமாய் என் அக்காவை வாசல்லை வைச்சு வெருட்டிறியள், அக்கா, நீங்கள் உள்ளுக்கு வாங்கோ. இந்தாங்கோ முதல்லை தேத்தண்ணியைக் குடியுங்கோ.'

எல்லோரையும் விலக்கி, விஜே, பாரதியை உள்ளே அழைத்துப் போய் அமர வைக்கிறாள்.

விலகி வந்திருக்கிறேம் என்றதுமே பிறந்த வீடு கூட அவளை ஒரு விலக்கப்பட்ட பொருளாய் அந்நியப்படுத்தியமை அவளுக்குள் ஆச்சரியத்தை உண்டாக்கியது. கடைசித் தங்கை விஜேவைத் தவிர யாருமே அவளுடன் முகங்கொடுத்துப் பேசத் தயாராயில்லை என்ற பொழுது பாரதியின் கவலை மேலும் விசாலித்தது.

நேரத்தின் நகர்வு அவளுக்குப் பெரிதாய்ப் படவேயில்லை. விஜேவின் வற்புறுத்தல் தாளமாட்டாதவளாய் இரவுச் சாப்பாட்டினை உண்ணுவது போலப் பாசாங்கு பண்ணி விட்டு வந்து படுக்கையில் விழுகிறாள் பாரதி. அவளுக்கு மிக அண்மையில் விஜே படுத்துக்கொள்கிறாள்.

'இந்த அம்மாதான், என் செயலை வெறுக்கிறாள் என்று பார்த்தால் இந்த செல்வி, வசந்தா இவர்களும் என் விலகிப் போகிறார்கள்?' பாரதி மனதினைக் குழப்பியது தான் மிச்சம். எதுவுமே புரியவில்லை.

'அக்கா'

'என்ன? விஜோ'

'செல்வியக்காவும், வசந்தாக்காவும் என் முறைக்கினம் என்று தானே யோசிக்கிறியள்'

'ம்...'

'காதைக் கிட்டக் கொண்டு வாங்கோ சொல்லுறன்'

'செல்வியக்கா ஒருத்தரை லவ் பண்ணுறா'

'ஆரை?'

'றஞ்சன்'

'எந்த றஞ்சன்?'

'அதுதான் உங்கடை அவற்றை தம்பி றஞ்சன்'

'ஓ'

'உங்கடை பிரச்சனையைக் காரணமாய் வைச்சு தன்ரை விருப்பம் நிறைவேறாமல் போயிடுமோ எண்டு பயப்பிடுறா'

'...'

'தன்ரை விருப்பம் நிறைவேறாமல் போனால் தான் தற்கொலை தான் செய்வேனெண்டு செல்வியக்கா வசந்தாக்காவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தா'

'என்னடி. உங்களுக்கை முணுமுணுப்பு. நேரம் போனது தெரியேல்லையே? எய் விஜோ பேசாமல் படடி'

அம்மாவின் முழக்கத்தில் விஜோ மௌனித்துப் போகிறாள்.

எல்லோரும் உறங்கிப்போன நிலையில் பாரதிக்கு உறக்கமே வரவில்லை. இருட்டின் நடுவே எழுந்து உட்கார்ந்தவள் எதையெதை எல்லாமோ நீளமாய் நினைத்துக்கொண்டு போகிறாள். படித்த அந்த நாட்கள் அவளுக்குள் வந்து போகிறது.

பிச்சை புகினும் கற்கை நன்றே என்பதற்கிணங்க அன்றைய கஷ்ர நிலையினைப் பொருட்படுத்தாது படித்து, ஒரு வேலையினை அவள் பெற்றிருப்பாளேயானால் இன்று யாருக்குமே பாரதி தலைவணங்கவேண்டி ஏற்பட்டிருக்காது. சிந்தித்து எந்த முடிவுக்குமே வரத் தோன்றாதவளாய் இடிந்து போகிறாள் அவள்.

விடிந்தும் விடியாததுமாய் எழுந்து, ஒரு சுமை இறங்கி விட்டதாய் நிம்மதியுற்ற தாய் சகோதரர்களுக்குத் தான் மேலும் ஒரு தொல்லையாய் இருக்கக் கூடாது என்ற முடிவோடு, வீட்டைவிட்டு வெளியேறுவது எனத் தீர்மானிக்கிருள் பாரதி.

புறப்படுகின்ற நேரம் வரை எங்கே போவது என்று தீர்மானிக்காத வளாய் சூட்கேசை எடுத்துக்கொண்டு வெளியேறி வீதிக்கு வருகையில், நளினியின் நினைவு வருகிறது.

770 பஸ்ஸில் ஏறிக்கொண்டவள் அவள் வீட்டின் வாசற்படியிலே நிற்கிருள். நளினி அவளை அன்போடு உள்ளே அழைத்துப்போய் அமர வைக் கிருள் அன்பான கணவன், இரு குழந்தைகள், அமைதியான வாழ்வு நளினியைப் பார்க்கின்றபொழுது அவளுக்கே பொருமையாக இருந்தது.

விடியற்காலையில் அதுவும் இந்தக்கோலத்தில் பாரதி வந்திறங்கிய விஷயத்தினை நளினி விசாரிக்கிருள். முதலில் தயங்கிஞலும் பின்னர் உண்மையினைக் கூறிமுடிக்கிருள்.

'பாரதி நீ எவ்வளவு பெரிய பிழை செய்திருக்கிருயெண்டதைக் கொஞ்சம் நினைச்சுப்பார்.'

'என்னடி நளினி சொல்லுருய்?'

'நீ உன்னுடைய ஹஸ்பண்டை விட்டுவிலகி ஓடி வந்தது அவருடைய தவறுகளை இன்னும் வலுப்படுத்திக் கொள்கிறதுக்கு எவ்வளவு தூரம் அனுசரணையாய் இருக்கப்போகு தெண்டதைக் கொஞ்சம் நினைச்சுப் பார்.'

'இல்லை, நளினி வர்க்க பேதம் காட்டி, ஆண் எண்ட மிடுக்கோடை தான் எதுவும் செய்வன் எண்டு இறுமாப்பாய் கதைக்கிறவரை நான் என்னடி செய்யமுடியும்?'

'பாரதி' பத்து மாதம் சுமந்து உயிரைக் கொடுத்துப் பெற்றெடுக்கிற குழந்தையைப் பறிகுடுத்தால் இன்னொரு குழந்தையைப் பெற்றெடுக்க லாம் ஆனுல் கணவனை இழந்திட்டால்.........?

பாரதிக்கு என்ன பதில் கூறுவதென்றே புரியவே இல்லை. 'பாரதி நீ இங்க என்னேடை தங்கினுல் எனக்குச் சுமையாய் போய் விடுவியோ எண்டு நான் நினைக்கிறனே எண்டு யோசிக்காதை. சத்தியமாய்ச் சொல்லுறன் உன்ரை சந்தோஷமான குடும்ப வாழ்வு சமாதியாயிடப்படாதே எண்டுதான் பாரதி பிரயாசப்படுறன்.'

மாலை வேளை மீண்டும் சூட்கேஷைக் கையிலெடுத்துக்கொண்டு நளினிக்குச் சொல்லிவிட்டுப் பாரதி புறப்படுகிருள்.

ராஜேஷ் வீட்டுக்கு வந்துவிட்டிருந்தான்.

'எறிஞ்ச பந்து சுவரிலே முட்டி மோதித் திரும்பவும் புறப்பட்ட இடத் துக்கே வந்திட்டுதே ஹஹ ஹஹ ஹா'

அவனின் இடக்கான பேச்சுகளுக்கு பாரதி எந்தப் பதிலுமே இறுக்க வில்லை. ஊசி நுழைந்தது போன்ற வேதனை அவள் இதயத்திற்கு,

தனக்குரிய கடமைகளில் மட்டும் அவள் தவறவே இல்லை.

இரண்டு நாட்களின் பின்னே.

வேலை முடிந்து வீடு வந்தவன். உடுப்பை மாற்றிக்கொண்டு விருந் தைக்கு வருகையில் காலில் எதுவோ மிதிபடுகிறது. சிகரட் துண்டு. அதனை யாரோ புகைத்தமைக்கு அடையாளமாய் ஆங்காங்கே சாம்பற் சிதைவுகள்.

'பாரதி'

'ம்'

'இண்டைக்கு வீட்டுக்கு ஆர் வந்தது'?

ஒருத்தருமில்லை'

உள்ளூரப் பொய் சொல்றோம் என்பது பாரதிக்குத் தெரிந்தும் என் நம்பிக்கைகளைச் சிதறடிக்க இவருக்கு, இவருக்கு......? வேதனையும், கோபமுமே அவளுக்குள் சஞ்சாரம் செய்தது.

'என்னடி இது'

அவன் காட்டிய மிகுதி சிகரட் துண்டினை நிமிர்ந்து நேராய் பார்க் கிறாள் பாரதி. அவள் எதுவுமே பேசவில்லை.

'என்ரை வீட்டிலே இருந்துகொண்டு, என்ரை உழைப்பைச் சாப்பிட் டுக்கொண்டு என்னையே பழிக்குப்பழி வாங்கிறியா?

'..........?'

'ஆரடி அவன்? சொல்லடி'

'பளார்' என்ற அறையில் கதிகலங்கிப் போகிறாள் பாரதி. மனதிலே அவளுக்கு இருந்த வலியைவிட இவனது இந்த அடி அவளுக்கொன்றும் பெரிதாய்ப்படவில்லை. விழிகளில் மட்டும் நீர் குளங்கட்டி நிற்கிறது.

'ரூஸ்கல், எனக்குத் துரோகம் செய்து கொண்டு என்ரை வீட்டிலே நீ இருக்கத்தேவையில்லை. நாளைக்கிடையிலே நீ வெளிக்கிடேல்லை. நான் வீட்டைவிட்டுப் போயிடுவன் தெரிஞ்சுதே?

மனதின் வேகத்தையும், கோபத்தையும் வெளிக்காட்டுமாற்போல் கதவினை அறைந்து சாத்திக்கொண்டு படுக்கையில் போய் விழுகிருன் ராஜேஷ்.

சமையலறைக்குள் தன்னை அடக்கிக்கொண்டு அதற்குள்ளே சுழன்று கொண்டிருந்தாள் பாரதி.

'சீ! எத்தனை? அவமானம்' என்ற உறுத்தல் ராஜேசுக்கு ஹோலிங் பெல்லின் அலறல் எழுந்து வாசற் கதவினைத் திறக்கிருன் ராஜேஷ்.

வாசலில் பாரதியின் சிநேகிதி சுலோஜனுவும் அவள் கணவனும் சில வாரங்களுக்கு முன்தான் திருமணமான புதுமணத்தம்பதிகள் இவர்கள். அவர்களின் என்கேஜ்மென்ரிற்க்கு பாரதியுடன் இவனும் போய் வந்தவன்தான். திடுமென தன் மனக்குறுகுறுப்புக்களை மறைத்துக் கொள்கிருன் ராஜேஷ்.

உள்ளுக்கு வாங்கோ, இருங்கோ.

மிஷ்ரர் ராஜேஷ் நானும் சுலோஜனுவும் பொறினுக்குப் போகப் போறம், நாளைக்குக் கொழும்புக்கு போறம்.

'ஓ'

ஈவினிங் வந்தனுங்கள் இரவு டின்னருக்கு வரவேணும் எண்டு வற்புறுத்தி உங்கடை மிஸீஸ் கேட்டதாலை தட்டிக்கழிக்க முடியாமல் வந்திருக்கிறம். உங்கடை மிஸிஸ் சொல்லேல்லையா?

ஓமோம் சொன்னவ.

பொய்யை வெகு சுலபமாய் அளந்து விட்டவன். ஆச்சரியமாய் அவனையே நோக்குகிருன் ராஜேஷ்.

சிகரட் ஒன்றினை உதட்டில் பொருத்தி, லைற்றுல் நெருப்பினை வைத்துக்கொள்கிருன் சுலோஜனுவின் கணவன்.

இதயத்தினுள்ளே மூட்டங்கட்டியிருந்த சந்தேகமென்னும் இருள் மெல்ல மெல்ல விலகுகையில், இல்லாத ஒன்றைக் கற்பனை பண்ணினேமே என்ற இலேசான வேதனை ராஜேசுக்கு.

டின்னரை முடித்துக்கொண்டு அவர்கள் போய்விட்டார்கள். பாத்திரங்களை அலசுவதில் ஈடுபடுகிருள் பாரதி வாசலோரம் நிழலாடுவது அவளுக்குப் புரிகிறது. ஆனுல் அவள் நிமிர்ந்தே பார்க்கவில்லை.

''பாரதி'' நிமிர்ந்து நோக்குகிருள் அவள். மேற்கொண்டு என்ன பேசுவது என்று தடுமாற்றம் ராஜேசுக்கு.

"உங்களுக்கே உரிமையான பொருள் விகாரப்படுத்தப்படுதே, விலகுதே எண்ட உடனே உங்கடை மனம் கொதிக்கிற மாதிரி எனக்குரிய உடமைப் பொருளுக்கும் அதேகதி ஏற்பட்டால் என்ரை மனம் என்ன பாடுபடும் எண்டதைக் கொஞ்சம் சிந்திச்சுப் பாருங்கோ.

அவள் அழவில்லை, ஆத்திரப்படவில்லை.

நியாயத்தையே வரிசைப்படுத்தினாள்.

நீங்கள் ஆம்பிளை நினைச்சால் என்னை நிராகரிச்சுப்போட்டு, இன்னொருத்தியை மட்டுமில்லை, அதற்கும் அங்காலையும் தேடிக்கொள்ளலாம். ஆனால் நான்......?

மெதுவாய் தலை குனிகிறான் ராஜேஷ்.

சத்தியமாய் சொல்லுறன், உங்களை அவமதிக்க வேணுமெண்டு நான் என்றைக்குமே நினைக்கேல்லை.

அவளை நிமிர்ந்து பார்க்கிறான் ராஜேஷ்; அவனை அண்மித்து வருகிறாள் பாரதி.

என்ரை வயித்திலை வளர்ற பிள்ளையின்ரை எதிர்காலம், ஆரோக்கியமானதாய், அவமதிப்புகள் அற்றதாய் இருக்க வேணுமெண்டுதான் நான் ஆசைப்படுறன். அப்பா சோக்குப் பேர்வழி, இரண்டு பெண்டாட்டிக்காரன் என்ற வார்த்தைகள் தாங்கிக் கொள்ளக் கூடியதா? கொஞ்சம் நினைச்சுப்பாருங்கோ.

அவளின் ஆற்றாமை, ஆதங்கம், தன் தவறுகள் எல்லாமே, அவனுக்குள் உறைந்தன.

தன்னிரு கைகளையும் அவள் தோள்மீது பதித்தவன் பாரதியை ஆழமாய் நோக்குகிறான்.

சில நிமிஷ மௌனங்கள்.

"பாரதி என்னை மன்னிச்சிடு. இனிமேல் மனசறிய உனக்குத் துரோகமோ, தவறோ நான் செய்யமாட்டன்!

ராஜேசின் மனதின் ஆழத்திலிருந்து பிறந்த அந்த வார்த்தையில் இருந்த நம்பிக்கைக் கீற்று, அவளை, இனம் புரியாத சந்தோஷத்தில் ஆட்படுத்தியது.

நீலவானத்துப் பௌர்ணமி நிலவு வெளியே ஒளி சிந்திக்கொண்டிருந்தது.

( கற்பனை )



# வாசகர் பூங்கா

## பல்லாண்டு வாழ்க!

சூரியனைக் கண்டு தாமரை மலரும்
சந்திரனைக் கண்டு ஆம்பல் சிரிக்கும்
''நானைக்'' கண்டு நாம் மகிழ்கின்றோம்.
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்!

— தே. டக்சைனி, ஜனிதா, அ. புனிதசோதி
குழமங்கால்.

## வாடா மகனே!

புத்துயிர் ஊட்டும் உன்
புதுமணப் பொழிவால்
பித்தான எனக்கு நீ
சொத்தாக மாறி
மாதாந்தம் நீயே — என்
மடிமீது தவழ
தாலாட்டுப் பாடி
தாயாகும் எந்தன்
சேயாக நீயும்
சிரித்தோடி வாடா!

— சுப்பிரமணியம் எலிசா, நெடுங்கேணி.

## சுவைத்த மலர்!

''நான்'' என்னும் இருதிங்கள் ஓரிதழ்களை
பலமுறை படித்துச் சுவைத்ததுண்டு ''நான்''
இதழுக்கு ஆக்கம் எழுத நினைத்ததுண்டு.
ஆனால் என் தாழ்வு மனம் எனக்கு இடம் தரவில்லை.
எப்படியும் ஆக்கம் எழுதியனுப்ப வேண்டும் என
எதிர்பார்த்தேன்: முடியவில்லை. உன் ''தாழ்வு மனப்
பான்மை'' எனும் கருக்கொண்ட மலர் என்
எதிர்பார்ப்பை நிறைவேற்றிவிட்டது. — புஸ்பா பழனி, நெடுந்தீவு — 3

**"நானி"ற்கு ஒரு பாமாலை!**

மலரிதனை "நான்" எடுத்து
மாலைதனை "நான்" கோர்த்து
பாங்குடனே குழலிசைத்து
நற்றமிழில் சொல்லெடுத்து
புன்னகையுடன் "நான்" மலர்ந்து
மணம் வீசும் "நான்" இற்கு
எனது நல் வாழ்த்துக்கள்!

— வசந்தசோதி, குழமங்கால்

**ஈர் ஆறு "நான்" வேண்டும்!**

எதிர்பார்ப்புக்கள் எனும் தலைப்பில்
எதிர்பார்புக்களின் எண்ணிக்கைகளை
இனிய நல் தொகுப்புக்களில்
இரத்தினச் சுருக்கமாய்
எழுதி விட்ட "நான்" இற்கு
எதிர் வரும் புத்தாண்டில்
ஈர் மூன்று "நான்" வேண்டாம்
ஈர் ஆறு "நான்" வேண்டும்
என வேண்டுகிறோம்.

— F. மெலானி, R. து[illegible] காவலூர்.

---

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் - 24

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | | பரிசு பெறுபவர் |
|---|---|---|---|---|
| 4. | திறமை | 2. | மிதுன | நித்தியகல்யாணி தியாகராஜா |
| 7. | புதுவருடம் | 4. | திருமணம் | எழாலை மேற்கு |
| 13. | மன்னர் | 6. | மையம் | சுன்னாகம். |
| 21. | மணம் | 7. | புன்னகை | |
| 27. | திக்கம் | 9. | வர்க்கம் | பரிசு வழங்குபவர் |
| 32. | செக் | 23. | மதில் | கமலா இளங்கோவன் |
| 35. | மைல் | 30. | மைந் | குருநகர். |

---

## கருத்துக் குவியல் இல. 41

பெண் உரிமைக்கு "ஒரு விமர்சனம் கதையாகிறது" என்ற கதையின் முடிவு சரியானதா?

உங்கள் கருத்துக்களை 10–2–86 க்கு முன்பு அனுப்பிவையுங்கள்.

---

☞ 86 ஆம் ஆண்டுக்கான உங்கள் சந்தாக்களை ரூபா 15/– செலுத்தி புதுப்பித்துக்கொள்ளுங்கள். புத்தாண்டு பொங்கல் பரிசாக உங்கள் நண்பர்கள் பெயரிலும் ஒரு சந்தாவை ஆரம்பியுங்கள்.

"NAAN" Psychological Magazine January — February 1986
O. M. I. Seminary, Colombuthurai.

*Enjoy (1986)*

*with*

**Thollagetty Proudcts**

We wish our patrons
well wishers
and
customers

*A Happy and Joyful*

**1986**

# JOE EGERTON

Zenith Marketing
and
Advertising Systems

JAFFNA.
Sri Lanka.

We lead other's follow.

*Enjoy (1986)*

*with*

**Thollagetty Proudcts**

We wish our patrons
well wishers
and
customers

*A Happy and Joyful*
**1986**

# JOE EGERTON

Zenith Marketing
and
Advertising Systems

**JAFFNA.**
Sri Lanka.

We lead other's follow.